விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

அன்பு வாசகர்களே...
சிவல்புரி சிங்காரம் எழுதும்
ராகு - கேது பெயர்ச்சி பலன்கள்
நாளை முதல் உங்கள் வலம்புரியில்...

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 ஆடி 10 புதன்கிழமை (26.07.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 219

# சுவிஸ்குமார் தப்புவதற்கு அரசியல்வாதி உதவினாரா?

## காணொளியை ஆராய நீதிமன்று உத்தரவு

**(யாழ்ப்பாணம்) புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் பிரதான சந்தேக நபரான சுவிஸ்குமாரை அரசியல்வாதியொருவர் தப்பிக்க வைத்துள்ளார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து அதற்கான வீடியோ ஆதாரம் ஒன்றை வடக்கு மாகாண முன்னாள் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க சார்பில் ஆஜராகி இருந்த சட்டத்தரணிகள் ஊர்காவற்றுறை நீதவான் முன்னிலையில் குற்றப்புலனாய்வு துறையினரிடம் கையளித்துள்ளனர்.**

இதனை அடுத்து குறித்த காணொளி உண்மையானதா? அவ்வாறு தப்பிக்க வைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதா? என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப்புலனாய்வு துறையினருக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியாவின் படுகொலை வழக்கின் சந்தேகநபரான சுவிஸ்குமாரை தப்பிக்க வைக்க முயற்சித்ததாக கூறப்பட்டு.

வடக்கு மாகாணத்தின் முன்னாள் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க கைது செய்யப்பட்டு, நேற்றைய தினம் 23

## மோ.சைக்கிள் மோதி மாணவன் படுகாயம்

(கோப்பாய்)

பலாலி வீதி உரும்பிராய் சந்திக்கு அண்மையாக இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பாடசாலை மாணவன் ஒருவன் படுகாயமடைந்துள்ளான். இச்சம்பவம் நேற்று நண்பகல் 12.30 24

## குளவித் தாக்குதல்; 12 பேர் காயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இலங்கை வங்கியில் வைத்து குளவிக் கொட்டுத் தாக்குதலுக்கு உள்ளாகி 12 பேர் காயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். 24

## ஜனாதிபதி - பிரதமர் இணைந்து மகிழ்வு



24

“சுடச் சொன்னார்; நான் சுட்டேன்”



## பிரதான சந்தேக நபர் பொலிஸில் சரணடைவு

### வாக்குமூலத்தில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் மீது கடந்த சனிக்கிழமை யாழ்.நல்லூர் பின் வீதியில் வைத்து துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட சூத்திரதாரி நேற்றைய தினம் காலை யாழ் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

சரணடைந்த குறித்த நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஷ்தரனுடைய வாசஸ்தலத்தில் முற்படுத்திய போது. 24

## சிங்களவரின் பணியில் நம்பிக்கையுள்ளது - சி.வி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நல்லூரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் மரணமடைந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் சரத் பிரேமச்சந்திரவின் உடலம் வைக்கப்பட் டுள்ள சிலாபம் இல்லத்துக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் நேரில் சென்று இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதன் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிட்ட அவர், இவ்வாறான ஒருவருக்கு மதிப்பளிக்க வேண்டும். அதனால்தான் தாம் இவ்வளவு தூரம் வந்ததாகவும்,

இதன் பின்னர் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமலிருப்பதை பார்த்துக்கொள்ள வேண்டும். பொலிஸ் பணி எவ்வளவு கடினமானது என்பதை இத 23

புலிகளுக்கு உறுப்பினரை சேர்த்தார்

## பல்கலை விரிவுரையாளருக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை

(வவுனியா)

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு பெண் ஒருவரை கடத்திச் சென்ற குற்றத்திற்காக புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளியும், தற்போது யாழ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பணியாற்றுபவருமான க.கண்ணதாஸ் என்பவருக்கு ஆயுட்கால சிறைத்தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தீர்ப்பளித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

2007 ஆம் ஆண்டு ஜனவரி காலப்பகுதியில் கிளிநொச்சியில் வைத்து விஜயபாலன் மஞ்சுளா என்ற பெண்ணை விடு 23

## டி.ஐ.ஜி ஜயசிங்கவுக்கு ஒகஸ்ட் 8 வரை மறியல்




(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியாக அறிவிக்கப்ப 23

## பெற்றோலியம் தொடர்ந்தும் பகிஷ்கரிப்பு!

(கொழும்பு)

நேற்று மாலை நடைபெற்ற கலந்துரையாடலில் நியாயமான தீர்வு கிடைக்காமையினால் பெற்றோலிய தொழிற்சங்கங்களின் ஒன்றியம் தொடர்ந்து பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளருடன் நடைபெற்ற கலந்துரையாட 23

## உண்மையான நல்லிணக்கம் சம்பந்தன் வலியுறுத்தல்

(கொழும்பு)

காணாமல்போன ஆட்களின் குடும்ப உறவினர்களது நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதே உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அடிப்படையானது என எதிர்க்கட்சித் தலைவர் 23

## அதிகாரத்தை பகிரும் யாப்பு ரணிலின் விருப்பம் இதுவே!

### - விக்கிரமபாகு கருணாரத்ன




(கொழும்பு)

நாட்டில் இனவாதத்தை ஒழித்து அதிகாரங்களை பகிர்ந்து அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய யாப்பு ஒன்றினை உருவாக்குவதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமென நவசமச [illegible]

## உயிரிழந்த பொலிஸாரின் இறுதிக்கிரியை இன்று

(சிலாபம்)

யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்து பின்னர் உயிரிழந்த மெய்ப்பாதுகாவலர் ஹேமச்சந்திரவின் இறுதிக் கிரியைகள் இன்று சிலாபத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த சனிக்கிழமை மாலை நல்லூர் பின்வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவர் உயிரிழந்த நிலையில், மற்றையவர் தோள்பட்டையில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தார். 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெலிக்கடை படுகொலை நினைவேந்தல் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடை சிறைச்சாலை படுகொலையின் 34ஆம் ஆண்டு நினைவேந்தலும், தமிழ்த் தேசிய வீரர்கள் தினமும் நேற்றைய தினம் யாழ்.நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பின்னால் உள்ள தியாகதீபம் திலீபனின் நினைவு தூபியில் மாலை 5 மணிக்கு றெலோ அமைப்பினால் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் யாழ். திருநெல்வேலி பகுதியில் தமிழீழ விடுதலை புலிகள் இலங்கை இராணுவத்தின் மீது மேற்கொண்ட தாக்குதலில் 13 இராணுவத்தினர் உயிரிழந்ததை தொடர்ந்து இனக் கலவரம் மூண்டிருந்தது. இந்த கலவரத்தின் தொடர்ச்சியாக வெலிக்கடை சிறைச்சாலையில் இருந்த குட்டிமணி, தங்கத்துரை ஜெகன் உள்ளிட்ட 53 வரையான போராளிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

மேலும் நாடு முழுவதுமான சுமார் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களும் படுகொலை செய்யப்பட்டனர். இவர்களுடைய நினைவாக 34ஆவது வெலிக்கடை சிறைச்சாலை படுகொலை நினைவு தினம் மற்றும் 1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தில் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் மற்றும் சகல இயக்கங்களையும் சேர்ந்த போராளிகள் நினைவாக தமிழ்த் தேசிய வீரர்கள் தினமும் நேற்றைய தினம் யாழ்.நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பின்னால் உள்ள தியாகி திலீபனின் நினைவு தூபியில் நடைபெற்றது.

இந்நினைவேந்தல் நிகழ்வில் வட மாகாண மகளிர் விவகார அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், அ.புவனேஸ்வரன் ஆகியோரும் பொது மக்களும் கலந்து கொண்டனர். இந் நினைவேந்தல் நிகழ்வு தொடர்ச்சியாக திருகோணமலை மாவட்டம் மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் நடைபெறவுள்ளது. (மு-4)

# இலங்கைக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுப்போம்

## பிரி.நாடாளுமன்ற உறுப்பினர்

(கொழும்பு)

மனித உரிமைகள் விவகாரம் தொடர்பாக தாம் இலங்கைக்குத் தொடர்ந்து அழுத்தங்களைக் கொடுக்கப் போவதாக, பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் போல் ஸ்கல்லி தெரிவித்துள்ளார்.

தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள அவர், இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான கரிசனைகள் இன்னமும் நீடிப்பதாகவும், அனைத்துலக அளவில் இந்த விவகாரத்தை தாம் தொடர்ந்து எழுப்பவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

பிரித்தானியாவில் உள்ள தமிழ்ச் சமூகத்தின் நலன்களுக்கு நான் ஆதரவு அளிப்பேன். அதேவேளை, தமிழர்களுக்கான அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழு பிரித்தானிய நாடாளுமன்றத்திலும், பிரசெல்சிலும், ஜெனிவாவிலும், தொடர்ந்து இந்த விவகாரத்தை எழுப்பும்.

இலங்கையில் செயல்முறைகள் மெதுவாகவே இடம்பெறுவதாகவும், மனிதஉரிமை கரிசனைகள் தொடர்வதாகவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவை ஏற்றுக் கொண்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(மு-11)


60வது பிறந்த நாள் வாழ்த்தும் சேவை நலன் பாராட்டும்

Best Wishes

திரு.வைரவன் கதிரமலை
(சமூக சேவைகள் அலுவலர்)



அரும்பணிகள் பல ஆற்றி
நேர்மைக்கோர் உத்தமனாய்
கடமையிலே கண்ணியமாய்
ஏழைகள் துயர் துடைத்தவராய்
28 ஆண்டுகள் நற்பணியாற்றி
அகவை அறுபதில்
சேவையின் நிறைவைப்பெற்ற நிறைவுடன்
பிறந்த நாளைக் கொண்டாடும் எமது நண்பரின்
எதிர்காலம் ஒளிமயமானதாக அமைய வாழ்த்தும்
அ.சற்குணதாஸ் J.P
த.ஜெயதாஸ் G.S குடும்பத்தினர்
மு/புதுக்குடியிருப்பு
(கு-9168)



கண்ணீர் அஞ்சலி

அமரர் அந்தோனிப்பிள்ளை
ஜெயபாரதிதேவி
தோற்றம்:-10-06-1952
மறைவு:-24-07-2017



எமது கல்லூரியின் சகோதரத்துவ உறுப்பினர்களும்
ஆசிரியர்களுமான திருமதி பிரகலாதன் ஜெசிக்கா
அவர்களின் தாயாரும் திரு.சு.பிரகலாதனின் அன்பு
மாமியாருமான அமரர் திருமதி அந்தோனிப்பிள்ளை
ஜெயபாரதிதேவி அவர்கள் 24.07.2017
அன்று இறைபதமடைந்த செய்தியறிந்து
ஆழ்ந்த துயர் அடைவதோடு அவரின் பிரிவால்
துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(சி-9170)
ஆசிரியர் சகோதரத்துவம்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி


# மகிந்த ராஜபக்ஷ ஏன் முன்கூட்டியே தேர்தலை நடத்தினார்?

## சாந்த பண்டார விளக்கம்

(கொழும்பு)

இரண்டு வருடங்கள் ஆட்சிக்காலம் இருந்த போதிலும், முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒன்றும் முட்டாள் கிடையாது என்று ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவிக்கின்றது.

இவ்வாறு தேர்தலை நடத்தியிருக்கா விட்டால் இந்த ஆண்டில் தேர்தல் நடத்தப்பட்டிருக்க வேண்டும் என்று தெரிவித்த சுதந்திரக் கட்சியின் இளைஞர் அணித் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சாந்த பண்டார, 58 இலட்சமல்ல, 38 இலட்சம் வாக்குகளேனும் அவருக்கு கிடைத்திருக்காது என்றும் கூறினார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நேற்றைய தினம் நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரண்டு வருடங்கள் இன்னும் ஆட்சியதிகாரம் இருந்தபோதிலும், ஜனாதிபதி தேர்தலை முன்கூட்டியே வைத்தமை பிழையான தீர்மானம் என்று சிலர் கூறுகின்றனர். மகிந்த ராஜபக்ஷ என்பவர் முட்டாள் அல்ல. பொருளாதார நெருக்கடி, பாரிய கடன் என்பவற்றை தீர்ப்பதற்கு மேலும் இரண்டு வருடங்களை எதிர்கொள்ள முடியாது. மறுபக்கம் மனித உரிமைகள் சவால்களுக்கும் முகம்கொடுக்க முடியாதிருந்தது. ஸ்திரமற்ற நிலையில் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்களின் பிரச்சினைகள் ஓரிரண்டு வருடங்களுக்குப் பின்னரே எழ ஆரம்பிக்கும். 2017ஆம் ஆண்டிலேயே ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அவர் பிழையான எதிர்பார்ப்புடன் இரண்டு வருட ஆட்சிக்காலத்துக்கு முன்னரே தேர்தலுக்கு சென்றார் என்பது கிடையாது. அவர் இப்போதும் ஆட்சியில் இருந்திருந்தால் 58 இலட்சம் அல்ல, 38 இலட்சம் வாக்குகளாவது கிடைத்திருக்காது. அவற்றை அறிந்துகொண்டே மகிந்த ராஜபக்ஷ தேர்தலுக்குச் சென்றார். எனவே புதிய அரசாங்கம் ஆட்சிக்குவந்து 2 வருடங்களாகின்ற நிலையில் இதை அவர் செய்தார், இவர் செய்தார் எனக் கூறாமல் பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்றார். (மு-11)

# இராணுவ வீரரை கொலை செய்த இராணுவ வீரருக்கு 2 வருட சிறை

## வவுனியா மேல் நீதிமன்றம் தீர்ப்பு

(வவுனியா)

வவுனியா பம்பைமடு இராணுவ முகாமில் இராணுவ வீரரொருவரை கொலை செய்த குற்றத்திற்காக இராணுவ வீரருக்கு இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கி வவுனியா மேல் நீதிமன்றத்தால் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

2011ஆம் ஆண்டு யூலை 20ஆம் திகதி அன்று வவுனியா பம்பைமடு இராணுவ முகாமில் வைத்து குமார பண்டார என்பவரை கொலை செய்தது தொடர்பாக 2011ஆம் ஆண்டு முதியான்சலாகே தனுஸ்க பண்டார என்ற எதிரி கைது செய்யப்பட்டு வவுனியா நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு ஆரம்ப கட்ட விசாரணைகள் இடம்பெற்றிருந்தது.

2016.10.05 அன்று சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குறிப்பிட்ட எதிரிக்கு எதிராக கோப்ரல் நிரஞ்சன் குமார பண்டார என்பவருக்கு மரணத்தை விளைவித்ததற்காக குற்றம் சாட்டப்பட்டு வவுனியா மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இவ் எதிரி இராணுவ உத்தியோகத்தர் ஆவார்.

2011.06.20ஆம் திகதியன்று பம்பைமடு இராணுவ முகாமில் இராணுவ உத்தியோகத்தர்களின் ஆண்டு பூர்த்திவிழா "பட்டாலியன் பார்ட்டி" இடம்பெற்றுள்ளது. அன்றைய தினம் இந்த முகாமிலே இரவு பகலாக கலை நிகழ்ச்சிகளும் இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றுள்ளது.

இரவு வேளை உணவு குடிபானங்களும் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட எதிரியும் இறந்த நபரும் சம்பவ தினத்தில் மது போதையில் இருந்துள்ளனர். அன்றைய தினம் அதிகாலை 3.30 தொடக்கம் 4 மணியளவில் இந்த எதிரிக்கும் இறந்த நபருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அந்த வாய்த்தர்க்கம் காரணமாக இறந்த நபர் இந்த எதிரியை தாக்கியுள்ளதாகவும் இந்த எதிரி இறந்த நபரை தாக்கியுள்ளதாகவும் சாட்சியமளிக்கப்பட்டுள்ளது. இவ் வழக்கு தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றில் விசாரணைகள் இடம்பெற்று வழக்கு தொடுநர் தரப்பில் பம்பைமடு இராணுவ முகாம் இராணுவ உத்தியோகத்தர்களால் சாட்சியம் வழங்கியதோடு எதிரியும் சாட்சியமளித்திருந்தார்.

எதிரியின் சாட்சியத்தில் தான் குறிப்பிட்ட நிரஞ்சன் குமார பண்டார தன்னை தாக்கிய தன் [illegible] அவரின் பிடியில் இருந்து [illegible] தாக்கிவிட்டு ஓடியதாக சாட்சியமளித்திருந்தார்.

அதன் பின்னர் இவ் வழக்கானது தீர்ப்புக்காக மேல் நீதி மன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் நியமிக்கப்பட்டிருந்தார்.

13.07.2017ஆம் திகதி அன்று தீர்ப்புக்காக அழைக்கப்பட்டவேளை நீதிபதி தனது தீர்ப்பில் இந்த எதிரிக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டு சாட்டப்பட்டிருந்தாலும் இந்த சம்பவம் இடம்பெறும் வேளை இந்த எதிரியும் இறநத நபரும் குடிபோதையில் இருந்ததாகவும் தெரிவித்து இந்த எதிரிக்கு ஏற்கெனவே இந்த நபரை கொலை செய்யவேண்டும் என்ற எண்ணம் இருக்கவில்லை என்றும் அவ்வேளையில் ஏற்பட்ட பியர் சம்பந்தமான சண்டை காரணமாகவே இந்த எதிரியினால் குறித்த கோப்ரல் நிரஞ்சன் குமார பண்டார என்பவரை தாக்கி இறந்துள்ளார் என்பதனை சுட்டிக்காட்டி குற்றவாளியாக கண்டு நேற்றையதினம் தண்டனை தீர்ப்புக்காக ஒத்திவைக்கப்பட்டது.

நேற்றையதினம் இவ்வழக்கானது நீதிமன்றில் அழைக்கப்பட்டு இந்த எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனையும் ஒரு இலட்சம் ரூபா நஷ்டஈடும் 1000 ரூபா தண்டப்பணமும் விதித்து வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தீர்ப்பளித்திருந்தார்.

வழக்கு தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் வழக்கை நெறிப்படுத்தியிருந்தார். (மு-250)


WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(C-9159)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com



ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு
10 நாள் ஊர்க்கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு உண்டு. மற்றும் கோழிக் கூடுகளும் விற்பனைக்கு உண்டு.
0772453673
(9925)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணைகள் ஆரம்பம்

(கரடியனாறு)

மட்டக்களப்பு-கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முந்தன் குமாரவெளி கிராமப் பகுதியில் விசேட அதிரடிப் படையினர் துப்பாக்கிச்சூடு நடத்திய போது தப்பிச் செல்ல முற்பட்ட ஒருவர் ஆற்றில் குதித்த நிலையில் உயிரிழந்துள்ளதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் சிறப்பு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுமித் எதிரிசிங்கவின் கீழ் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜாகொட ஆரச்சியின் நேரடி மேற்பார்வையில் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் உயிரிழந்த இளைஞனின் சடலம் மீதான பிரேத பரிசோதனையும் மரண விசாரணையும் இடம்பெறவுள்ள நிலையில். அதனைத் தொடர்ந்து. குறித்த பொலிஸ் விசாரணைகள் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்த்தப்படும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் ருவான் குணசேகர தெரிவித்தார். சட்டவிரோத மணல் ஏற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவர்களை கைது செய்ய விசேட அதிரடிப் படையினர் சென்று எச்சரிக்கை விடுத்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட போது இரு இளைஞர்கள் ஆற்றில் பாய்ந்துள்ளனர்.

குறித்த இரு இளைஞர்களும் சகோதரர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இருவரும் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட கொம்மாந்துறை பகுதியை சேர்ந்தவர்களாவர். இதில் எஸ்.மதுஷன் (வயது-17) என்ற இளைஞர் உயிரிழந்ததாகவும், காயமடைந்தவர் எஸ்.கிருஷாந்தன் (வயது-18) எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் குறித்த பகுதியில் விசேட அதிரடிப் படையினருக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் விசேட அதிரடிப் படையினர் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். (இ-7)

## அம்பாந்தோட்டை துறைமுகத்தை வழங்கும் ஒப்பந்தத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்திடம் குத்தகைக்கு வழங்கும் திருத்த உடன்படிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறித்த பிரேரணை நேற்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. (இ-7)

## சாதாரண மக்களின் பாதுகாப்பு குறித்து பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளன

### கிழக்கு முதலமைச்சர் கவலை

நாட்டின் நீதித்துறைக் கட்டமைப்பின் பாதுகாவலர்களான நீதிபதிகளையோ அவர்களது பாதுகாப்புத் தரப்பினரையோ இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் நாட்டின் சாதாரண பிரஜைகளின் பாதுகாப்பு குறித்து பல்வேறு சந்தேகங்களை தோற்றுவிப்பதாக கிழக்கு முதலமைச்சர் நஷீர் அஹமட் தெரிவித்துள்ளார்.



யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோக சம்பவம் குறித்து கருத்து தெரிவிக்கும் போதே கிழக்கு மாகாண முதலமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலரான பொலிஸ் உத்தியோகத்தரின் மரணம் தொடர்பில் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் இந்த சம்பவம் தொடர்பில் தனது கடுமையான கண்டனத்தையும் தெரிவிக்கின்றேன் என தெரிவித்துள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் பின்னால் பாரிய திட்டமிடல்கள் இருப்பின் அதன் பின்னணியில் உள்ளவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்த சம்பவம் தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கை இனிமேல் நாட்டின் நீதித்துறைக் கட்டமைப்புக்கு அச்சுறுத்தல் விடுக்க எண்ணும் எவருக்கும் எச்சரிக்கையாக அமைய வேண்டும் எனவும் இதன் மூலம் நாட்டில் வாழும் சாதாரண மக்களுக்கும் தம் பாதுகாப்பு குறித்து ஒரு நம்பிக்கை பிறக்கும் என்பதுடன் இந்த சம்பவம் சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளமையால் சர்வதேச ரீதியிலும் இலங்கையின் சட்டம் ஒழுங்கு குறித்து சர்வதேச ரீதியிலும் சிறந்த தோற்றப்பாட்டை உருவாக்கலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## நீதிபதியை இலக்கு வைத்து நடந்த துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து யாழ்.செயலகம் முன் போராட்டம்








யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியனை இலக்கு வைத்து நல்லூர் வீதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தைக் கண்டித்து வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்றைய தினம் யாழ். மாவட்ட செயலக முன்றலில் முன்னெடுக்கப்பட்டது.

(படங்கள்:-பொ.சோபிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய அணிகள் மோதும் முதல் டெஸ்ட் இன்று காலியில் ஆரம்பம்



இந்தியா - இலங்கை அணிகள் மோதும முதல் டெஸ்ட போட்டி காலி மைதானத்தில் இன்று தொடங்கு கிறது.

வராட் ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டி மற்றும் ஒரே ஒரு 20 ஓவர் போட்டிகளில் விளையர்டுவதற்காக இலங்கை வந்துள்ளது.

இந்திய - இலங்கை அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி காலியில் இன்று ஆரம்பமாகிறது.

இந்திய அணி கடைசியாக விளையாடிய 7 டெஸ்ட் தொடரையும் கைப்பற்றி இருந்தது. இதனால் இந்த சாதனையை விராட் ஹோலி அணி தொடர்ந்து நீடிக்க செய்யுமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2014-15 ஆண்டில் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக கடைசியாக இந்திய அணி டெஸ்ட் தொடரை இழந்தது. அதன் பிறகு 8 டெஸ்ட் தொடரில் ஆடிவிட்டது.

ஆனால் தொடரை இழக்காமல் சிறப்பாக ஆடி வருகிறது. இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் இதே நிலைமை நீடிக்குமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணி கடைசியாக 2015ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் இலங்கை மண்ணில் டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்த டெஸ்ட் தொடரை இந்தியா 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதனால் தற்போது மிகுந்த நம்பிக்கையுடன் விளையாடும்.

தொடக்க வீரர் ராகுல் காயம் காரணமாக இன்றைய டெஸ்டில் ஆடமாட்டார். ஏற்கெனவே முரளி விஜய் காயத்தால் விலகி இருந்தார். இதனால் தவானும் தமிழக வீரர் அபினவ் முகுந்தும் தொடக்க வீரர்களாக ஆடுவார்கள். அணித் தலைவர் விராட் ஹோலி நல்ல நிலையில் இருப்பதால் இந்த டெஸ்ட் தொடரில் முத்திரை பதிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2 நாள் பயிற்சி ஆட்டத்தை இந்திய வீரர்கள் சிறப்பாக பயன்படுத்திக் கொண்டனர்.

இந்திய அணியின் முன்னணி சுழற் பந்து வீரர் அஸ்வினுக்கு இன்றைய போட்டி 50ஆவது டெஸ்ட் ஆகும். அவர் 49 டெஸ்டில் விளையாடி 275 விக்கெட்டுகளை கைப்பற்றி உள்ளார்.

இந்த டெஸ்ட் தொடரில் அவர் 300 விக்கெட்டை தொடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு அவருக்கு இன்னும் 25 விக்கெட்டுக்கள் தேவை.

இலங்கை அணியின் தலைவர் சண்டிமல் காயம் காரணமாக விளையாடாததால் இன்றைய டெஸ்ட் போட்டிக்கு ஹேரத் தலைவராக பணியாற்றுவார்.

இன்றைய டெஸ்ட் இலங்கை நேரப்படி காலை 10 மணிக்கு தொடங்குகிறது.

ஸ்டார் ஸ்போர்ட்ஸ் டெலிவிசனில் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகிறது.



இரு அணி வீரர்கள் விபரம்:

**இந்தியா:** விராட் ஹோலி (அணித் தலைவர்), தவான், அபினவ் முகுந்த், புஜாரா, ரகானே, ரோகித் சர்மா, ஜடேஜா, அஸ்வின், விருத்திமான் சகா, இஷாந்த் சர்மா, உமேஷ் யாதவ், ஹர்த்திக் பாண்டியா, புவனேஸ்வர் குமார், மொஹமட் ஷமி, குல்தீப் யாதவ், ராகுல்.

**இலங்கை:** ஹேரத் (அணித் தலைவர்), உபுல் தரங்க, கருணாரத்ன, குஷல் மெண்டீஸ், அஞ்சலோ மத்யூஸ், ஆஸ்லே குணரத்ன, டிக்வெல, தனஞ்ஜெய, டி சில்வா, தனுஷ்கா குணரத்ன, தில்ருவன், பெரேரா, சுராங்க லக்மல், லகிரு குமார, புஷ்பக்குமார, நுவன் பிரதீப்.

# ரியல் மட்ரிட் அணியில் நீடிக்கிறேன்

## உறுதிப்படுத்தினார் ரொனால்டோ



ரியல் மாட்ரிட் அணியில் நீடிக்கிறேன் என்ற கிறிஸ்டியானோ ரொனால்டோ அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளார். இதனால் வேறுஅணிக்கு மாறுவார் என்ற வதந்தி முடிவுக்கு வந்துள்ளது.

போர்ச்சுக்கல் நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டியானோ ரொனால்டோ உலகின் தலைசிறந்த கால்பந்து வீரராக திகழ்ந்து வருகிறார். இவர் ஸ்பெயின் நாட்டின் முன்னணி கிளப்பான ரியல் மாட்ரிட் அணிக்காக விளையாடி வருகிறார்.

இவரின் சிறப்பான ஆட்டத்தால் ரியல் மட்ரிட் சம்பியன்ஸ் டிராபி மற்றும் லா லிகா தொடரைக் கைப்பற்றி அசத்தியது. வாரத்திற்கு சுமார் ஒன்றரை கோடி ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கும் ரொனால்டோ, அதோடு விளம்பரங்கள் மூலம் கோடிக்கணக்கில் சம்பாதித்து வருகிறார். கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் கிறிஸ்டியானோ ரொனால்டோ சரியாக வரி செலுத்தவில்லை என்று குற்றம்சாட் டப்பட்டது.

இதுகுறித்து விசாரணைக்கு ஆஜராகும்படி ஸ்பெயின் நீதிமன்றம் ரொனால்டோவிற்கு சம்மன் அனுப்பியது. இதனால் கிறிஸ்டியானோ ரொனால்டோ அதிருப்தியடைந்தார். அத்துடன் ரியல் மாட்ரிட் அணியில் இருந்த விலகப்போவதாக தெரிவித்தார்.

ரியல் மாட்ரிட் அணியில் இருந்து விலகுவதாக ரொனால்டோ தெரிவித்ததும், மான்செஸ்டர் யுனைடெட், பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணிகள் அவருக்கு வலை விரித்தன. இதில் மான்செஸ்டர் யுனைடெட் அணி முன்னணியில் இருந்தது. ரியல் மாட்ரிட் அணிக்கு முன்பாக ரொனால்டோ மான் செஸ்டர் அணிக்காக விளையாடி யவர். ரொனா ல்டோ வை இழுத்து விடலாம் என்ற நம்பிக்கையில் இருந்த மான்செஸ்டர் யுனைடெட் மற்ற வீரர்களை ஒப் பந்தம் செய்வதில் தாமதம் காட்டியது.

இந்நிலையில் தான் ரியல் மாட்ரிட் அணியில் நீடிப்பதாக ரொனால்டோ கூறியுள்ளார். இதுகுறித்து ஒரு பத்திரிகைக்கு பேட்டி யளித்த ரொனால்டோ "கடந்த வரு டம் என்னுடைய கிளப் முக்கியமான டிராபிகளை வென்றது மிகவும் சிறப்பானது. நான் அதை தனிப்பட்ட டிராபி யாகத்தான் விரும்புகிறேன். அதை திரும்பவும் வென்றால் மிகவும் சிறப்பானதாக இருக்கும்.

ஒவ்வொரு வருடமும் கடுமையாக உழைக்க வேண்டும். நான் அதை தொடர்ந்து செய்வேன். கால் பந்து என்னுடைய வாழ்க்கை. அது தான் என்னுடைய விருப்பம்" என்றார்.

## அமெரிக்க ஓபன் டென்னிஸ்

# ஜோகோவிச் விளையாடுவது சந்கேம்



முன்னாள் நம்பர் ஒன் டென்னிஸ் வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் அமெரிக்க ஓபனில் விளையாடுவது சந்தேகம் எனக் கூறப்படுகிறது.

முன்னாள் நம்பர் ஒன் டென்னிஸ் வீரர் செர்பியாவின் நோவக் ஜோகோவிச். பிரேசிலில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடருக்கு முன்பு வரை டென்னிஸில் ஆதிக்கம் செலுத்தி வந்தார். அதன்பின் அவரது ஆட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டது.

சமீபத்தில் இங்கிலாந்தில் நடைபெற்ற விம்பிள்டன் டென்னிஸ் தொடரில் கலந்து கொண்டார். காலிறுதியில் போதும்போது அவரது வலது முழங்கையில் காயம் ஏற்பட்டது. தற்போது காயத்திற்காக சிகிச்சை மேற்கொண்டு வருகிறார்.


முழங்கை காயம் முழுமையாக குணமடைய சுமார் 12 வாரங்கள் ஆகும் என கூறப்படுகிறது. இதனால் அமெரிக்க ஓபனில் ஜோகோவிக் விளையாடுவது சந்தேகம் எனக் கூறப்படுகிறது.

12 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள ஜோகோவிச் 2011 மற்றும் 2015இல் அமெரிக்க ஓபனை கைப்பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வருடத்தின் கடைசி கிராண்ட்ஸ்லாம் தொடரான அமெரிக்க ஓபன் ஒகஸ்ட் 28ஆம் திகதி தொடங்குகிறது.

2005ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 51 கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஜோகோவிச் கலந்து கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். நல்லூர் வீதியில் கடந்த சனிக்கிழமை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்த மெய்ப்பாதுகாவலர் உப பொலிஸ் பரிசோதகர் சரத் ஹேமச்சந்திரவின் பூதவுடலுக்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றைய தினம் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். சிலாபத்திலுள்ள அவரது வீட்டுக்கு நேற்றைய தினம் காலை சென்ற வடமாகாண முதலமைச்சர், ஹேமச்சந்திரவின் மனைவி மற்றும் பிள்ளைகளைச் சந்தித்து ஆறுதல் கூறியிருந்தார். (படங்கள்:-பொ.சோபிகா)

## ஜனாதிபதி ஆணைக்குழு ஆயுட்காலம் 3 மாதம் நீடிப்பு

(கொழும்பு)

மத்திய வங்கியின் சர்ச்சைக்குரிய பிணை முறி தொடர்பான விசாரணையை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் ஆயுள் காலம் மூன்று மாதங்களுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின் பேரில் நீடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒக்டோபர் 27ஆம் திகதி வரை தனது விசாரணைகளை ஆணைக்குழு முன்னெடுக்கும்.

இதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், முன்னாள் நிதியமைச்சரும் தற்போதைய வெளியுறவு அமைச்சருமான ரவி கருணாநாயக்கவை ஜனாதிபதி விசாரணைஆணைக்குழுவுக்கு இன்று சமுகமளிக்குமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S.சர்மா குருஜீ
82/4 கலட்டி
அம்மன் கோவிலடி,
வண்ணார்பண்ணை.
077 784 1558
(கி. 8817)

# மாவட்டச் செயலகம், கிளிநொச்சி
## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

கிளிநொச்சி மாவட்டச் செயலாளரினால் பின்வரும் விபரங்களைக் கொண்ட குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்த பெயர் நிர்மாணம் | மதிப்பீட்டுத் தொகை | வேண்டப்படும் ICTAD தரம்/பதிவு | கேள்விப் பிணைப்பணம், செல்லுபடியாகும் காலம் | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | KN/EB/11/Con /Languages /2017/745 | தேசிய சகவாழ்வு, கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் மாகாண மத்திய நிலைய கட்டட புனர்நிர்மாணம் கட்டம் II | 16.9மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C6 and C5 building | ரூபா 170,000.00 வங்கிப் பிணை 28/11/2017வரை | ரூபா 3,500.00 |
| 2 | KN/DPS/D05/ FIS/183 | சாந்தபுரம் கிரவல் வீதி புனரமைத்தல், கிளிநொச்சி | 3.25மில்லியன் (வற், ஏனைய நீங்கலாக) | C7 Highway | ரூபா 170,000.00 வங்கிப் பிணை 13/11/2017வரை | ரூபா 2000.00 |

1. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்ததாரர்களும் கேள்வி கோருவதற்கு தகுதியுடையவராவார்.
   I. நிர்மாணப்பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தால் இக்ராட் (ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரரை பதிவு செய்யும் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்ததாரர் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
   II. இக்ராட் (ICTAD/CIDA) வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்தங்களை மேற்கொண்ட ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
   III. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 04/2016 (i) இலக்க 16.03.2016 ஆம் திகதிய நிதிச்சுற்றறிக்கைக்கு அமைவாக வடக்கு மாகாணத்தைச் சார்ந்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
   IV. ஒப்பந்ததாரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு உட்பட்டு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் இருக்கக்கூடாது.
2. ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக தகவல்களை கிளிநொச்சி மாவட்டச்செயலக நிர்வாகக் கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.(தொ.பே.இல:-021 228 5357, பக்ஸ் இல:-021 228 3966)
3. கேள்வி ஆவணங்களை 26.07.2017 ஆம் திகதியிலிருந்து 11.08.2017 ஆம் திகதிவரை முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.
4. இரு அரக்கு முத்திரை இடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி, பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும், கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் அது தொடர்பாக பந்தி 5 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம்,திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஒப்படைத்தல் வேண்டும்.
5. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச்செயலகம் கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 14.08.2017 ஆம் திகதி முற்பகல் 10.30மணிக்கு முன் கிடைக்கப்பெறல் வேண்டும் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
6. கேள்விகள் தயாரிப்பு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விதாரர்களுக்கு ஏற்படும் ஏதாவது செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருநர் பொறுப்பாக மாட்டார்.
7. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் (Pre bid meeting) 09.08.2017 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.
8. தாமதமாக கிடைக்கும் விலையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**சுந்தரம் அருமைநாயகம்,**
**திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,**
**அரசாங்க அதிபர்/மாவட்டச்செயலாளர்,கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-9169)

# இராசி பலன்

26.07.2017
(ஆடி 10, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
திருதியை முற்பகல் 11.51 மணிவரை
மகம் முற்பகல் 8.47 மணிவரை
சுபநேரம் 4.32 - 6.02 மணிவரை
இராகுகாலம் 12.02 -1.32 மணிவரை
நாக சதுர்த்தி விரதம், ஆடிப்பூரம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சுக் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் திருவோணம் | | சூரி செவ் |
| | | | ராகு சந் புத |
| | சனி | | குரு |

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காண வேண்டிய நாள், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்** பணி புரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும் நாள், வாகன சுகமுண்டு, சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், வழிபாடு முன்னேற்றம் தரும்.

**மிதுனம்** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** நல்ல செய்திகள் வந்து சேரலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும் நாள், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு.

**சிம்மம்** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், திடீர் பயணங்கள் உருவாகலாம், போசன நன்மையுண்டு.

**கன்னி** விரதங்களால் நம்பிக்கை கூடும், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, வருமானம் திருப்தி தரும்.

**துலாம்** பண வரவால் மகிழ்ச்சி அடைவீர்கள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி பெறுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வருகை தருவார்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.

**தனுசு** வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தொழில் ரீதியாக முக்கிய நபர்களைச் சந்திப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறைந்து மனநிம்மதி ஏற்படலாம்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கும்பம்** புதிய வாய்ப்புக்கள் தேடி வரலாம், தொழில் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**மீனம்** அலுவலகப் பணிகள் துரிதமாகும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் நாள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிபதியை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு! யாழ்.பல்கலை. ஆசிரியர் சங்கம் கண்டனம்

கடந்த 22.07.2017 சனிக்கிழமை மாலை வேளை நல்லூர் பின் வீதியில் இடம்பெற்ற யாழ். மேல் நீதிமன்ற நீதிபதிமாணிக்கவாசகர் இளஞ்செழியன் மீதான ஆயுதத் தாக்குதல் சம்பவத்தினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இம்மிலேச்சத்தனமான கொலை முயற்சியும் ஆயுதவன் செயலும் நீதித்துறையின் சுயாதீனத்திற்கு விடப்பட்டபாரிய அச்சுறுத்தலாகவே நோக்கப்பட வேண்டும். ஏற்கனவே போரினால் நீண்ட காலமாகப் பாதிக்கப்பட்ட சமூகத்தினர் யுத்தத்திற்குப் பின்னரும் பல்வேறு சமூகவிரோதச் செயற்பாடுகளால் மேலும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் மேல் நீதிமன்ற நீதிபதி சட்டம் ஒழுங்கு மற்றும் நீதியை நிலை நாட்டுவதில் துணிச்சலுடன் செயற்பட்டு வருகின்றமையினை நாங்கள் இவ்விடத்தில் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

சட்டம் ஒழுங்கு மற்றும் நீதியை நிலைநாட்டுபவர்கள் மீது கொலை முயற்சி மேற்கொள்வது என்பது ஒரு பாரதூரமான சமூகவிரோதச் செயற்பாடாகும். இத்தகைய சம்பவம் சாதாரண மக்களுக்கான நீதி மற்றும் சட்ட ஒழுங்குகளையும் மக்களின் இயல்பு வாழ்க்கையினையும் பாதிக்கின்றன. மேலும் நீதித்துறை மீதான அச்சுறுத்தல்களும் அடக்கு முறையும் நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்குகளைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. இவ் வன்முறைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்டு நீதித்துறை மீதான தாக்குதலுக்கான காரணங்கள் கண்டறியப்படல் வேண்டுமென யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகின்றது. தாக்குதல் நடத்திய நபர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் பூர்த்தி செய்யப்படாமலேயே கருத்துக்களைத் தெரிவிப்பது உண்மைக் குற்றவாளிகள் தப்பிப்பதற்கும் அவர்களது நோக்கம் என்னவென்று அறியப்படாமல் போவதற்கும் வாய்ப்பாகி விடும். எனவே துரிதகதியில் தாக்குதல் நடத்திய நபர் கைது செய்யப்படுவதோடு விசாரணை விரைவாகவும் நேர்மையாகவும் மேற்கொள்ளப்பட்டு அச் சம்பவம் தொடர்பில் உண்மைகள் வெளிக்கொண்டு வரப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.

அத்துடன் நீதிபதி மீதான கொலை முயற்சியின் போது அவரது மெய்ப் பாதுகாவலர்கள் படுகாயமுற்றும் அதில் ஒருவர் கொல்லப்பட்டதும் மிகுந்த வேதனைதரும் விடயமாக இருக்கின்றது. இச் சம்பவத்தில் பலியான மெய்ப் பாதுகாவலருக்கு எமது அஞ்சலிகளைச் செலுத்துவதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் நீதித்துறையினரின் சுயாதீனம் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை உடனே மேற்கொள்ளுமாறு அரசாங்கத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வலியுறுத்துகின்றது என ஆசிரியர் சங்கச் செயலாளர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ

# துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் பலி இரு பொலிஸாரின் மறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வடமராட்சி கிழக்கு பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸார் இருவரின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது எதிர்வரும் ஒகஸ்ட் 4 ஆம் திகதி வரை சந்தேக நபரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கடந்த 9 ஆம் திகதி 6 ஆம் கட்டை மணற்காட்டுப் பகுயில் அனுமதியற்ற முறையில் மணலை ஹன்ரர் ரக வாகனத்தில் ஏற்றிச் சென்ற போது பொலிஸாரினால் வழிமறிக்கப்பட்ட நிலையில் வாகனத்தை நிறுத்தாது சென்ற போது பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்திலேயே 24 வயதான யோகராசா தினேஸ் என்ற துன்னாலையைச் சேர்ந்த இளைஞர் உயிரிழந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-4-60)




# ஆடிப்பூரத் திருவிழா இன்று

கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலய ஆடிப்பூரத் திருவிழா இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு 108 சங்காபிஷேகம் , ருது சோபன வைபவம், திருவூஞ்சல் என்பவற்றுடன் இடம் பெறும்.

❁❁❁❁❁❁❁❁

நவாலியூர் களையோடை கண்ணகை அம்மன் ஆலயத்தில் ஆடிப் பூரத்திருவிழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு விசேட அபிஷேகம், பூஜைகள் என்பன இடம் பெற்று நண்பகல் 12 மணிக்கு மகேஸ்வர பூஜை இடம் பெறும். (இ-3)



துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த உபபொலிஸ் பரிசோதகர் ஹேமச்சந்திரவின் இறுதிக் கிரியைக்காக நெல்லியடி வணிகர் கழகத்தினரால் 25 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்பட்டது.நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பியந்தவிடம் நேற்று முன்தினம் இப் பணம் கையளிக்கப்பட்டதாக நெல்லியடி வர்த்தக சங்கத்தின் செயலாளர் சுரேரஞ்சன் தெரிவித்தார். இதேவேளை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உயிரைக் காப்பாற்ற தன் உயிரை நீத்த ஹேமச்சந்திரன் தமிழ் மக்களின் மனங்களில் மதிப்புக்குரியவராகியுள்ளார். அவரின் குடும்பத்தினரின் துயரத்தில் பங்கெடுக்கும் வகையில் நெல்லியடி வணிகர் கழகம் இந்த முன்மாதிரியான நடவடிக்கையினை முன்னெடுத்ததாக வணிகர் கழகத்தின் உபதலைவரும் வடமாகாண சபை உறுப்பினருமான அகிலதாஸ் சிவக்கொழுந்து தெரிவித்தார். (இ-60)

# மாடியிலிருந்து தவறிவிழுந்தவர் பலி

அரிசி ஆலையில்வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஊழியரொருவர் மாடியிலிருந்து தவறி விழுந்து உயிரிழந்துள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் 24 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் சுதுமலை அம்மன் கோயில் வீதியிலுள்ள அரிசி ஆலையில் இடம்பெற்றது. இதில் இணுவில் தெற்கு பரராசப் பிள்ளையார் கோயில் வீதியைச்சேர்ந்த இராசையா சுவாமித்தம்பி வயது-54 என்பவரே உயிரிழந்துள்ளார். குறித்த நபரின் சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டு நேற்றையதினம் 12 மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-7-30)

## இளஞ்செழியனை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு

# இராணுவ அடக்கு முறைக்கு அரசு இடமளிக்கக் கூடாது

## மாவை.எம்.பி. வலியுறுத்து

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனை குறி வைத்து நல்லூரில் நடத்தப்பட்ட துப்பாக்கித் தாக்குதல் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஏற்கனவே கண்டன அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. தொடர்ந்து நீதிக்காகக் குரல் எழுப்பும் அனைத்துத் தரப்பினராலும் கண்டனம் வெளியிடப்பட்டுவருவதும், உண்மை கண்டறியப்பட்டுக் குற்றமிழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதற்கும் மேலாக எதிர்வரும் காலங்களில் இவ்வாறான வன்முறைகளும் இடம் பெறக் கூடாது என்றும் குரலெழுப்பி வருவது வரவேற்கப்பட வேண்டும் என யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலங்களில் தமிழ்ப் பிரதேசங்களில் இடம்பெற்று வரும் வன்முறைகள் குறிப்பாக தமிழ் இளைஞர் குழுக்களாக வாள்வெட்டு, கடத்தல், பாலியல் பலாத்காரம், போதைப் பாவனை, சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரால் பொலிஸாரால் அச்சுறுத்தல், துப்பாக்கிப் பிரயோகத்தினால் கொலைகள் இடம்பெற்று வருவது கட்டுப்பாடற்று நடைபெறுவதற்கு எதிராகப் பொலிஸாரின் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. இதனால் இத்தகைய சம்பவங்கள் கட்டுப்பாடற்றுச் செல்கின்றன என்று விமர்சனங்களும் எழுந்து வருகின்றன.

இச் சம்பவங்களின் உச்சக் கட்டமாகவே புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை விசாரணைகள் தீர்ப்பாயத்தினால் (ட்ரயல் அட்பார்) விசாரணை நடைபெறுகின்றது. பொலிஸார் மீது வலுவான குற்றச்சாட்டுக்களும் எழுந்திருக்கிறன. நீதிமன்ற நடவடிக்கைகளினால் குறிப்பாக நீதிபதி இளஞ்செழியனின் தீர்ப்புக்கள், நடவடிக்கைகளினால் மேற்குறித்த வன்முறைகள், சட்ட அத்துமீறல்கள், அதிகார துஷ்பிரயோகங்கள் குறைவடைய ஆரம்பித்தன. ஆனால் நீதிபதி இளஞ்செழியனையே குறிவைத்து நடத்தப்பட்டுள்ள துப்பாக்கி வேட்டுக்கள், அவரின் உயிரைப் பாதுகாக்க உடன் செயற்பட்ட காவலர்களில் ஒருவர் உயிரிழந்தும் இன்னொருவர் படுகாயமடைந்தும் அவல நிலையடைந்திருப்பது அனைவருக்கும் வேதனையையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியிருப்பதன் விளைவாக நீதிகோரி கண்டனங்கள், பொது வேலை நிறுத்தம் எனும் மக்கள் கிளர்ச்சி எழுந்திருக்கிறது. இதனிடையே "கொலை முயற்சியில இலக்கு நீதிபதி இளஞ்செழியன் அல்ல" என்று பொலிஸ் தரப்புச் சொல்கிறது என்பது ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

நீதிபதி இளஞ்செழியன் அவர்களே தன்னைப் பாதுகாக்கத் தன்னுயிரைத் தியாகம் செய்தார் என பொலிஸ் அதிகாரிக்கு கண்ணீர் மல்க அஞ்சலி செலுத்தியிருக்கின்றார். அக்கொடிய சம்பவத்தில், கொலை முயற்சியில் சம்பந்தப்பட்டவர் ஒரு நீதிபதி என்பதைத் தெரிந்தும் பொலிஸார் ஏன் அவசரப்பட்டு "இளஞ்செழியன் இலக்கு அல்ல"



என்று செய்தி சொல்கிறார்கள் என்ற கேள்வியை எழுப்புகின்றோம். விசாரணைகள் முடிந்து விட்டனவா என்ற கேள்வியும் நீதிபதி இளஞ்செழியனின் கருத்துக்களுக்குச் சவால் விடுவதுமாகவே பொலிஸ் தரப்புச் செய்தி இருக்கின்றதென்பதை பகிரங்கமாகக் குறிப்பிடுகின்றோம்.

அப்படியானால் அச்சம்பவத்தின் இலக்கு யாருக்கு எதிரானதென்பதையும் சொல்ல வேண்டும். இச் சம்பவம் வேதனைமிக்கதும் கண்டனத்திற்கும் உரியதாக இருக்கும் போது பொலிஸாரின் அவசரத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஜனாதிபதியே! நீதிபதி இளஞ்செழியனுக்கு ஆறுதல் சொல்லி பூரண விசாரணைக்கு உத்தரவிட்ட பொழுது பொலிஸாரின் அவசரச் செய்தியும் விசாரிக்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தி நிற்கின்றது.

இலங்கையில் நீதிபதி இளஞ்செழியனின் உயிருக்கு இலக்கு வைக்கப்பட்டிருப்பதும் நீதித் துறைக்குச் சவாலை ஏற்படுத்தியிருப்பதும் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கக் கூடியதென வற்புறுத்துகின்றோம். இத்தகைய சம்பவங்களினால்வடக்கில்வன்முறைகள் கட்டுக்கடங்காமல் கைவிடப்படுவதன் மூலம் மீண்டும் பொலிஸாரின் இராணுவ அடக்கு முறையின் தேவை ஏற்பட்டுள்ளதென்ற ஒரு நிலையை அரசு ஏற்படுத்தி விட இடம் அளித்துவிடக் கூடாது.

நீதிபதி இளஞ்செழியன் மீது, நீதித் துறையின் மீது வன்முறை, துப்பாக்கி வேட்டுத் தீர்க்கப்பட்டிருப்பதன் உண்மையை அறிய வேண்டும். இது ஒரு தனி நபரின் செயலா அல்லது இதற்குப் பின்னணியிலுள்ளவரின் திட்டமிட்ட சதியா என்பதை தகுந்த சட்ட பூர்வமான விசாரணையினால் கண்டறியப்பட வேண்டும் என்பதுடன் பொதுமக்களை மட்டுமல்ல நீதிபதிகள், நீதித்துறையை பாதுகாக்கவும் பொருத்தமான நட வடிக்கைகளையும் ஜனாதிபதியும், அரசும் சர்வதேச சமூகமும் உடன் எடுக்க வேண்டுமெனவும் வற்புறுத்துகின்றோம் என அவர் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85

# நம்பிக்கையில்லாத் தீர்மானம் நடந்தது என்ன?

வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிராக தமிழரசுக் கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை வாபஸ் பெறப்பட்டதையடுத்து பதற்றமான சூழ்நிலை தணிந்தது எனலாம்.

இதேவேளை 20.06.2017 அன்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் சகோதரர்களைச் சந்தித்தார். இச்சந்திப்பு யாழ்ப்பாணம் முஹமதியா பள்ளி வாசலில் இடம்பெற்றது. இந்நிகழ்வு மௌலவி அலீஸ் காசிமி தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது வடக்கு மாகாண சபையின் முதலமைச்சராக நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் தொடர்ந்தும் முதலமைச்சராக இருக்கவேண்டும் எனக் கேட்டுக்கொண்டதுடன் மனுநீதிச் சோழ மன்னன் போல நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் செயற்பட்டார் என முஸ்லிம் பிரதிநிதிகள் புகழாரம் சூட்டினர்.

சமூக ரீதியில் அனைத்து மதத்தினரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும். வடக்கு மாகாணத்தில் அனைத்து மக்களிடத்திலும் ஒற்றுமை ஏற்பட வேண்டுமெனில் முதலமைச்சரின் நீதியான அணுகுமுறை அனைவருக்கும் பாடமாக அமைய வேண்டும் என முஸ்லிம் பிரதிநிதிகள் மேலும் கருத்துத் தெரிவித்தனர்.


வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களுக்கு எதிரான கருத்துக்களைக் கூறுவதிலும் முதலமைச்சரை கடுமையாக எதிர்ப்பதிலும் தீவிரமாக இருக்கும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மினின் போக்கிற்கு யாழ்ப்பாண முஸ்லிம் சகோதரர்களின் கருத்துக்கள் ஈச்சமட்டையால் அடி கொடுப்பது போல இருந்தது.

இவை ஒருபுறம் இருக்க கொழும்பு சென்றிருந்த வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே 21.06.2017 அன்று யாழ்ப்பாணம் திரும்பினார். ஆளுநர் யாழ்ப்பாணம் திரும்பிய கையோடு இரண்டு முக்கியமான நிகழ்வுகள் நடந்தன.

அதிலொன்று முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை ஆளுநரிடம் இருந்து மீளப்பெறப்பட்டது, இரண்டாவது நிகழ்வு; கல்வி அமைச்சரும் விவசாய அமைச்சரும் இராஜினாமா செய்தமையால், குறித்த அமைச்சுப் பதவிகளை முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொண்டது.

வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்தால் 14.06.2017 அன்று ஆளுநரிடம் கையளிக்கப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே. சயந்தன் 21.06.2017 அன்று ஆளுநரிடம் இருந்து மீளப் பெற்றுக்கொண்டார்.

முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆளுநரிடம் இருந்து மீளப்பெறுமாறு அவைத் தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்தை தமிழரசுக் கட்சித் தலைமை கேட்டுக் கொண்டதாயினும் அதற்கு சிவஞானம் அவர்கள் உடன்படவில்லை எனத் தெரியவருகிறது.





## தமிழர் தலைவிதி எப்படியாகும்?

இந்நிலையில் அந்தப் பொறுப்பு உறுப்பினர் கே. சயந்தனிடம் ஒப்படைக்கப்பட, அவர் ஆளுநரின் அலுவலகத்திற்குச் சென்று நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மீளப் பெற்றுக்கொண்டார். உறுப்பினர் சயந்தனுடன் உறுப்பினர் அஸ்மினும் உடன் சென்றிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை அமைச்சர்கள் இராஜினாமாச் செய் ததன் காரணமாக வெறு தாகி இருந்த கல்வி மற்றும் விவசாய அமைச்சுப் பதவிகளை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதற்காக அவர் ஆளுநர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து இரண்டு அமைச்சுப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொண் டார்.

இப்பொறுப்பு புதிய இரண்டு அமைச்சர்களை நியமிக்கும் வரைக்குமான ஒரு தற்காலிக ஏற்பாடு என்பதும் இங்கு சுட்டிக் காட்டுதற்குரியது.

ஆக, முதலமைச்சர் விக்னேஸ்வரன் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம், மக்கள் கொந்தளிப்பு, ஹர்த்தால், கடையடைப்பு, ஆர்ப்பாட்டப்பேரணி என்பவற்றின் மத்தியில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களும் மதத் தலைவர்களும் மேற்கொண்ட சமரச முயற்சி என்பவற்றின் விளைவாக முதலமைச்சர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாபஸ் பெறப்பட, இராஜினாமாச் செய்யப்பட்ட இரண்டு அமைச்சுப் பதவிகளை முதலமைச்சர் பொறுப்பேற்றுக் கொள்ள, ஒரு பெரும் சூறாவளிச் சுழற்சி 21.06.2017 இல் முடிவுக்கு வந்தது. இக்கட்டத்தில் அறவொழுக்கம் சார்ந்த பிரச்சினை ஒன்று மீள் எழுகை பெறுகிறது.

அதாவது அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அவர்களே முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆளுநர் கூரேயிடம் கையளித்திருந்தார்.

இஃது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. நடுநிலையோடு நடந்து கொள்ள வேண்டிய அவைத் தலைவர் ஒரு பக்க சார்பாக- முதலமைச்சருக்கு எதிராகச் செயற்பட்டது நியாயமானதா?. அவைத் தலைவர் இவ்வாறு நடந்து கொண்ட பின்னர் மீண்டும் அவைத் தலைவராக அவர் இருப்பது ஏற்புடையதா? என்ற விவாதம் எழுகிறது.

எனினும் எல்லாவற்றிலும் குற்றம் காண முற்பட்டால் சுமுகமான சூழ்நிலை உருவாகாது என்ற கருத்தியலும் ஏற்படவே செய்தது.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவினால் நீதிகோரி அமைதி வழி கவனயீர்ப்பு போராட்டம்







முல்லைத்தீவில் நேற்றுக் காலை 9.30 மணிக்கு முல்லைத்தீவு பேருந்து நிலையத்துக்கு அண்மையில் ஆரம்பமாகி மாங்குளம்-முல்லைத்தீவு வழியாக நகர்ந்து சென்று முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நிறைவடைந்து அங்கு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனிடம் ஜனாதிபதிக்கான மகஜரும் கையளிக்கப்பட்டது. (8-281)






யாழ். மேல் நீதிபதி மா. இளஞ்செழியன் மீதான தாக்குதலை கண்டித்து நேற்று செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளது. கிளிநொச்சி டிப்போச் சந்தி பசுமைப் பூங்காவில் இவ் ஆர்ப்பாட்டம் நேற்று முற்பகல் 10 மணிக்கு நடத்தப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களின் பிரதிநிதிகள் கிளிநொச்சி மாவட்டச் செயலகம் சென்று அங்கு ஜனாதிபதிக்கான மகஜரையும் கையளித்தனர். (8-15-312)

# வாழ்வோம் வளம்பெறுவோம் செயற்றிட்ட உதவிகள் வழங்கல்





(பனிக்கன்குளம்)

வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் முன்னெடுக்கப்படும் வாழ்வோம் வளம் பெறுவோம் செயற்றிட்டத்தின் பதின்மூன்றாம் கட்டமானது கடந்த 22 ஆம் திகதி அவரது மக்கள் தொடர்பகத்தில் நடைபெற்றது.

புலம்பெயர் அன்பர்களின் பங்களிப்பில் முன்னெடுக்கப்பட்ட குறித்த செயற்றிட்டத்தின் பதின்மூன்றாம் கட்டத் தில் தாயகத்தை சேர்ந்த ஐம்பத்து ஏழு குடும்பங்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

குறுங்கால வாழ்வுடைமை ஊக்குவிப்பினை நோக்காகக் கொண்டு நாளாந்த உணவுத் தேவைக்கு இடர்படும் குடும்பங்களுக்கான ஒத்துழைப்பாக வாழ்வோம்-வளம் பெறுவோம் என்ற செயற்றிட்டமானது வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

புலம்பெயர்ந்து வாழும் அன்பர்களின் பணப்பங்களிப்பில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்று முடிந்த பதின்மூன்றாம் கட்டத்துடன் இது வரையில் நானூற்று தொண்ணூற்று மூன்று குடும்பங்களை உள்ளீர்த்திருப்பதாக துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.


புலம்பெயர்ந்து வாழும் குபேரன்-சைலேந்திரி குடும்பம் மற்றும் நபில் சுமாரின் பங்களிப்பில் வாழ்வோம் பெறுவோம் செயற்றிட்டத்தின் பதின்மூன்றாம் கட்டத்தில் எண்பத்தொன்பதாயிரத்து ஐந்நூறு ரூபாய் பெறுமதியில் தமிழ் உறவுகளுக்கு இவ்வுதவிகளை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

குறித்த இவ்வுதவிகளாக ஐம்பத்து நான்கு குடும்பங்களுக்கு ஆயிரம் கிலோ அரிசியும் இருதய நோயுற்ற இரண்டு பிள்ளைகளுக்கு மருத்துவ ஆய்வுக்காகவும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கும் வறுமையில் உள்ள மாணவன் ஒருவருக்கு பயிற்சி நூல்கள் வாங்குவதற்காகவும் மொத்தமாக பதினொராயிரத்து நானூறு ரூபாய் பணமாகவும் வழங்கப்பட்டது.

குறித்த இவ் வுதவிகள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவி கரனால் அவரது மக்கள் தொடர்பகத்தில் வைத்து வழங்கப்பட்டது. (3-8-281)




# மின்னொழுக்கினால் தீக்கிரையான வீடு

(குருமன்காடு)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் வீடு ஒன்று எரிந்து நாசமாகியுள்ளதாக செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம், அழகாபுரி கிராமத்தில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது

செட்டிகுளம், அழகாபுரி கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் வசித்த குடும்பத்தினர் மகனான சிறுவன் ஒருவனை வீட்டில் நிறுத்திவிட்டு வெளியில் சென்ற சமயமே இத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ பரவியதையடுத்து சிறுவன் கூச்சலிட்டதுடன் அப்பகுதியில் இருந்த இளைஞர்கள் தீயை அணைக்க முயன்றதுடன் பொலிஸாருக்கும் தகவல் வழங்கினர். பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் இணைந்து தீயை கட்டுக்குள் கொண்டு வர முயற்சித்த போதும் வீடு முழுமையாக எரிந்து நாசமாகிய நிலையிலேயே தீ பரம்பல் கட்டுப்படுத்தப்பட்டது.

வீட்டில் இருந்த சகல பொருட்களும் முழுமையாக தீயில் எரிந்து நாசமாகியுள்ளது. இத் தீ விபத்துக்கு மின் னொழுக்கே காரணம் என ஆரம்ப கட்ட விசாரணை களில் தெரிய வந்துள்ளது. இது தொடர்பில் செட்டிகுளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (3-8-250)

# விருந்தினர் விடுதிக்குள் புகுந்த போதைக் கும்பல்



வவுனியாவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதிக்குள் நேற்று முன்தினம் புகுந்த இனந்தெரியாத நபர்கள் விடுதி முகாமையாளர் மீது தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

வவுனியா முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.45 மணியளவில் நான்கு நபர்கள் சென்று தங்குவதற்கு அறை வேண்டுமென கோரியுள்ளனர். எனினும் முகாமையாளர் அறை இல்லை என தெரிவித்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த குறித்த நபர்கள் முகாமையாளரை தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சத்தம் கேட்டதையடுத்து விருந்தினர் விடுதியின் உரிமையாளர் அங்கு சென்று பார்த்த போது முகாமையாளரான குமார் (வயது 48) தலையில் காயத்துடன் கத்திய வண்ணம் இருந்த முகாமையாளரை வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதித்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக காயமடைந்த முகாமையாளரை தொடர்பு கொண்டு வினவிய போது, பிற்பகல் நான்கு நபர்கள் மது போதையில் வந்தார்கள். அவர்கள் என்னிடம் அறை வேண்டுமென கோரினார்கள். நான் இல்லை என தெரிவித்தேன்.

இதனால் ஆத்திரமடைந்த நபர்கள் என் மீது தாக்குதல் மேற்கொண்டு விட்டு தப்பித்து சென்றார்கள் என தெரிவித்தார். இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (3-8-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து மேற்கொண்ட தாக்குதலைக் கண்டித்து கிளிநொச்சியின் பொதுச் சந்தை வர்த்தகர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தின் விளைவாக பொதுச்சந்தையிலுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் பூட்டப்பட்டு இருப்பதனையும் நீதிபதியின் மெய்ப்பாதுகாவலருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டதையும் படங்களில் காணலாம்.(312)



கிளிநொச்சி நகரின் ஏ-9 பிரதான வீதியிலும் வியாபார நிலையங்களிலும் கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டும் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர். (15-312)

# தேசிய மீலாத் விழாவையிட்டு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்



(கிளிநொச்சி)

தேசிய மீலாத் விழாவை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறவுள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாக மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தலைமையில் நேற்று முன்தினம் 24 ஆம் திகதி கூட்டம் இடம்பெற்றுள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் முஹம்மது நபி(ஸல்) அவர்களின் பிறந்த தினத்தினை முன்னிட்டு தேசிய மீலாத் விழா ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றது. இதனை முன்னிட்டு தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் பல முக்கிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதும் இதில் ஒரு பிரதான அம்சமாகும்.

இந்த வகையில் இவ்வாண்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை ஒன்றிணைத்து தேசிய மீலாத் விழா யாழ்ப்பாணத்தில் கோலாகலமாக கொண்டாடப்படவுள்ளது. இவ்விழாவினை சிறப்பாக நடத்துவது, தேசிய மீலாத் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் என்பன தொடர்பான விடயங்கள் ஆலோசனைக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.ஆர்.எம்.மலிக், தபால் சேவை, முஸ்லிம் சமய அமைச்சின் ஆலோசகர் எம்.எச். முயினுதீன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் ச.மோகனபவன், கரைச்சி, பூநகரி பிரதேச செயலாளர்கள், உதவி மாவட்ட செயலாளர் மற்றும் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்களின் தலைவர்கள், முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாவட்ட, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (3-8)









வடக்கு மாகாண சுகாதார அமைச்சரின் வேண்டுகோளுக்கமைய பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு புன்னகை அமைப்பு சிறுவர் வறுமை ஒழிப்பு நிதியத்தின் நிதி உதவியுடன் தெரிவு செய்யப்பட்ட பெண்களை தலைமைத்துவமாகக் கொண்ட 8 குடும்பங்களுக்கு நல்லின பசுக்கள் வாழ்வாதாரமாக வழங்கி வைக்கப்பட்டன.






யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மீதான தாக்குதல் முயற்சியை கண்டித்து வவுனியாவில் பொது அமைப்புக்கள் அமைதிப் பேரணி! (112-250)

# காணாமலாக்கப்பட்ட உறவுகளை மீட்டுத்தரக் கோரும் மக்களுக்கு அரசு பதிலளித்தே ஆக வேண்டும்

கடந்த அரசாங்கத்தின் செயற்பாட்டால் கண்ணீர் விடுகின்ற மக்களுக்கு பதில் சொல்கின்ற கடப்பாடு நல்லாட்சி அரசுக்கும் அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேனவிற்கும் இருக்கிறது என தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்ற பொது நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கையிலேயே யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சியின்தலைவருமான மாவை. சேனாதிராஜா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரு ஓரங்களில் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் நிலையில் அவர்கள் தங்கள் கணவனை, மகனை மற்றும்உறவுகளை மீட்க அவர்கள் எங்கே? என்ற கேள்வியுடன் போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிகழ்வுகள் ஏற்பட்டிருந்தாலும் இந்த அரசாங்கம் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். சென்ற அரசாங்கத்தின் செயற்பாட்டால் கண்ணீர் விடுகின்ற மக்களுக்கு பதில் சொல்கின்ற கடப்பாடு நல்லாட்சி அரசுக்கும் அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேனவிற்கும் இருக்கிறது.

அத்துடன் தமிழ் மக்கள் இந்த ஆட்சியை கொண்டு வந்த பொழுது தங்களுடைய பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்று நம்பியிருந்தார்கள். இரண்டு ஆண்டுகளாகியும் எமது மக்களுக்கு பதில் சரியாக கிடைக்கவில்லை.

இழந்து போன உயிர்கள் ஒருபுறம் குறிப்பாக இராணுவத்தினரிடம் கையளிக்கப்பட்டவர்கள் மற்றும் சரணடைந்தவர்களைத்தான் தமிழ் மக்கள் கேட்கின்றார்கள். அதற்கு இந்த அரசாங்கம் பதில்சொல்லியேஆகவேண்டும்.

ஐ.நா.மனித உரிமைப் பேரவை மற்றும் ஐ.நா.சபை நிறைவேற்றிய தீர்மானங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சம்பந்தமாக இந்த அரசு பதில் சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாகத்தான் அரசு விரும்பாது விட்டாலும் இராணுவத்தினர் இழைத்த பல குற்றங்களுக்கு பதில் சொல்வதற்கு தயக்கம் காட்டினாலும் ஐ.நா. மனித உரிமை பேரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பற்றி பதில் சொல்லக்கூடிய, விசாரணை நடத்தக்கூடிய ஒரு அலுவலகத்தை அமைக்கும் சட்ட மூலத்தில் ஜனாதிபதி கையெழுத்திட்டுள்ளார்.

இது ஒரு முன்னேற்றகரமான செயற்பாடாக இருந்தாலும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் மற்றும் காணாமல் போனவர்கள் எல்லோருக்கும் இவர்கள் எவ்வாறு விடை தரப் போகிறார்கள். அரசாங்கத்தின் பதிலில் திருப்திப்படுவார்களா? மக்களின் கண்ணீர் துடைக்கப்படுமா? என்பது சந்தேகத்திற்குரியதாகவே இருக்கும். ஏனெனில் பலவிதமான அடிப்படைகளில் இராணுவத்தினரால் கொல்லப்பட்டவர்களும் இன்னும் எத்தனை பேர் உயிரோடு இருக்கிறார்கள் என்பதும் ஒரு தெளிவற்ற நிலைமை காணப்படுவதால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கேள்விக்கு இருக்கின்றது.

ஆனாலும் இந்த அரசாங்கம் எடுக்கின்ற நடவடிக்கைகள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு விசாரணை நடத்தி நீதியை வழங்க வேண்டும் என்ற அடிப்படை யில் ஜனாதிபதி அந்த சட்டமூலத்தில்கையெழுத்திட்டு அந்த அலுவலகம் திறக்கப்படும் பட்சத்தில் தமிழ் மக்களுக்கு ஒரு நம்பிக்கையையும் ஒரு பயனையும் கொடுக்கக் கூடி ய தாக இருக்க வேண்டும் என நாங்கள் வற்புறுத்துகின் றோம் என தெரிவித்தார்.(7-8-250)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி இருவரிடம் 22 இலட்சம் ரூபா மோசடி

## பெண் பொலிஸாரால் கைது


வெளிநாட்டில் வேலை வாய்ப்பு பெற்றுத்தருவதாக கூறி இரு நபர்களிடம் 22 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் பண மோசடி செய்து தலைமறைவாக வாழ்ந்து வந்த பெண்ணொருவரை கலஹா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இரத்தினபுரி பகுதியைச் சேர்ந்த குறித்தப் பெண், ஒரு நபரிடம் 16 இலட்சத்து 53 ஆயிரம் ரூபாவும் மற்றுமொருவரிடம் 6 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவையும் பெற்று மோசடி செய்துள்ளார்.

அத்துடன் பொலிஸாரிடமிருந்து தப்பித்துக்கொள்வதற்காக கலஹா பொலிஸ் பிரிவிக்குட்பட்ட மஸ்கொள்ள பிரதேசத்தில் வீடொன்றைப் பெற்று அங்கு மாந்திரீகம் மூலம் தீராத நோய்களை குணமாக்குவதாக கூறி ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டு வந்துள்ளமையும் தெரிய வந்துள்ளது.

இந் நிலையில் சந்தேக நபர் தொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றையடுத்து நேற்றுமுன்தினம் குறித்த பெண் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ-7)




# தேசோதய சபைகளின் அலுவலகங்கள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வோதய நிறுவனத்தின் பிரதேச தேசோதய சபைகளின் உடுவில், யாழ்ப்பாணம், சாவகச்சேரி பிரதேச புதிய அலுவலக ங்களை இன்று புதன்கிழமை வைபவ ரீதியாக சர்வோதய நிறுவனத்தின் பிரதான செயலாளர் டாக்டர் வி.ஆரியரெட்ண திறந்து வைக்கவுள்ளார். (இ-10-134)

# மகிந்தவின் காலில் விழுந்த சீன பிரஜை

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கண்டி தலதா மாளிகைக்கு திடீர் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது, எதிர்பாராத சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அங்கு தலதா மாளிகைக்கு அருகில் பலர் மகிந்தவின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டனர்.



திடீரென சீன நாட்டவர் ஒருவர் மகிந்தவின் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டார். (இ-

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இலந்தை



Botanical Name - Zizyphus jujuba
Family - Rhamnaceae
Eng - Comman Jujube
Sinh - Masan

பெருஞ்செடி அல்லது சிறு மர வகையைச் சேர்ந்தது. 10 மீற்றர் உயரம் வரை வளரக் கூடியது. தனியிலை, ஒன்றுவிட்ட இலை ஒழுங்கமைப்பு கொண்டது. கோள வடிவ இலைகள். இலை விளிம்பில் ரம்பை வடிவம் கொண்டது.

ஒழுங்கான, இருபாலான பூக்கள் சிறியதும் மஞ்சள் நிறமான பூக்கள் காணப்படும். உருண்டையான சதைப் பிடிப்பான பழங்கள். கடும் சிவப்பு அல்லது மண்ணிறமானவை. முள்ளுள்ள மரமாகும்.

இதனுடைய கொழுந்து இலை, பழம், பட்டை, வேர், வேர்ப்பட்டை, கட்டை ஆகிய பகுதிகள் மருத்துவ குணம் மிக்கவை.

இதில் இரண்டு வகையுண்டு. நாட்டு இலந்தை, காட்டு இலந்தை என்பனவாகும். காட்டு இலந்தைப் பழம்புளிப்பு,துவர்ப்புசுவையுடையது. நாட்டு இலந்தைப் பழத்தில் சிறிது இனிப்புச் சுவையும் கலந்து காணப்படும்.

100 கிராம் பழத்திலுள்ள சத்துக்கள்,

புரதம்- 0.8 கிராம், கொழுப்பு -0.3 கிராம், காபோவைதரேற்று-17 கிராம், கல்சியம் -4 மி.கிராம், பொஸ்பரஸ்-9 மி.கிராம், இரும்பு- 1.8 மி.கிராம், கரோட்டின்- 21 மைக். கிராம், உயிர்ச்சத்து C -76 மி.கிராம்.

இலந்தையின் காய், பழம், துளிர் இவற்றை எவ்விதமாக உட்கொண்டாலும் அழல் நோய்கள் (பித்தம் சம்பந்தமான) யாவும் ஒழிந்து போகும்.

இதனுடைய இலையையும் பட்டையையும் சேர்த்து குடிநீர் செய்து கொடுத்தால் வயிற்று கடுப்பு போகும்.

புழுக்கள் இல்லாத சத்தான பழத்தை கொட்டைகளை நீக்கி பிசைந்து போதியளவு உப்பு, மிளகாய்த் தூள் கூட்டி அடைதட்டி காய வைத்து உபயோகித்து வந்தால் வாந்தி, பித்த வாந்தி, அக்கி மந்தம், சமிபாடின்மை, மலக்கட்டு ஆகியன நீங்கும்.

இலந்தைப் பழங்களை சாப்பிட்டுவர உடலுக்கு குளிர்ச்சியையும் உரத்தையும் தரும். மலத்தை இளக்கும். இரத்தத்தை சுத்தப்படுத்தும்.

இலந்தை மரத்தின் கொழுந்து இலைகளை நன்கு கழுவி அரைத்து காலை வேளையில் தினமும் 5 கிராம் அளவு சாப்பிட்டு வெந்நீர் அருந்த வயிற்று எரிச்சல் நீங்கும்.

இலந்தை மரத்தின் இலைகளை பறித்து நன்கு கழுவி நன்றாக அரைத்து காயங்கள் மீது போட்டு வந்தால் அவை விரைவில் ஆறும்.

இலந்தை மரப்பூவை சுத்தம் செய்து நன்றாக அரைத்து உடல் முழுவதும் பூசிக் கொண்டால் உடல் எரிச்சல் தணியும்.

இலந்தை மர இலைகளை சுத்தம் செய்து சாறு எடுத்து வழுக்கை உள்ள இடங்களில் தடவிவர முடி வளரும்.

இலந்தை இலைகளை எலுமிச்சம் பழச்சாற்றால் அரைத்து உடல் முழுவதும் பூசிக் குளித்தால் வாதநோயால் ஏற்படும் உடல் எரிச்சல் குணமாகும்.

இலந்தை இலைகளை கழுவி அரைத்து 2 கிராம் அளவு எடுத்து புளித்த மோரில் கலந்து குடித்தால் மூலக்கடுப்பு குணமாகும்.

இலந்தை துளிர்களை அரைத்து கொப்பளங்கள் மீது வைத்துக் கட்டினால் அவை பழுத்து உடையும்.

இலந்தை பழங்களை 20 கிராம் அளவு காலை, மாலை 40 நாட்கள் சாப்பிட்டு வர கோவைக்கட்டு, ஆஸ்துமா நீங்கும்.

இலந்தை மரப்பட்டையை உலர்த்தி தூள் செய்து ஆறாத புண்கள் மீது தூவி துணியால் சுற்றிக் கட்டினால் அவை விரைவில் ஆறும்.

இலந்தைமரப்பட்டையை நீரில் போட்டுக் காய்ச்சி 30 மில்லி அளவு காலை, மாலை குடித்தால் காய்ச்சல் தணியும்.

இலந்தைப் பட்டையிலிருந்து தயாரிக்கப்படும் தைலத்தைத் தடவிவர தோலில் ஏற்படும் கறுப்புப் படைகள் அகலும். இலந்தை வேர்ப் பட்டையை உலர்த்தி இடித்து அரித்து 1 கிராம் அளவு வெந்நீரில் உட்கொள்ள மலம் இளகும்.

இலந்தை மரப்பட்டையை பொடித்து அவித்து அந்த நீரால் வாத நோயாளிகளை குளிப்பாட்ட வரத வலி தணியும்.

மாதுளம் பட்டை, இலந்தை மரப்பட்டை ஒவ்வொன்றும் சம அளவு எடுத்து 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக் காய்ச்சி 30 மில்லி காலை, மாலை 5 நாட்கள் எடுக்க சீதபேதி, வயிற்றுப் போக்கு குணமாகும்.

ஒரு கைப்பிடியளவு கொழுந்து இலைகளை புதுச்சட்டியில் போட்டு நன்றாக வதக்கி அதில் 10 கிராம் வெங்காயத்தையும் வைத்து 400 மில்லி நீர்விட்டு 100 மில்லியாக சுண்டக் காய்ச்சி 30 மில்லி காலை, மாலை 7 நாட்கள் குடித்து வர உடற்சூடு தணியும். தினமும் புதிய குடிநீர் காய்ச்சி பயன்படுத்தல் வேண்டும். ஒரு கைப்பிடியளவு கொழுந்து இலைகளை மைபோல அரைத்து உரித்த உள்ளியின் பற்கள் 10உம், 5கிராம் மிளகையும் வைத்து மறுபடி அரைத்து எடுத்த விழுதை வாயில் போட்டு விழுங்கி வெந்நீர் குடிக்க விடாக் காய்ச்சல் தணியும்.



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

### இலந்தை அரப்பு

இலந்தை மரத்தின் தண்டுகளில் காணப்படும் புற்று ஆகும்.(Galls) இதுவும் மருத்துவ முக்கியத்துவமுடையது. சித்த மருத்துவ நூல்கள் இதனை தம்பலம் எனக் கூறுகின்றன.

இதனை சேகரித்து உலர்த்தி வெந்நீரில் பிசைந்து குழந்தைகளுக்கு தலையில் தேய்த்து முழுகிவர குழந்தைகளுக்கு ஏற்படும் உள்நாக்கு வளர்ச்சி, இலசுன தாபிதம் (Tonsilitis) ஆகியவை நீங்கும். பொடுகும் அகலும்.

தற்போது இலந்தை மரங்களின் பரம்பல் குறைந்து அருகி, அழிந்து வரும் ஒரு இனமாக இனங்காணப்பட்டுள்ளது. வளமில்லாத மண்களில் வளரக் கூடியது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "அன்னையாய் வீற்றிருந்து அனுதினமும் அடியார்க்கு அருள் புரியும் நயினை ஸ்ரீ நாகபூஷணி"

"பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்
பேணலால் அன்னை பெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பிய அனைத்தும்
உதவலால் அன்னை எக்கலையும்
சொற்றதாலன்னை உலகொடுவானும்
தொழுதலால் அன்னை என்றென்றும்
பற்றதாங் கருணை பொழிதலாலன்னை
பராபரை நாகபூஷணியாள்"

## இன்று ஆடிப்பூர விழா

மண்ணில் நல்ல வண்ணம் வாழ வழிகாட்டி நிற்கும் அன்னை ஸ்ரீநாகபூஷணி அம்பிகையின் ஆடிப்பூர உற்சவம் இன்று (26.07.2017) புதன்கிழமை நடை பெறுகின்றது.

உயிர்கள் உய்யும் வண்ணம் எம்பெருமானாகிய சிவபெருமான் தனது சக்தியைப் பதித்தருளிய இடங்கள் அறுபத்து நான்கு ஆகும். இவை சக்தி பீடங்கள் எனப் போற்றப்படும். காசியில் விசாலாட்சியாகவும் காஞ்சியில் காமாட்சியாகவும் மதுரையில் மீனாட்சியாகவும் திரு நாமங்களைக் கொண்ட பேரருள் சக்தியானவள் நயினையம்பதி என்னும் மணிபல்லவத்திலே "புவனேஸ்வரி"யாக எழுந்தருளி புவனேஸ்வரி பீடத்தினை அலங்கரித்துக்கொண்டு நாகபூஷணி , நாகேஸ்வரி, நாகராஜேஸ்வரி என்னும் திருநாமங்களுடன் அருளாட்சி நடத்தி வருகின்றாள். நாகம் வழிபட்டதால், நாகத்தால் பூஜிக்கப்பட்டதால் அன்னைக்கு இத்திருநாமங்கள் அமைந்தது என்பது ஆன்றோர் கருத்தாகும்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற சிறப்புகளைக் கொண்டமைந்துள்ளதும் இவ்வாலயமாகும். காலாதிகாலமாக முழு நம்பிக்கையோடு அம்பாளை வழிபட்டு நற்பேறு பெற்றோர் பலர் நயினை ஸ்ரீநாகபூஷணியை வந்து தரிசியுங்கள். அம்பிகையின் அற்புதங்களை நயினையில் பாருங்கள். நயினை நாகபூஷணியே பாம்பாகவும், நாகமாகவும் உருவெடுத்துத் தன்னை அடியார்களுக்கு வெளிக்காட்டிக் கனவிலும் நனவிலும் ஆடி அசைந்து அருளாட்சி செய்கின்ற பேரற்புதத்தை விபரிக்க முடியாது. குழந்தைப் பேற்றையும், குழந்தைகளைக் காப்பாற்றும் பெருமையையும் உடையவள் நயினை ஸ்ரீ நாகபூஷணி, சாந்தியும் சாந்நித்தியமும் அருளும் அனுக்கிரகமும் நிறைந்த அற்புத நாயகியாக நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் விளங்குகின்றாள். அலை கடலிலே தினமும் அடியார்கள் அம்பாளை நெக்குருக நின்று நினைந்து வருகின்ற பக்தியே வியக்கத்தக்கதாகும். விபரிக்கமுடியாது. அனலைதீவு நாகதம்பிரான் ஆலயத்தின் பக்கமாக ஆகாயத்தில் வட்டமிடும் கருடப் பறவையைக் காணும் அடியார்களது மெய்ப்பாடு உணர்வு பூர்வமானது. ஆண்டுதோறும் ஆனிமாதத்தில் வருடாந்த உற்சவம் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றது. உற்சவ காலங்களில் நயினையில் பக்தி வெள்ளம் கரைபுரண்டோடும்.



வருடாந்த உற்சவத்திற்கு அடுத்தபடியாக தைப்பூசம், ஆடிப்பூரம் என்பன பெரும் உற்சவமாக நடைபெற்று வருகின்றது.

ஆடி மாதம் பிறந்துவிட்டால் ஆலயங்களில் பல விழாக்கள் இடம்பெற்று வருவதுண்டு. ஆடிப்பிறப்பு நாளிலிருந்து ஆடிப்பூரம், ஆடிக் கிருத்திகை, ஆடிச் செவ்வாய், ஆடி வெள்ளி, ஆடிப்பெருக்கு, ஆடிப் பௌர்ணமி, ஆடி அமாவாசை எனச் சிறப்பான வழிபாடுகள் இம் மாதத்தில் இடம்பெற்று வருகின்றன. ஆலயங்களில் அம்பிகைக்கு உற்சவங்கள் நடைபெறுகின்றன. நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூர விழா மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இவ் வருட ஆடிப்பூர விழா இன்று (26.07.2017) புதன்கிழமை நடைபெறுகின்றது.

தொடர்ந்து ஒன்பது நாட்கள் கிரியைகள் நடைபெற்று இறுதி பத்தாவது நாளன்று ஆடிப்பூர உற்சவம் நடைபெறுகின்றது. முதல் நாளன்று ஆரம்பிக்கப்பட்ட இலட்சார்ச்சனை ஆடிப்பூரத் தினத்தன்று பூர்த்தியாகி அம்பாளுக்கு 1008 மகா சங்காபிஷேகம், விசேட தீபாராதனைகள் என்பன இடம்பெறும். வசந்த மண்டபத்தில் அம்பாள் அழகுக்கொருவரும் இல்லாத ஆனந்தவல்லியாக வீற்றிருக்கின்ற அழகுக் காட்சியைக் காணக் கண்கள் கோடி வேண்டும். நேரில் நயினையம்பதிக்கு வந்து அம்பாளின் அருளாட்சியைக் கண்டால் தான் அடியார்களது துன்ப துயரங்களெல்லாம் நீங்கும். இந்த நம்பிக்கையில்தான் அடியார்கள் நயினையம்பதிக்கு உற்சவ காலங்களில் மட்டுமல்லாது நாள்தோறும் வருகை தருகின்றார்கள். அம்பாள் ஆரோகணித்து அடியார்கள் அருளாட்சி வேண்டி சூழ்ந்து வர அழகிய தாமரைப்பூ வாகனத்தில் எழுந்தருளி வீதியுலா வருகின்ற அழகுக் காட்சியும் இடம்பெறும். ஆடிப்பூர உற்வசத்திலன்று அமுதசுரபி அன்னதான சபையினரும் அன்னதானம் வழங்கவுள்ளனர்.

சாந்தியும் சமாதானமும் ஏற்பட்டு மக்கள் எல்லோரும் நிம்மதியோடும் சகல நலன்களோடும் வாழ அருள்புரிய வேண்டி எல்லாம் வல்ல நயினை ஸ்ரீநாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திப்போமாக.

"வாருங்கள் எல்லோரும் வாழ்த்துவோம் அம்பிகையை
சேருங்கள் ஒன்றாய் நயினையில் ஆடிப்பூர விழாக்காண"

**நயினை நா.க.குமாரசூரியர்**

# நல்லாட்சியில் துப்பாக்கிச் சூடுகள்தான் மிச்சம் தமிழர்கள் புதிய பாதையில் அணிதிரள வேண்டும்

## முன்னாள் பிரதியமைச்சர் கருணா அழைக்கிறார்

(கொழும்பு)

நல்லாட்சி என்று வெளியுலகுக்கு கூறிக் கொள்கின்ற அடாவடி ஆட்சியில் துப்பாக்கிச் சூடுகள்தான் மிச்சம். அதனால் தமிழர்கள் புதிய பாதையில் அணிதிரள வேண்டும் என மீள் குடியேற்றத்துக்கான முன்னாள் பிரதியமைச்சரும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா அம்மான்) அறைகூவல் விடுப்பதாகக் கூறினார்.



தற்போதைய நாட்டு நடப்புக்கள் தமிழர்களுக்கு நல்லதாக இல்லை என்றும் அவர் கவலை வெளியிட்டார்.

இது தொடர்பாக நேற்று செவ்வாய்க்கிழமை ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது,

தமிழர்களை முஸ்லிம்களிடம் இருந்து மீட்பதற்கான போராட்டத்தில் வடக்கு கிழக்குத் தமிழர்கள் இணைந்து கொள்ள வேண்டும்.

நல்லாட்சி என்று கூறிக் கொண்டு பொய் ஆட்சியும் அடாவடி ஆட்சியும் நடத்தும் இந்த அரசாங்கத்தின் அடாவடித்தனம் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போகின்றது.

இந்த ஒரு மாத காலப் பகுதிக்குள் மூன்று சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வடக்கிலே இருவரும், மட்டக்களப்பில் ஆற்று மணல் ஏற்றிய ஒரு இளைஞனும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

அன்றைய ஜே. ஆர் ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் தமிழ் மக்கள் மீது இனப்படுகொலையை நடத்தி 3 ஆயிரம் அப்பாவி தமிழ்மக்களை படுகொலை செய்த ஜூலை கலவர நாள்.

தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கமும் இதை மீண்டும் ஆரம்பித்து விடுமோ என்ற அச்சம் வடகிழக்கில் ஏற்பட்டுள்ளது.

நீதிபதி இளஞ்செழியன் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சி பாரிய சந்தேகத்தை உருவாக்கியுள்ளது.

அரசுக்கு வக்காளத்து வாங்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கூத்தாடிகள் இதை கண்டும் காணால் அரசுக்கு வால்பிடித்து வருகின்றார்கள்.

அன்றைய நாள்தான் கடந்த 1983 ஆம் ஆண்டு பல இளைஞர்களின் தலைவிதியை மாற்றியமைத்த நாள்.

நானும் அதற்கு விதிவிலக்கல்ல.

பல கற்பனைகளுடன் கல்வியும் வீடும் என்றிருந்த நாங்கள் புத்தகங்களை வீசி எறிந்து விட்டு அரச பயங்கரவாதிகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்திய நாள்.

அன்றிருந்த இளைஞர்கள் இயக்க வேறுபாடின்றி தமிழ் மக்களுக்கு ஆயுதப் போராட்டம்தான் விடிவைத் தரும் என்று நம்பிப் புறப்பட்டார்கள்.

பின்பு பல இழப்புக்கள், சூழ்ச்சிகள், தலைமைப் போட்டிகள், சகோதரப் படுகொலைகள் என்றெல்லாம் எமது போராட்டம் சிக்குண்டு முள்ளிவாய்க்காலுடன் முடிவிற்கு வந்து நிற்கின்றது.

வேட்டி கேட்டுப்போய் கோவணமும் இல்லாமல் வந்த கதையாகவே தமிழர்களின் தலைவிதி மாறியுள்ளது.

இன்றும் அதேசமயம் போட்டியும் பொறாமையும் பிரதேச வாதமும் தமிழ் தலைமைகளிடம் மாறவில்லை.

கிழக்கில் முஸ்லிம் ஆதிக்கம் வடக்கில் தலைமைப் போட்டிகள் என தமிழ் சமூகம் சிக்கித் தவிக்கின்றது.

இதில் இருந்து எமது சமூகத்தை விடுவிக்க வேண்டுமானால் பழைமைவாத சுயநல அரசியல்வாதிகளை தூக்கி எறிந்து விட்டு துணிச்சல் மிக்க புதுமையான அரசியல் தலைமைகளை எமது இளைஞர் சமூகம் உருவாக்க வேண்டும்.

இன்னும்சம்பந்தர், மாவை போன்ற சுயநல அரசியல் வாதிகளுக்குப் பின்னால் சென்றால் எஞ்சி இருக்கும் எமது தமிழினத்தை நாம் அகராதியில்தான் தேடிப் பார்க்க வேண்டிவரும்.

அவர்களும் ரோசம் சுரணையில்லாமல் தீர்வை பெற்றுத் தருவோம் என்று கூறிக்கூறி இந்த காட்டு மிராண்டி அரசுடன் [illegible] கொண்டு சுகபோகங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த மானங்கெட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ரணில் அரசும் கிழக்கை முஸ்லிம்களுக்கு தாரைவார்ப்பதில் உறுதியாக உள்ளார்கள்.

இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்ட வேண்டுமென்றால் தமிழர்களாகிய நாங்கள் வேறுபாடின்றி ஒற்றுமைப்பட வேண்டும்.

குறிப்பாக வருகின்ற கிழக்கு மாகாண தேர்தலில் தேசியம் என்று பேசி ஏமாற்றுகின்ற தமிழ்த்தேசியக்கூட்டமைப்பை தூக்கி எறிந்து விட்டு ஒரு தமிழ் முதலமைச்சரை உருவாக்குவதற்கு கிழக்கு தமிழ் சமூகம் முன்வரவேண்டும். இதற்கான பாதையை நாம் வடிவமைத்துள்ளோம்.

தனியொரு மாற்று தமிழ் சக்தியாக தனித்து போட்டியிடவுள்ளோம். இதில் வேறுபாடில்லாமல் கிழக்கு வாழ் தமிழ் மக்களை எங்களின் பின்னால் அணிதிரளும்படி அன்பாக வேண்டிக் கொள்கின்றேன்.

இது வெறும் பதவிக்கோ புகழுக்கான போராட்டம் அல்ல. தமிழர்களை முஸ்லிம்களிடம் இருந்து மீட்பதற்கான போராட்டம். இந்தப் போராட்டத்திற்கு வடக்கு வாழ் தமிழ் மக்களும் குறிப்பாக புலம்பெயர்ந்து வாழும் எங்கள் உறவுகளும் எங்களுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கும்படி பணிவாக வேண்டிக்கொள்கின்றேன்" எனத் தெரிவித்துள்ளார். (இ-3)

# பொலிஸார் துப்பாக்கிச்சூடு! அ'புரத்தில் ஒருவர் மரணம்

(கொழும்பு)

அநுராதபுரத்தில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியாகியுள்ளார்.

அநுராதபுரம் - மீகெல்லேவ விகாரையில் உள்ள புத்தரின் சிலை மற்றும் ஏனைய சில பெறுமதியான பொருட்களை மோட்டார் சைக் கிளில் சென்ற இரண்டு கொள்ளையர்கள் நேற்று முன்தினம் இரவு கொள்ளையடிக்க முயற்சித்துள்ளனர்.

இதன்போது, கொள்ளையர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றுள்ளது.


இதில், பொலிஸார்மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலியாகியுள்ளார். அத்துடன், மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையையும் அசைத்து விடலாம் எமது இராணுவத்தை முடியாது

## இந்தியாவை மிரட்டும் சீனா



(பீஜிங்)

மலையை கூட அசைத்து விடலாம். சீன மக்கள் விடுதலை இராணுவ படையை அசைக்கக்கூட முடியாதென இந்தியாவுக்கு நேரடியாக சீனா எச்சரிக்கை விடுத்து உள்ளது.

சர்ச்சைக்குரிய இந்தியா, சீன, பூட்டான் எல்லையில் சீனா பாதை அமைக்கும் பணியை நடத்தி வருகிறது. இதற்கு பூடான் கடும் எதிர்ப்பு தெரிவித்து சீனாவுக்கு கடிதம் எழுதியது.

இதனால் அங்கு இந்திய படைகள் குவிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து இந்தியா - சீனா இடையே போர் பதற்றம் ஏற்பட்டு இருக்கிறது.

இந்நிலையில் சீன இராணுவ அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ஊகியான் அந்நாட்டு தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளதாவது,

பாதுகாப்பு இறையாண்மையை சீர்குலைக்கும் வகையில் சீன எல்லையில் சட்டவிரோதமாக குவிக்கப்பட்டு இருக்கும் படைகள் அனைத்தையும் இந்தியா உடனடியாக வாபஸ் பெற வேண்டும். இதுபோன்ற தவறுகளை இந்தியா உடனடியாக திருத்திக்கொள்ள வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறோம். இல்லாவிட்டால் சீன படைகள் அதற்கு பதிலடி கொடுக்க தயங்காது.

இந்திய படைகளை வாபஸ் பெற்றால் மட்டுமே இந்த பிரச்சினை முடிவுக்கு வரும். எல்லையில் போர்ப்பதற்றத்தை தணிக்க இரு நாடுகள் இடையே கூட்டு முயற்சி அவசியம்.

சீனாவில் மக்கள் விடுதலை ராணுவம் உருவாக்கப்பட்டு 90 ஆண்டுகள் ஆகிறது. தேசிய இறையாண்மை, பிராந்திய ஒருங்கிணைப்புக்காக உருவாக்கப்பட்ட இந்த படை அசைக்க முடியாத அமைப்பாக உள்ளது. மலையை கூட எளிதாக அசைத்து விடலாம். ஆனால் இப்படையை அவ்வளவு எளிதாக யாரும் அசைக்க முடியாது.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக எல்லையில் நிறுத்தப்பட்டுள்ள இப்படையை தேவைப்பட்டால் அதிகரிக்கவும், பயிற்சி அளிக்கவும் முடிவு செய்து இருக்கிறோம். நாட்டின் பாதுகாப்புக்காக என்ன விலையை கொடுக்கவும் நாங்கள் தயங்க மாட்டோமென்று அவர் கூறியுள்ளார்.

சீன தலைநகர் பீஜிங்கில் பிரிக்ஸ் நாடுகளின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர்கள் கூட்டம் நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது. இதற்காக இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் சீனாவுக்கு செல்லவுள்ளார். இந்நிலையில் சீன இராணுவ அமைச்சக செய்தி தொடர்பாளர், இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுக்கும் வகையில் பேசியுள்ளது குறிப்பிடத்தக்கது. (3-8)

## போராளிகள் சுடப்படும் காணொலி தொடர்பில் விசாரணை வேண்டும்

### மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு எச்சரிக்கை

(ஜெனிவா)

போராளிகளாக இருக்கலாம் எனும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 20 பேரை லிபிய இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டமை தொடர்பில் விசாரணை மேற்கொள்ள வேண்டும் என மனித உரிமைகள் தொடர்பில் கண்காணிக்கும் குழுவொன்று எச்சரிக்கை விடுத்துள்ளது.

லிபிய இராணுவத்தினர் மேற்படி 20 பேரை முழங்காலில் நிற்கவைத்து அவர்களை பின்னாலிருந்து சுடுவது குறித்த காணொலி வெளியானதைத் தொடர்ந்தே



குறித்த் குழு நேற்று முன்தினம் திங்கட்கிழமை எச்சரிக்கை விடுத்துள்ளது.

இருப்பினும், குறித்த காணொலியில் தோன்றும் இராணுவ உடையணிந்தவர்கள் லிபிய தேசிய இராணுவத்தை சேர்ந்தவர்கள் அல்ல என அதன் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஆயினும், லிபிய தேசிய இராணுவத்தின் சிறப்பு படைகளின்தளபதிகுறித்த காணொலியில் தோன்றுகின்றார் எனவும்அது குறித்து தீவிர அக்கறை செலுத்தப்பட வேண்டும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

மஹ்மூத் அல் வெர்பாலி என அழைக்கப்படும் குறித்த சிறப்பு படைகளின் தளபதியை பதவியில் இருந்து நீக்குமாறு ஐ.நா ஏற்கனவே லிபியாவுக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (3-8)

## மாலைதீவு நாடாளுமன்றம் இராணுவத்தால் முற்றுகை



(மாலே)

மாலைதீவு நாடாளுமன்றம் அந்நாட்டு இராணுவத்தால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

அந்நாட்டு ஜனாதிபதி அப்துல்லா யாமினின் உத்தரவிற்கமைய இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந் நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மாலைதீவு சபாநாயகர் அப்துல்லா மஸிக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லா பிரேரணை மீதான வாக்கெடுப்பில்நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ள முடியாத வகையில் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தால்நாடாளுமன்றம் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் இந் நடவடிக்கை சட்டவிரோதமானது என அந்நாட்டு எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இதேவேளை, மாலைதீவில் ஜனாதிபதி ஆட்சி இடம்பெறுகின்ற நிலையில், சபாநாயகருக்கெதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில் லாப் பிரேரணையே குறித்த முற்றுகைக்கு காரணம் என தெரிவிக்கப்படுகின்றது. (3-8)

## மியன்மாரில் ஏற்பட்டுள்ள கடும் வெள்ளத்தால் உணவுத் தட்டுப்பாடு!

(நேபிடோ)

மியன்மாரில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினைத் தொடர்ந்து தற் போது உணவு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் புதிய நோய்கள் பரவி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நிலைமை காரணமாக மின்து பகுதியில் உள்ள சுமார் 5000 பேர் தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த மற்றொருவர், "நாம் உயிருடன் இருக்க வேண்டுமானால் நீர் மட்டம் குறைடையும் நேரங்களில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் நாம் உள்ளோம். அவ்வாறு மீன்பிடித்து எமது பசியைப் போக்கிக்கொண்டாலும், எமக்கு ஏற்பட்டுள்ள பட்டினி நிலைமை தீராது என தெரிவித்தார்.

இதேவேளை, மியன்மாரில் தொடரும் அடைமழை தொடர்ந்து நீடிக்கக் கூடும் என மியன்மாரின் வானிலை ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3-8)

## வெள்ளம் காரணமாக வெளியேற்றப்படும் மக்கள்

(டில்லி)

குஜராத், ஒடிசா, ராஜஸ்தான் வெள்ளத்தில் மூழ்கி உள்ளன. அங்குள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டு வருகிறார்கள்.

தென்மேற்கு பருவ மழை காரணமாக வடமாநிலங்களில் பல இடங்களில் பலத்த மழை பெய்து வருகிறது.

கடந்த 3 வாரங்களாக இடைவிடாது மழை பெய்கிறது. இதனால் ராஜஸ்தான், குஜராத், ஒடிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் பெரும்பாலான இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

வங்கக்கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக ஒடிசா மாநிலத்தில் ஏற்கனவே மிதமிஞ்சிய மழை பெய்திருந்தது.

அங்குள்ள பைதராணி, சுகர்னரேகா, புதாபலாங் ஆகிய ஆறுகளில் வெள்ளம் அபாயக் கட்டத்தை தாண்டி செல்கிறது.

இதேபோல் குஜராத் மாநிலத்தில் பெரும்பாலான இடங்களில் வெள்ளம் சூழ்ந்



துள்ளது. அகமதாபாத், பதான், பனாஸ் கந்தா ஆகியவற்றில் ஏராளமான கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அங்குள்ள மக்கள் வெளியேற்றப்பட்டு வருகிறார்கள்.

ராஜஸ்தான் மாநிலத்தில் பாலி, சிரோகி, ஜலோர் மாவட்டங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன. உதய்பூரில் வெள்ளம் சென்ற போது பாலத்தை கடக்க முயன்ற தாய் - மகளை வெள்ளம் இழுத்து சென்றது. இதில் இருவரும் உயிரிழந்தனர். சில இடங்களில் மக்கள் வெள்ளத்தில் சிக்கி வெளியேற முடியாமல் தவிக்கின்றனர். அவர்களை இராணுவ உலங்கு வானூர்தி மூலம் வெளியேற்றி வருகிறார்கள்.

மேற்கு வங்காள மாநிலத்தில் பிர்பும், புருலியா, மேற்கு மிட்னாபூர், ஹூக்ளி மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. அங்கு அடுத்த 24 மணி நேரத்துக்கு இன்னும் அதிக மழை பெய்யும் என்று வானிலை இலாகா எச்சரித்துள்ளது. இதனால்பல்வேறு முன்னேற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் தற்கொலைத் தாக்குதல்

# 20 பேர் உயிரிழப்பு 30 பேர் காயம்!



(லாகூர்)

பாகிஸ்தான் தலைநகர் லாகூரில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் சுமார் 20 பேர் உயிரிழந்துள்ளதோடு, 30 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர்.

பஞ்சாப் மாநில முதல்வர் ஷெபாஷ் ஷெரீப்பின் வீட்டிற்கு அருகே நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் ஜின்னா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடுமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த பிரதேசத்தில் பணியில் அமர்த்தப்பட்டிருந்த பொலீஸாரை இலக்கு வைத்தே இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர்கள் அடையாளம் காணப்படாத நிலையில், மீட்பு நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

லாகூரில் இவ்வருடத்தில் நடத்தப்பட்ட மூன்றாவது மிகப்பெரிய தாக்குதல் இதுவாகும். கடந்த பெப்ரவரி மாதத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 14 பேரும் கடந்த ஏப்ரல் மாதத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 6 பேரும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3-8)

# நாயுடன் பேச முடியும்

## அமெரிக்க பேராசிரியர் தகவல்



(நியூயோர்க்)

இன்னும் 10 ஆண்டுகளில் 'மொழிபெயர்ப்பு கருவி உதவியுடன் நாயுடன் பேச முடியும் என அமெரிக்க பேராசிரியர் ஆய்வு கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

வீட்டில் வளர்க்கப்படும் செல்ல நாய்கள் தங்களது எஜமானரை பார்த்து குரைக்கும். அதன் மூலம் தனது தேவையை அது வெளிப்படுத்துகிறது. ஆனால் பெரும்பாலானோருக்கு தெரிவதில்லை.

அக்குறையை போக்க கணனி மொழிபெயர்ப்பு கருவி உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் வடக்கு அரிசோனா பல்கலைக்கழக பேராசிரியர் கான்ஸ்லோ பான்ட்சி கோப் இதை தயாரித்து இருக்கிறார்.

மிசிசிப்பி பள்ளத்தாக்கு பகுதியில் வாழும் நாய்களிடம் அக்கருவியை பொருத்தி பரிசோதனை முறையில் ஆய்வு செய்தார். அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளார்.

அதன்மூலம் இன்னும் 10 ஆண்டுகளில் நாய்களுடன் பேச முடியும் என அவர் தனது ஆய்வு கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

அதே முறையில் வீட்டில் வளர்க்கப்படும் பூனைகளுடன் பேச முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.(3-8)

# இங்கிலாந்தில் மிதக்கும் காற்றாலை

## கடல்நீரில் மின்சாரம் எடுக்க திட்டம்

(லண்டன்)

நிலக்கரி, காற்று போன்றவற்றில் இருந்து மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. தற்போது இங்கிலாந்தில் உலகின் முதல் மிதக்கும் காற்றாலை தண்ணீரில் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்கு மிதக்கும் காற்றாலை என பெயரிடப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் ஸ்கொட்லாந்து கடலில் அமைக்கப்பட்டுள்ளது. மிதக்கும் படகில் காற்றாலை நிறுவப்பட்டுள்ளது.

அதன் அடியில் கடலுக்குள் மிக உயரமான டர்பன்கள் பொருத்தப்பட்டுள்ளன. அவை கடல் நீரை சுழற்றும் போது காற்றாலையின் காற்றாடி சுற்றும் அதன் சக்தியில் மின்சாரம் உருவாகிறது. இதற்கு 'ஹைவின்ட்' என பெயரிட்டுள்ளனர்.

இந்த மின் திட்டத்தை நோர்வேயை சேர்ந்த ஸ்டேடோயில் நிறுவனம் நடைமுறைப்படுத்துகிறது.

இதன் பரிசோதனை ஓட்டம் சமீபத்தில் நடத்தப்பட்டது. அதன் மூலம் 20 ஆயிரம் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்க முடியும்.

இந்த தகவலை ஹைவின்ட் திட்ட இயக்குநர் லீப் டெல்ப் தெரிவித்தார். இதன் மூலம் மின்சாரம் தயாரிக்கும் செலவு குறையும் என தெரிவித்தார்.

ஹைவின்ட்' திட்டத்தில் பயன்படுத்தப்படும் டர்பன்கள் லண்டனில் உள்ள 'பிக் பென்' கடிகார கோபுரத்தை விட மிக உயரமானது.



அதாவது பிக்பென் கோபுரம் 96 மீற்றர் உயரம் உடையது. ஆனால் ஹைவின்ட் டர்பன்கள் 175 மீற்றர் உயரமானவை. இதன் மூலம் அதிக மின்சாரம் தயாரிக்க முடியும் என்றும் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இது உலகின் முதல் மிதக்கும் காற்றாலையாகும். (3-8)

# அமெரிக்க கண்காணிப்பு விமானத்தை இடைமறித்த சீன ஜெட் விமானங்கள்

(பீஜிங்)

கிழக்கு சீன கடல் எல்லைக்குள் பறந்த அமெரிக்க கண்காணிப்பு விமானத்தை 2 சீன போர் விமானங்கள் இடைமறித்ததால் பதற்றம் ஏற்பட்டது.

தென் சீனக் கடலில் தன்னுடைய உரிமையை நிலைநாட்ட சீனா முயற்சி செய்து வருகிறது. இதனிடையே, தென் சீன கடலில் கதிர்வீச்சைக் கண்டறியும் பணியில் அமெரிக்க விமானம் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், கிழக்கு சீன கடலில் கதிர்வீச்சைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க விமானத்தை சீன ஜெட் விமானங்கள் இடைமறித்ததாக அமெரிக்க விமானப் படை தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் இபி-3 விமானத்திற்கு மிக நெருக்கமாக சீனாவின் ஜே-10 விமானம் வந்ததாக அமெரிக்கா வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன விமானம் நெருங்கி வந்ததை அடுத்து அமெரிக்க விமானம் தனது பாதையை மாற்றி சென்றது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, இதேபோல் தென் சீன கடலில் கதிர்வீச்சைக் கண்டறியும் பணியில் ஈடுபட்டிருந்த அமெரிக்க விமானத்தை சீன ஜெட் விமானங்கள் கடந்த மே மாதம் இடைமறித்தது குறிப்பிடத்தக்கது. (3-8)

# டில்லியில் கோலாகல விழா

## 14ஆவது ஜனாதிபதியாக பதவியேற்றார் ராம்நாத் கோவிந்த்

(டில்லி)

முப்படை அணிவகுப்புடன் டில்லியில் நடைபெற்ற கோலாகல விழாவில் இந்தியாவின் 14-வது ஜனாதிபதியாக ராம்நாத் கோவிந்த் நேற்று பதவி ஏற்றார்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை நாட்டின் 14 ஆவது ஜனாதிபதி பதவி ஏற்பு விழா நிகழ்ச்சிகள் தொடங்கியது. இதையொட்டி டில்லியில் ஜனாதிபதி மாளிகை மற்றும் பாராளுமன்ற வளாகம் கோலாகலமாக காணப்பட்டன. பலத்த பாதுகாப்புடன் ஜனாதிபதி பதவி ஏற்பு விழா நடந்தது.



குதிரைப்படை அணிவகுப்பு செல்ல ராம்நாத் கோவிந்தும், பிரணாப்முகர்ஜியும் பாரம்பரிய காரில் அழைத்து வரப்பட்டனர். ஜனாதிபதி மாளிகையில் இருந்து பாராளுமன்ற வளாகம் வரை அவர்கள் அழைத்து வரப்பட்ட காட்சி கண்களை கவரும் வகையில் அமைந்திருந்தது.

அவருக்கு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஜே. எஸ்.கேஹர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அதன்பின் அவர் அதற்கான கோப்பில் கையொப்பமிட்டார்.

பதவி ஏற்பு விழா முடிந்ததும் புதிய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து செல்லப்பட்டார். அவருக்கு ஜனாதிபதி மாளிகையில் பாதுகாப்பு வீரர்கள் அணி வகுத்து நின்று உற்சாக வரவேற்பு கொடுத்தனர். (3-8)

# ரஷ்யா மீது புதிய தடைகள்

## வெள்ளை மாளிகை தயக்கம்

(மொஸ்கோ)

ரஷ்யாவுக்கு எதிராக புதிய பொருளாதார தடைகளை விதிப்பதற்கான சட்டத்திற்கு அமெரிக்க காங்கிரஸில் இணக்கம் ஏற்பட்டிருக்கும் நிலையில் வெள்ளை மாளிகை அதிகாரிகள் மாறுபட்ட செய்திகளை வழங்கி வருகின்றனர்.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புக்கு எந்த ஒரு தடையையும் நீக்கும் அதிகாரமும் இந்த சட்டங்களில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கு அவர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

இச்சட்டமூலத்தில் கைச்சாத்திடுவதா, இல்லையா என்பது குறித்து ஜனாதிபதி இன்னும் முடிவு எடுக்கவில்லை என்று வெள்ளை மாளிகையின் புதிய தகவல் தொடர்பு இயக்குநர் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இச்சட்டத்திற்கு வெள்ளை மாளிகை ஆதரவளிக்கும் என்று ட்ரம்ப் நிர்வாகத்தின் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க தேர்தலில் ரஷ்யா தலையிட்டதான குற்றச்சாட்டுக்கு தண்டனை வழங்கும் வகையிலேயே இச்சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதில் ட்ரம்ப் தனது தேர்தல் பிரசாரத்தில் ரஷ்யாவுடன் [illegible] சேர்ந்திருந்ததாகவும் குற்றச்சாட்டுள்ளது.

ரஷ்யா விடயத்தில் ட்ரம்பின் நிலைப்பாடு எப்படி இருந்தபோதும் ரஷ்யா மீதான கடும் நிலைப்பாட்டை தொடரும் வகையில் புதிய சட்டத்திற்கு அமெரிக்க காங்கிரஸின் குடியரசு மற்றும் ஜனநாயக கட்சிகளுக்கு இடையில் கடந்த சனிக்கிழமை இணக்கம் ஏற்பட்டது.

இச்சட்டத்தில் 2014 ஆம் ஆண்டு ரஷ்யா கிரிமியா பிராந்தியத்தை தனது ஆட்புலத்திற்குள் இணைத்தது. அதேபோன்று அமெரிக்க தேர்தலில் [illegible] தலையீடு குறித்த குற்றச்சாட்டுகளுக்கு புதிய தடைகளை விதிக்க அனுமதி அளிக்கிறது.

அதேபோன்று ஈரான் மற்றும் வட கொரியா மீது மேலும் தடைகளை விதிப்பதற்கும் இச்சட்டமூலத்தில் சாத்தியங்கள் உள்ளன.

இச்சட்டமூலம் ஏற்கனவே செனட் மற்றும் பிரதிநிதி கள் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இச்சட்டமூலத்தை ஜனாதிபதியால் நிராகரிக்க அதிகாரம் உள்ளபோதும் அவ்வாறு அவர் நடந்து கொண்டால் ரஷ்யாவுடன் அவரின் தொடர்பு பற்றிய சந்தேகத்தை வலுப்பெறச்செய்யும். (3-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளும் கட்சியை உடைக்க பசில் ராஜபக்ஷவுக்கு உதவும் வெளி.புலனாய்வு அமைப்பு

இலங்கை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்கள் சிலரை, தமது பக்கம் இழுப்பதற்கு பசில் ராஜபக்ஷ மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு, வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்பு ஒன்று உதவி வழங்கி வருவதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரச புலனாய்வுச் சேவை இதனை உறுதி செய்திருப்பதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

எனினும், மீண்டும் மகிந்த ராஜபக்ஷவைப் பதவிக்குக் கொண்டு வரும் நோக்கில் வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்பு இந்த தலையீட்டை மேற்கொள்ளவில்லை என்றும், இலங்கை அரசாங்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் நோக்கிலேயே இவ்வாறு உதவிகள் வழங்கி வருவதாகவும் இலங்கை அரச உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 18 அமைச்சர்கள், அரசாங்கத்தை விட்டு வெளியேறலாம் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

எனினும், ஐந்து அல்லது ஆறு பேரே அவ்வாறு வெளியேறக் கூடும் என்று அந்த அரசாங்க அதிகாரி தெரிவித்துள்ளார்.

இவர்கள் பசில் ராஜபக்ஷவுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்தியுள்ளனர் என்றும் அந்த அதிகாரியை மேற்கோள் காட்டி கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# அரச வைத்திய அதிகாரிகள் பகிஷ்கரிப்பு; மக்கள் பாதிப்பு

அரச வைத்திய அதிகாரிகள் நேற்றுக் காலை 8 மணி முதல் மீண்டும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

வைத்தியபீட மாணவ செயற்குழுவின் ஏற்பாட்டாளர் ரயன் ஜயலத்தை கைது செய்வதற்கு முற்பட்ட சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட நிலை தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தும், சைட்டம் நிறுவனத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இந்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.



வைத்தியசாலைகளில் சில வைத்தியர்கள் கடமையில் ஈடுபட்டிருந்தாலும், சில வைத்தியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டிருந்தனர். இதனால் அங்கு சிகிச்சைக்காக வருகை தந்த பொதுமக்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் வீடு திரும்ப வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அத்தோடு தூர பிரதேசங்களிலிருந்து வருகை தந்த தோட்ட தொழிலாளர்கள் பாரிய பிரச்சினைக்கு முகங்கொடுத்தனர். மேலும் வெளி நோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் முழுமையாக செயலிழந்ததனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர்.

நுவரெலியா, ஹற்றன் டிக்கோயா, லிந்துலை, கொட்டகலை, டயகம, அக்கரப்பத்தனை போன்ற வைத்திய சாலையிலும் இவ்வாறான ஒரு நிலைமை காணப்பட்டது. (இ-7)

# இலஞ்ச குற்றச்சாட்டில் கைதான வைத்தியருக்கு மறியல் நீடிப்பு

இலஞ்ச குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட குளியாப்பிட்டி ஆதார வைத்தியசாலையின் விசேட வைத்தியர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, தனக்கு பிணை வழங்குமாறு சந்தேகநபர் கோரினார்.

எனினும், இதனை நிராகரித்த கொழும்பு பிரதம நீதவான் லால் ரணசிங்க பண்டார எதிர்வரும் 4ம் திகதி வரை அவரைத் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தனியார் ஆய்வு கூடமொன்றால் வெளியிடப்பட்ட வைத்திய அறிக்கையை ஏற்றுக் கொள்ள 75,000 ரூபா இலஞ்சம் பெற்றதாக இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த விடயம் தொடர்பான விசாரணைகள் இன்னும் நிறைவடையவில்லை என நீதிமன்றத்திற்கு நேற்று தெரியப்படுத்திய இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினர் சம்பவத்துடன் தொடர்புடைய சில ஆவணங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளனர்.

அத்துடன், இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட தனியார் ஆய்வுகூட ஊழியர் குறித்த விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக, ஆணைக்குழு நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இதற்கமைய சந்தேகநபரை ஐந்து இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# கொழும்பு துறைமுகத்தில் விமான நிலையம் அமைக்க திட்டம்-சம்பிக்க

கொழும்பு துறைமுகப் பகுதியில் விமான நிலையம் ஒன்றை அமைக்கும் திட்டத்தை, பெருநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க முன்வைத்துள்ளார்.

இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டால், கொழும்புத் துறைமுகம் பிராந்தியத்தில் வலுவான துறைமுகமாக மாற்றமடையும்.

10 ஆண்டுகளுக்குள் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தினால், கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் செல்லாமல், கொழும்பு கோட்டேயில் இருந்தே மக்கள் பயணங்களை மேற்கொள்ள முடியும்.

பிராந்தியத்தில் வலுவான துறைமுகமாக கொழும்பு துறைமுகத்தை மாற்றும் வகையில், கிழக்கு, மேற்கு முனையங்கள் அடுத்த ஐந்து ஆண்டுகளுக்குள் கட்டப்படும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)



## இன்று ஒரு தகவல்

### ஒத்துழைப்பு இல்லையா?

ஒரு தொழிலையோ ஒரு குடும்பத்தையோ ஓர் அமைப்பையோ ஏன் - ஒரு சிறு செயலையோ கூட நல்லபடி நடத்திச் செல்ல விரும்பும் ஒருவர், எல்லோருடனும் இணக்கமாகவும், கைகோர்த்து நடக்கும் மன நிலையுடனும் செயற்பட வேண்டியது அவசியம்.

காரில் ஒரு டயர் பஞ்சரானால் கூட மற்ற மூன்று டயர்களும் பயன்படாமல் வெறுமனே இருக்க நேரிடுகின்றன. இதைப் பலர் உணருவதில்லை. மாறாக சொல் ஊசி கொண்டு குத்திப் பஞ்சராக்கி விட்டு வண்டி ஓடவில்லை, நகரவில்லை என்று புலம்புகிறார்கள்.

நம்மைச் சுற்றியுள்ள பலர் இலைமறை காயாக ஒத்துழையாமை இயக்கம் நடத்துவதற்கு மூன்று பெரிய காரணங்கள் தாம் இருக்க முடியும்.

ஒன்று சொற்களால் காயப்பட்டிருப்பது அல்லது போதுமான பாராட்டுக்களையோ உரிய அங்கீகாரமோ பெறாமல் இருப்பது.

இரண்டாவது இவர்களது தேவைகள் சரிவரப் பூர்த்தி செய்யப்படாமலிருப்பது அதாவது அதிருப்தி.

மூன்றாவது பல்வேறு சமயங்களில் நம் செயல்களால் எரிச்சல் அடைந்து இனம் புரியாத வெறுப்பைத் தங்கள் மனதிற்குள் வளர்த்துக் கொண்டிருப்பது.

நமக்கு ஒத்துழைப்புத் தர மறுப்பவர்கள் மேற்கூறிய மூன்று பிரிவுகளில் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதைக் கண்டு பிடிக்க வேண்டியதுதான் முதல் கட்ட வேலை.

நம்மிடத்தில் ஏகப்பட்ட குறைகளை வைத்துக் கொண்டு அவன் சரியில்லை என்று வருத்தப்பட்டதெல்லாம் முடிந்து போன விடயமாக இருக்கட்டும்.

முதல் பிரிவினர் இருக்கிறார்களே இவர்கள் அன்பு, பாசம், மரியாதை, பாராட்டு இவற்றுக்கே அடங்கிவிடுவார்கள். பணத்தையோ, பரிசையோ பெரிதாக எண்ணாதவர்கள். இவர்களை வளைத்துப் போட சென்டிமென்ட் வலை போதும். ஆனால் நாம்தான் கொஞ்சம் இறங்கிப் போக வேண்டும். இவர்கள் விடயத்தில் ரொம்பவும் கௌரவம் பார்க்கக் கூடாது.

இரண்டாவது ரகத்தினருக்கு மற்ற எதுவும் பெரிதல்ல. இவர்கள் கொஞ்சம் பேராசைக்காரர்கள். கேட்டதெல்லாம் இவர்களுக்குக் கிடைத்துவிட வேண்டும். இவர்கள் விடயத்தில் நாம் கொஞ்சம் விட்டுக் கொடுக்கவும் இழக்கவும் தயாராகி விட்டால் போதும். வழிக்கு வந்து விடுவார்கள்.

மூன்றாவது ரகத்தினர் மேற்கூறிய இரண்டு பிரிவிலும் அடங்காமல் நம்மைக் குறை கூறுவதிலேயே திருப்தி காண்கிறவர்கள். இவர்கள் விடயத்தில் இரண்டு வழி முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

ஒன்று, நம் செயல்கள் தவறு என்று இவர்கள் சுட்டிக் காட்டும்போது ஆமாமாம் என ஒப்புக் கொண்டுவிட வேண்டும். அடுத்ததாக அத்தகைய தவறு மறுபடி நேராதபடி பார்த்துக் கொண்டு என்னைத் திருத்திய பெருமை உனக்கு உண்டு என்று இவர்களுக்கு சொல் மகுடம் சூட்டி விட வேண்டும்.

இவ் வழிகளையெல்லாம் பின்பற்றுவதால் நமக்கும் சிறுசிறு இழப்புகள் ஏற்படும் என்பதென்னவோ உண்மை தான்.

ஆனால் பலன்களோ அவற்றையெல்லாம் சரிக்கட்டுமளவிற்குப் பன்மடங்காக இருக்கும் என்பது மட்டும் நிச்சயம்.

லேனா தமிழ்வாணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்

## ஜனாதிபதிக்கு வடக்கு–கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு மகஜர்

(யாழ்ப்பாணம்)

சட்டம் ஒழுங்கு நிலை நாட்டப்பட்டு மக்களின் பாது காப்பான ஜனநாயகமான வாழ்வு உறுதிப்படுத்தப்படு வதற்கு அவசியமான அனைத்து முயற்சிகளை யும் எடுக்க வேண்டுமென கோரி ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு வட கிழக்கு ஒருங்கிணைப்பு குழு யாழ்.மாவட்டச்செய லகத்தின் ஊடாக மகஜர் ஒன்றினை நேற்று அனுப்பி வைத்துள்ளது.

நல்லூர் வீதியில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்ப வத்தை கண்டித்து வடக்கு-கிழக்கு ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நேற் றைய தினம் யாழ். மாவட்ட செயலக முன்றலில் முன் னெடுக்கப்பட்டது. போராட்ட நிறைவில் தமது கோரிக் கைகளை ஜனாதி பதியிடம் தெரிவிக்குமாறு கோரி யாழ். மாவட்ட மேல திக அரச அதிபர் (காணி) எஸ்.முரளி தரனிடம் மகஜர் ஒன்றும் கையளித்திருந்தனர். குறித்த மகஜரில் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ் செழியனை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்கு தலுக்கு உரிய நீதி கோரு கிறோம்.

இலங்கையின் நீதித் துறையே இலங்கை மக் களின் உரிமைகளையும் ஜனநாயகத்தையும் பாது காக்கும் உயரிய அங்கமாக திகழ்கிறது. நீதித்துறையை சுய்ாதீனப்படுத்தி ஜனநா யகத்தையும் நல்லாட்சி யையும் ஏற்படுத்துவீர்கள் எனும் நம்பிக்கையுட னேயே இலங்கை மக்கள் தங்களுக்கும் அரசாங்கத் துக்கும் வாக்களித்து ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார். ஆனால் நீதித்துறையே தாக்குதலுக்கு உள்ளாகும் அளவுக்கு இன்று நிலைமை கள் மோசமடைந்துள்ளன.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து மேற் கொள்ளப்பட்ட தாக்குதல்கள் குறித்து அறிந்த நாம் மிகுந்த அதிர்ச்சிக்குள்ளாகியதோடு இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இலங்கையின் நீதிபதி ஒருவருக்கு ஏற்பட்டிருக்கும் இவ் அசாதாரண நிலைமை என்பது தற்காலத்தை அள விடக்கூடிய ஒரு எடு கோளா கவே விளங்குகின்றது. இச் சம்பவமானது நீதித்துறை க்கு மட்டுமன்றி நீதியை நிலைநாட்ட விளையும் எல் லோருக்கும் விடுக்கப்பட்ட ஒரு அச்சுறுத்தலாகவே பார்க்கப்பட வேண்டியுள் ளது.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் சட்டம் ஒழுங்கை நிலை நிறுத்தி நீதியை நிலை நாட்ட எடுத்த முயற்சிகள் மூலம் மக்களின் அபிமா னத்தைப் பெற்றுக் கொண் டவர். அவருடைய நீதித் துறைக்கான பங்களிப்புக் கள் மூலம் மக்களை நீதித் துறையின்பால் நம்பிக்கை கொள்ள வைத்தவர். இன்று அவரே தாக்குதலுக்கு இலக் காவது என்பது ஒட்டுமொத்த நீதித்துறையின் மீதும் விழுந்த தாக்குதல் என்றே கருதுகின்றோம்.

இத் தாக்குதல் சம்பவ மானது நன்கு திட்டமிடப் பட்டு நடத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தினையே காட்டி நிற்கின்றது. இதன் மூலம் இலங்கையில் நீதியை நிலைநிறுத்தவும் மனித உரிமைகளை மேம் படுத்தவும் பணியாற்றும் அனைவரினதும் பாது காப்பும் கேள்விக்குட்படுத் தப்பட்டுள்ளது

இலங்கையில் நல்லி ணக்கமும் நிலையான சமா தானமும் ஏற்படுவதற்கு அடிப்படையாயுள்ள நீதி முறைமை வலுப்படுத்தப்பட வேண்டிய இன்றைய கால கட்டத்தில் நீதிபதியே தாக் கப்படுவதானது இலங்கை யின் நல்லாட்சியையும் ஜனநாயகத் தன்மையை யும் உலக அரங்கில் கேள் விக்குள்ளாக்குகிறது.

எனவே மக்களின் நம் பிக்கைக்குரிய அரச தலை வர் எனும் வகையில் தாங் கள் நீதிபதி இளஞ்செழி யனை இலக்காகக் கொண்ட தாக்குதலுக்கு உரிய நீதி விசாரணை மேற்கொள்ள ஆவன செய்ய வேண்டு மெனக் கோருகிறோம். சட்டம் ஒழுங்கு நிலை நாட் டப்பட்டு மக்களின் பாது காப்பான ஜனநாயகமான வாழ்வு உறுதிப்படுத்தப் படுவதற்கு அவசியமான அனைத்து முயற்சிகளை யும் எடுக்க வேண்டுமெனத் தாங்களைக் கேட்டுக்கொள் கிறோம் என அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (இ-9)

## கறுப்பு ஜூலை ;லண்டனில் போராட்டம்



அரசியல் அபிலாசை களை தமிழர் வாழும் பிர தேசங்களில் உறுதியுடன் தொடர்ந்து எடுத்துரைக்க வேண்டும் என பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்பு குழு கோரிக்கை விடுத்துள் ளது.

கறுப்பு ஜூலை நினை வெழுச்சி போராட்டம் லண் டனில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. இலங்கை அரசின் தமிழின அழிப்பிற்கு எதிரான சர்வ தேச விசாரணை உறுதி செய்யப்பட வேண்டும். இலங்கை இராணுவத்தின ரால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் மீள கையளிக் கப்பட வேண்டும். அரசியல் கைதிகள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண் டும். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் உண்மை நிலை கண்ட றியப்பட வேண்டும், தமிழர் தாயகம், தேசியம், தன்னாட்சி உரிமை ஆகியவற்றின் அடிப் படையிலேயே தமிழர்க ளுக்கான அரசியல் தீர்வு அமைய வேண்டும்.

இதை உணர்ந்த சமூக மாக தொடர்ச்சியாக எங்கள் அரசியல் அபிலாசைகளை நாம் வாழும் தேசங்களில் உறுதியோடு எடுத்துரைப் போம் போன்ற கோரிக்கை களை முன்வைத்து தமிழர் ஒருங்கிணைப்பு குழுவி னால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நினைவு போராட்டத் தில் பெருமளவிலான புலம் பெயர் தமிழ் மக்கள் கலந்து கொண்டதுடன் பிரித்தானிய பிரதமருக்கு மகஜரும், பொதுமக்களுக்கு விழிப் புணர்வு துண்டுப்பிரசுரங் களும் கையளிக்கப்பட்டுள் ளன. (இ-9)

## விபத்தில் ஒருவரின் கால் முறிந்தது





யாழ்ப்பாணம் இலுப்பையடிச் சந்தியில் வடிரக வாக னமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானது. இச் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றது. ஆரிய குளத்தடியிலிருந்து திருநெல்வேலி நோக்கிச் சென்று கொண்டிருந்த வடிரக வாகனமும் நாவலர் வீதியிலிருந்து ஆனைப்பந்தி நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானது. இச் சம்பவத்தில் ஒருவர் கால் முறிந்த நிலையிலும் மற்றையவர் காயங் களுடனும் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். - (இ-3)

## போருக்குப் பின்னர் பெண்கள் எதிர்நோக்கும் சவால்கள்

### தேசியக் கருத்தரங்கு யாழில்

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் நடத்தும் போருக்குப் பின்னரான சூழ லில் வடபகுதி பெண்கள் எதிர் நோக்கும் சவால்கள் எனும் கருப் பொருளிலான தேசிய கருத்தரங்கு நாளை 27 ஆம் திகதி வியாழக் கிழமையும் மறுநாள் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழ மையும் காலை 9.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை யாழ். மாவட்டச் செய லக கேட்போர் கூடத்தில் இடம்பெறும். (இ-7)

## கண்டனம்

சட்டத்தினால் யாழ். மக் களைப் பாதுகாத்துக் கொண் டிருக்கும் நீதிபதி மாணிக் கவாசகர் இளஞ்செழியனை இலக்கு வைத்து கடந்த சனிக்கிழமை நடந்த கொலை முயற்சியை வன்மையாகக் கண்டிப் பதாக கம்பர்மலை கலைவாணி சனசமூக நிலையத்தினர் அறி வித்துள்ளனர். (இ-3-60)

## அர்ஜூன் அலோசியசின் இலத்திரனியல் சாதனங்கள்

## நேற்று ஒப்படைப்பு

பேர்பெச்வல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் நிறைவேற் றுப் பணிப்பாளர் அர்ஜூன் அலோசியசின் இலத்திர னியல் சாதனங்கள் ஒப்ப நேற்று ஒப்டைக்கப்பட்டுள் ளன. பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்தி வரும் ஜனாதிபதி ஆணைக் குழுவிடம் இந்த சாதனங்கள் ஒப்படைக்கப் பட்டுள்ளன.

அலோசியசின் மடிக் கணனி, தொலைபேசி உள்ளிட்ட இலத்திரனியல் சாதனங்கள் இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கொடுக்கல்-வாங்கல் மோசடி தொடர்பிலான விசாரணைகளுக்காக இந்த சாதனங்கள் தேவைப்படு வதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர். ஆணைக்குழு விடம் தெரிவித்திருந்த நிலையில் இந்தக் கோரிக் கையை ஏற்றுக் கொண்ட ஆணைக்குழு சாதனங் களை ஒப்படைக்குமாறு கோரியிருந்ததும் குறிப்பிடத் தக்கது. (இ-7)

## ஆற்றில் மூழ்கி தம்பி பலி! அண்ணன் வைத்தியசாலையில்

மட்டக்களப்பு கரடிய னாறு பகுதியில் நேற்று முன்தினம் நண்பகல் காயங்குடா கிராமத்தி லிருந்து 2 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள பாலமடு ஆற் றில் கொம்மாதுறை 10 ஆம் கட்டை சந்தியில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அண்ணனும் தம்பியும் உழவு இயந்திரத்தில் மண் ஏற்றிக்கொண்டிருந்த வேளை அந்தப்பகுதியால் சென்ற விசேட அதிரடிப்படையினர் உழவு இயந்திரத்தை நோக்கி துப்பாக்கிச்சூட்டை நடத்த, வேட்டுச்சத்தத்திற்கு பயந்து ஆற்றில் பாய்ந்த போது தம்பியான ச.மதுசன் (வயது-17) நீரில் மூழ்கி இறந்துள்ளதுடன் அண்ண ணான கிசாந்தன் (வயது-19) ஆபத்தான கட்டத்தை தாண்டி செங்கலடி வைத் தியசாலையில் சிகிச்சைக் காக அனுமதிக்கப்பட்டுள் ளார்.

மண் கடத்தலுக்கு பின்புலமாக இருக்கும் முக்கியஸ்தர்களை விடுத்து ஏழைகளை இராணுவம் மிரட்டுவது அதிகரித்துள் ளது. கடந்த வருடமும் உறு காமத்தைச் சேர்ந்த ஏழைத் தமிழர் இராணுவ துப்பாக்கி வேட்டுச்சத்தத்திற்கு பயந்து ஆற்றில் பாய்ந்து மூழ்கி இறந்தார். இதேபோன்று இந்த ஆண்டும் மற்றுமொரு தமிழ் இளைஞனின் உயிர் பலியெடுக்கப்பட்டுள்ளது என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விவகாரம்

# ஆணை பிறப்பித்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்

## அமைச்சர் கயந்த வலியுறுத்து

(கொழும்பு)

இராணுவ வீரர்களுக்கு எதிராக யுத்தக் குற்றச்சாட்டுக்களோ ஒழுங்கு நடவடிக்கைகளோ எடுக்கப்படாது. எனினும் ஆணை பிறப்பித்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என காணி மற்றும் நாடாளுமன்ற புனர்நிர்மாண அமைச்சரும் இணை அமைச்சரவைப் பேச்சாளருமான கயந்த கருணாதிலக தெரிவித்துள்ளார்.



சிறிகொத்தவில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது, 'இராணுவ வீரர்களை சட்டத்தின்முன் கொண்டுவந்து விசாரணை செய்யும்போது அதற்கு ஆணையிட்டவர்கள் தொடர்பான விபரங்களும் வெளிவரும். இதனால் தாம் இராணுவ வீரர்கள் மீது அன்புள்ளவர்கள் போன்று சிலர் நடிக்கின்றனர்.

இராணுவ வீரர்களின் கௌரவத்தை காப்பாற்ற வேண்டுமாயின் தவறு செய்தவர்களுக்கு எதிராக சட்டத்தை அமுல்படுத்த வேண்டும். இல்லையெனில் ஒருசிலர் புரிந்த தவறுகளுக்காக அனைத்து பழியையும் இராணுவமே பொறுப்பேற்கவேண்டி ஏற்படும்' என்றும் கயந்த தெரிவித்துள்ளார். (இ-7)

# பல்வேறு இன மக்களை நெருங்க வைத்த நீதிபதி

## துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து த.வி.கூ.ஆனந்தசங்கரி அறிக்கை

நீதிபதி இளஞ்செழியன் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலை முயற்சியை தமிழர் விடுதலைக் கூட்டணி மிக வன்மையாக கண்டிப்பதோடு இச்சம்பவத்தில் தன்னுயிரை அர்ப்பணித்த உப பொலிஸ் பரிசோதகர் ரணவத்தகே சரத் ஹேமச்சந்திரவின் அகால மரணத்தால், துயருற்று இருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு, அச்சம்பவத்தில் காயங்களுக்குள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் விரைவில் குணமடைய வேண்டுமென பிரார்த்திக்கின்றது.



இச்சம்பவம் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதா? அல்லது எதிர்பாராத விதமாக நடந்ததா? என்பதைப்பற்றி நாம் தெரிந்துகொள்ளாத போதிலும், ஏவப்பட்ட துப்பாக்கி வேட்டுகள் சில, நீதிபதிக்கு இலக்கு வைக்கப்பட்டதென்பது தெளிவாகிறது. மிகவும் பாராட்டத்தக்க விடயம் யாதெனில் இச்சம்பவம் ஆரம்பிக்கப்பட்டவுடன் நீதிபதியின் சிங்கள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் இருவரும் வாகனத்தை விட்டு இறங்கி தமிழரான நீதிபதிக்கு பாதுகாப்பு வழங்கினர்.

இதுபோன்ற சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் மிகவும் பீதியடைந்து தமக்கு பாதுகாப்புத்தேடி, சம்பவம் நடந்த இடத்தை விட்டு தள்ளியிருப்பதே பெருமளவில் வழக்கமாகும். ஆனால் இங்கு ஒருவர் மனத்துணிவுடன் தனக்கு ஏற்பட்டிருந்த ஆபத்தையும் பொருட்படுத்தாது சம்பவம் நிகழ்ந்த இடத்திலே பொறுமையுடன் காத்திருந்து காயமடைந்த இரு பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றார்.

இந்த அதிகாரிகளுக்கு நடந்தது நீதிபதியின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விடயமாக இருந்தாலும், எதிர்பாராதவிதமாக நடந்த இச்சம்பவம் நீதிபதியின் தவறினால் ஏற்பட்ட சம்பவமல்ல. என்றாலும் தனது உயிரை காப்பாற்ற தன்னுயிரையே அர்ப்பணித்தவரின் பெருமையை திரும்பத்திரும்பகூறிசிறுபிள்ளைபோல் தேம்பி அழுதமை அனைவரினதும் உள்ளத்தையும் நெகிழ வைத்தது.


இதற்கப்பால் தனது சொந்த சுயகௌரவத்தை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, உயிர் நீத்தவரின் மனைவி தனது கணவரின் உடலை பார்க்க வந்தவேளை நீதிபதி, அவரை மிக்க மனவேதனையுடனும் சோகத்துடனும் வரவேற்றமுறை அனைவரையும் அதிரவைத்தது.

அதுமட்டுமல்ல இவர் கையாண்ட அபூர்வ நடவடிக்கை இன,மத பேதமற்ற பல இலட்சக்கணக்கான இலங்கை வாழ் மக்களின் பாராட்டையும் பெற்றது. அவர் ஒரு நேர்மையான நீதிபதி என்பதையும் எந்த விடயத்திலும் நீதியாகவே செயற்படுவார் என்பதையும் உலகுக்கு உணர்த்தியது.

அவரின் பெருந்தன்மையை பாராட்டுவதானால் இன்னுமோர் முக்கிய விடயத்தை இங்கு குறிப்பிட வேண்டும். நாட்டில் விரும்பப்படாத சில சம்பவங்கள் ஏற்படாது தடுத்த பெருமை இவரையே சாரும். இது எதுவென நான் விளக்கமாகக்கூறத் தேவையில்லை. ஆனால் இந்த துன்பகரமான நேரத்திலும் கூட தேவையற்ற விமர்சனங்களுக்கு ஆளாகாமல் தனது நடவடிக்கை மூலம் அனைவரினதும் பாராட்டையும் பெற்றவர். அத்துடன் நாட்டில் வாழும் பல்வேறு இன மக்களை முன்பு இருந்ததிலும் பார்க்க நெருங்க வைத்தது.

நாட்டில் உள்ள நீதிபதிகள், சட்டத்தரணிகள், பல்கலைக்கழக மாணவர்கள், தமிழ் பொதுமக்கள் ஆகியோரின் ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்புக்களும் பல்வேறு நோக்கங்களைக் கொண்டிருந்தாலும் அனைத்தும் இந்த நாட்டில் வாழும் அனைவரும் ஒன்று என்பதை உலக்குக்கு எடுத்துக்காட்டுவதோடு ஒருவருக்கொருவர் அநீதி இழைப்பதை விரும்பவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது என வீ.ஆனந்தசங்கரி விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ-3)

## உண்மையான கதாநாயகன்! அமைச்சர் றிசாத் இரங்கல்




யாழ். நல்லூர் பகுதியில் நீதிபதி இளஞ்செழியனை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் உயிரிழந்த மெய்ப்பாதுகாவலர் ஹேமச்சந்திரவிற்கு வர்த்தகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் இரங்கல் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் தமது இரங்கல் செய்தியை பதிவிட்டுள்ளார்.

"ஒரு நிமிட மௌன அஞ்சலி உயிரிழந்த உபபொலிஸ் பரிசோதகர் ஹேமச்சந்திரவிற்கு கொடுக்கப்படும் மரியாதையாகும்.

இவருடைய குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கின்றேன்" என குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அமைச்சர் குறித்த பதிவுடன் ஹேமச்சந்திரவின் புகைப்படத்தில் A Real Hero (உண்மையான கதாநாயகன்) என எழுதப்பட்ட புகைப்படம் ஒன்றையும் பதிவேற்றம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## பணிப்புறக்கணிப்பை கைவிட்ட வைத்திய அதிகாரிகள் சங்கம்

(கொழும்பு)

சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவுடன் நடைபெற்ற கலந்துரையாடலை அடுத்து அரச வைத்தி அதிகாரிகள் சங்கத்தினர் பணிப்புறக்கணிப்பை கைவிட்டுள்ளனர்.

அமைச்சரிடமிருந்து சாதகமான பதில் கிடைத்துள்ள நிலையில் பணிப்புறக்கணிப்பை கைவிட்டுள்ளதாக மேற்படி சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டாக்டர் சமந்த ஆனந்த நேற்றுத் தெரிவித்துள்ளார். (இ-7)

## பனை அபிவிருத்திக் கண்காட்சி

வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களமும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து வருடாவருடம் நடத்தும் பனை சார் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சியானது எதிர்வரும் 28,29,30 ஆகிய தினங்களில் காலை 9.30 மணி தொடக்கம் இரவு 9.30 மணி வரை யாழ்.நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடத்தப்படவுள்ளது. (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவிலிருந்து பரவும் நுளம்புகளால் இலங்கைக்கு மீண்டும் மலேரியா ஆபத்து



## சுகாதார அமைச்சர் சத்தியலிங்கம் சுட்டிக்காட்டு

(வவுனியா)

மலேரியா நோய்க்கான காவி நுளம்புகள் இந்தியா விலிருந்து இலங்கைக்கு பரவுவதற்கான அபாயமுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"2016 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் மலேரியா அற்ற நாடாக உலக சுகாதார நிறுவனத்தினால் இலங்கைக்கு சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. இதனால் இலங்கை பெருமை கொண்டிருந்தது.ஆனாலும் அண்மையில் மன்னார் மாவட்டத்தில் கண்டு பிடிக் கப்பட்ட புதிய வகை நுளம்பு மீண்டும் இலங்கையில் மலேரியா நோய் பரவுவதற்கான அபாயத்தை உறுதிப்படுத்தியுள்ளது.

இலங்கையில் யுத்தம் நிலவிய காலங்களிலும் இலங்கை அரசாங்கம் மற்றும் விடுதலைப் புலிகளின் தமிழீழ சுகாதார சேவை என்பன மலேரியா தடுப்பு நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தன. இதன் காரணமாகவே மலேரியா அற்ற நாடென்ற பெருமை முழு இலங்கைக்கும் கிடைத்திருந்தது.எனினும் தற்போது இந்தியாவிலிருந்து இலங்கைக்கு சட்ட விரோதமாக வருகின்ற படகுகள் மூலமாக மலேரியா நோய்க்காவி நுளம்புகள் இலங்கைக்கு வர ஆரம்பித்துள்ளன.

இது ஒரு ஆபத்தான சகுனமாகும். ஏற்கனவே டெங்கு உயிர்க்கொல்லி நோயின் தாக்கம் நாட்டில் அதிகரித்துள்ள நிலையில் மீண்டும் மலேரியா நோய் வருவதானது எமது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதாகவே அமையும்.

நோய்களை பரப்பும் நுளம்புகளை கட்டுப்படுத்துவதென்பது சுகாதார திணைக்களத்தின் கடமை மட்டுமல்ல, பொதுமக்ளின் ஒத்துழைப்பும் இருந்தால் மட்டுமே இதனை முற்று முழுதாக கட்டுப்படுத்த முடியும்" என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# குழந்தை உட்பட நால்வர் விபத்தில் சிக்கிப்படுகாயம்



அம்பாறை - அக்கரைப்பற்று பிரதான வீதியின் 2ஆம் கட்டையில் நேற்று அதிகாலை 3 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 4 வயது ஆண் குழந்தையொன்று மற்றும் அக் குழந்தையின் தாய் உட்பட நால்வர் படுகாய மடைந்துள்ளனரென, அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

வேகக்கட்டுப்பாட்டை இழந்த வானொன்று, வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேளாண்மை அறுவடை இயந்திரத்துடன் மோதியமையினால், இவ்விபத்துச் சம்பவித்துள்ளதாகப்பொலிஸார்தெரிவித்தனர்.

கதிர்காமம், ஜெயிலானி பகுதிக்குச் சென்று வீடு திரும்பிக்கொண்டிருந்த அக்கரைப்பற்றைச் சேர்ந்தவர்களே, இந்த விபத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் எம்.சில்மி (வயது 29 குழந்தையின் தாய்) என்பவர் கடுமையான உபாதைக்குள்ளாகிய நிலையில், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர், மேலதிக சிகிச்சைக்காக கண்டி போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

காயமடைந்த ஏனையவர்கள், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவ்விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை, அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1143

Search for people, places and things Nagendram Home


சுதா




கோகுலன்




நந்து




மதுசா




யாழினி




வேந்தன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த அணியினரால் குழப்பம் மாகாண சபையில் அமளிதுமளி





(கொழும்பு)

தென் மாகாண சபையில் நேற்று அமளிதுமளி நிலை ஏற்பட்டுள்ளது.

கூட்டு எதிரணியின் உறுப்பினர்கள் குழுவொன்று நேற்று தென் மாகாண சபைக்கு கறுப்புப்பட்டி அணிந்து வந்த நிலையில் தென்மாகாண சபையில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

வட மத்திய மாகாண சபையின் அதிகார மாற்றத்தில் எதிர்ப்பு வெளியிடும் நோக்கில் தென் மாகாண சபை உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்து வந்துள்ளனர்.

இதேவேளை, முன்னணி உறுப்பினர் சன்ன சாலிய உண்டியலுடன் சபைக்கு வந்தமையால் மேலும் குழப்ப நிலை அதிகரித்துள்ளது.

இந்த சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள், சபை நடுவிற்கு வந்து உண்டியலை பறிக்க முயற்சித்துள்ளனர்.

இதன்காரணமாக அவரை சபையில் இருந்து வெளியேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமையால் அங்கு பெரும் அமளிதுமளி நிலை ஏற்பட்டது. (இ-7)

# அதிரடிப்படை பாதுகாப்புடன் போதைப் பொருள் கடத்தல்!

## அன்றாடம் மண் ஏற்றுபவனுக்கு வெடி முன்னாள் முதல்வர் பிள்ளையான் அதிருப்தி



(கொழும்பு)

இரண்டாயிரம், மூவாயிரம் கோடி ரூபாவுக்கு போதைப் பொருள் கடத்துபவர்களுக்கு அதிரடிப் படையினர் பாதுகாப்பு வழங்கும் அதேவேளை, அன்றாடம் மண் ஏற்றுபவனுக்கு வெடி என நீதிமன்ற வாயிலில் வைத்து தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சருமான பிள்ளையான் தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பிலான விசாரணைக்காக நேற்று மட்டக்களப்பு நீதிமன்றம் அழைத்துவரப்பட்ட போதே பிள்ளையான், அங்கு கூடியிருந்த ஊடகவியலாளர்களிடம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் படுகொலை தொடர்பில், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், அந்தக் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஷ்டர் என்றழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா என்றழைக்கப்படுகின்ற கனநாயகம், இராணுவ புலனாய்வு உத்தியோகத்தர் எம்.கலீல் மற்றும் வினோத் எனப்படும் வெலிக்கந்தையை சேர்ந்த மதுசங்க ஆகியோரே தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கொக்கேய்ன் மீட்புடன் சதொச நிறுவனத்துக்கும் ஊழியர்களுக்கும் தொடர்பு கிடையாது

## அமைச்சர் றிசாத் தெரிவிப்பு

(கொழும்பு)

சீனி கொள்கலனிலிருந்து கொக்கேய்ன் கண்டெடுக்கப்பட்டமை தொடர்பில் சதொச நிறுவனத்திற்கோ அதன் ஊழியர்களுக்கோ எந்தத் தொடர்பும் கிடையாது என்று கைத்தொழில் மற்றும் வணிக துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

எமக்கும் சதொச நிறுவனத்திற்கும் களங்கும் ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

பொலிஸாரும் சுங்க பிரிவினரும் போதைப்பொருள் ஒழிப்பு பணியகமும் விசாரணைகளை நடத்துகின்றன. விசாரணையின் பின்னர் உண்மையான தகவல்கள் அம்பலமாகும்.

சதொச நிறுவனம் திறந்த அடிப்படையில் கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்கிறது. இதற்காக 137 வர்த்தகர்கள் பதிவு செய்துள்ளர்கள். வியாபாரிகளின் கேள்விப் பத்திரத்திற்கு அமைய கொள்வனவு செய்யப்பட்ட சீனி கொள்கலனிலிருந்து கொக்கேய்ன் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சீனி தனியார் நிறுவனங்களினால் கொள்வனவு செய்யப்படுவதாகவும் சதொச நிறுவனத்திற்கும் தொடர்பில்லை என்றும் கைத்தொழில் மற்றும் வணிக துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வீதியால் சென்ற பெண்ணின் தங்கச் சங்கிலி அறுப்பு

(யாழ்ப்பாணம்)

வீதியால்பயணித்துக்கொண்டிருந்த பெண் ணொருவரின் தங்கச் சங்கிலி மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபரால் அபகரிக்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்று முன்தினம்திங்கட்கிழமை இருபாலை சந்திக்கும் இருபாலை கற்பகப் பிள்ளையார் கோவிலுக்குமிடையில் முற்பகல் 10.45 மணியளவில் இடம்பெற்றது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, குறித்த பெண் கல்வியங்காட்டிலுள்ள வங்கியிலிருந் அடைவு மீட்டுக் கொண்டு சென்ற ஒரு பவுண் நிறையுடைய தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த இனம்தெரியாத நபர் ஒருவன் அபகரித்துக் கொண்டு சென்றுள்ளான்.

குறித்த பெண் உடனே இருபாலைச் சந்தியில் நின்ற இளைஞ்களிடம் தெரிவித்த போது அவர்கள் துரத்திப் பிடிக்க முற்படுகையில் அந்த திருடன் தப்பிச் சென்றுள்ளான்.

குறித்த திருடன் பயணித்த இலக்கத் தகடு துணியினால் மறைத்துக் கட்டியிருந்ததாக பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்தார். (இ-3-136)

# 14 படகுகள் பறிமுதல் கடற்படை நடவடிக்கை

## மணற்காட்டில் சம்பவம்

கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தின் அனுமதிப்பத்திரம் இன்றி மீன்பிடியில் ஈடுபட்ட 14 படகுகளைத் தாம் பறிமுதல் செய்துள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

நேற்று (25-07-2017) அதிகாலை கடற்படையினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது மணற்காட்டுப் பகுதியில் எட்டுப் படகுகளும் கற்கோவளம் பகுதியில் ஐந்து படகுகளும் முனைப்பகுதியில் ஒரு படகுமாக 14 படகும் அனுமதிப்பத்திரமின்றி இருந்ததையடுத்து அதனைக் கைப்பற்றிய கடற்படையினர் அவற்றை பருத்தித்துறை கடற்படைத்தளத்திற்கு கொண்டு சென்றுள்ளனர்.

அவற்றை கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கவுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். (இ-19-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கிராம மட்ட பொலிஸ் நடமாடும் சேவை கடந்த சனிக்கிழமை மந்திகைப் பகுதியிலுள்ள கிராம அலுவலர் காரியாலயத்தில் நடைபெற்றது. பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிவில் பாதுகாப்புக் குழுவினர் கலந்து கொண்ட இக் கிராம மட்ட பொலிஸ் நடமாடும் சேவையில் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன்ஜெயலத், காங்கேசன்துறை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியசட்சகர் டி.கே. பிரியந்த, காங்கேசன்துறை பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரஞ்சித் மாசிங்க, 551 ஆம் படைப் பிரிவின் கட்டளைத் தளபதி பெனாண்டோ, கற்கோவளம் இராணுவப் பொறுப்பதிகாரி றஞ்சித்குமார ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். மும்மதத்தலைவர்களும் கலந்து கொண்டு ஆசி உரைகளையும் வழங்கினர். (படங்கள்:- மகாலிங்கம்)

# நீதிபதியின் செயலால் நெகிழ்ந்து போன அமெரிக்கத் தூதுவர்



(கொழும்பு)

தனது மெய்ப்பாதுகாவலரின் மனைவியின் காலில் நீதிபதி மா.இளஞ்செழியன் வீழ்ந்து அழுத சம்பவத்தை கண்டு "ஆழமாக நெகிழ்ந்தேன்" என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த சனிக்கிழமை யாழ். நல்லூர் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் நீதிபதி மா.இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலர் உயிரிழந்தார்.

இந்நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில், மெய்ப்பாதுகாவலரின் மனைவியின் காலில் வீழ்ந்து நீதிபதி மா.இளஞ்செழியன் அழுதார்.

இது குறித்த காணொலியை தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப், இந்த சம்பவத்தை கண்டு "ஆழமாக நெகிழ்ந்தேன்" எனப் பதிவிட்டுள்ளார். (இ-7)

# கந்தளாயில் சட்டத்தரணிகள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு



யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் மீதான துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தினைக் கண்டித்து நேற்று கந்தளாய் நீதவான் நீதிமன்றத்துக்கு முன்பாக சட்டத்தரணிகள் பணிப் புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அதேவேளை உயிரிழந்த மெய்ப்பாதுகாவலருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, இவ்வாறான சம்பவங்கள் இனியும் இடம்பெறக் கூடாதென்றும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளுக்கு தகுந்த தண்டனை வழங்கப்பட வேண்டுமென்றும் சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(இ-7)

# பெண்ணின் கைப்பை அபகரிப்பு

(யாழ்ப்பாணம்)

வீதியால் பயணித்துக் கொண்டிருந்த பெண்ணின் கைப்பை அபகரிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் இருபாலை டச்சுவீதியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த பெண்ணின் கைப்பையே இவ்வாறு அபகரிக்கப்பட்டது.

குறித்த கைப்பையினுள் ஒரு தொகைப் பணம், நகை, அடையாள அட்டை என்பன இருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-3-136)

# கழிவுகளால் அசௌகரியம்



புலோலி ஆனைவிழுந்தான் பகுதியில் கொட்டப்படும் கழிவுகளால் வீதியால் சென்று வருபவர்கள் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருவதாக பொதுமக்களினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி பகுதிகளில் கோழி, ஆடு, மாடு வெட்டப்பட்டு அதன் கழிவுகளும் வீடுகளில் சேரும் கழிவுகளும் வகைதொகையின்றி கொட்டப்படுகின்றன.

அவற்றை தெருநாய்கள் இழுத்துவந்து வீதிகளில் விடுவதனால் வீதியால் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.


இவ்வீதியினை புனிதநகர், வடமராட்சி கிழக்கு போன்ற பகுதிகளுக்குச் செல்வோரும் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்குச் செல்வோரும் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே இது விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-60)

# பகலில் ஒளிரும் விளக்கு; மின்சாரம் வீண் விரயம்

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதியில் பல இடங்களிலுள்ள வீதி விளக்குகள் பகல் வேளைகளிலும் ஒளிர்வதால் தேவையற்ற விதத்தில் மின்சாரம் வீண் விரயமாவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



பருத்தித்துறை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆனைவிழுந்தான், மந்திகை போன்ற பகுதிகளில் உள்ள வீதி விளக்குகளை நிறுத்துவதற்கான ஆளிகள் எவையும் பொருத்தப்படவில்லை. மேலும் தன்னியக்க முறையிலான கருவிகளும் பொருத்தப்படவில்லை.

இதனால் மேற்படி பகுதிகளில் உள்ள வீதி விளக்குகள் பகலிலும் ஒளிர்வதை அவதானிக்க முடிகிறது. (இ-60)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 84 செவ் 8 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: CIMA/தனியார் தொழில்<br>தொ.இ: B/6620 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 46<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: பட்டதாரி<br>தொ.இ: G/6775 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: Diploma/ வியாபாரம்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/6621 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 31<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்ததொழில்<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/6783 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 32<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்: HNDA/ அரசதொழில்<br>தொ.இ: B/6623 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 11 செவ் 8 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/6786 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc லண்டன் NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/6624 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: MBBS/ வைத்தியர்<br>தொ.இ: G/6789 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பரமார்த்த குருவின் பக்தி



பரமார்த்தரின் வேண்டுகோள் படி மதுரை மன்னன், அவருக்கும் சீடர்களுக்கும் அரண்மனையில் விருந்து அளித்து ஒருநாள் தங்க வைத்தான்.

பட்டு மெத்தையில் படுத்துக் கொண்டு இருந்த பரமார்த்தர், தூக்கம் வராமல் புரண்டு கொண்டு இருந்தார். சீடர்களில் மண்டுவுக்கும் மூடனுக்கும் மட்டும் தூக்கம் வரவில்லை.

"குருவே! சற்று நேரம் உலாவினால் தூக்கம் வரும் என்று வைத்தியர் காலையில் யாரிடமோ சொன்னாரே அதேபோல் நாமும் எங்காவது சென்று உலாவி விட்டு வரலாமே என்றான் மண்டு.

நல்லது! அப்படியே செய்வோம்" என்று அவனைத் தட்டிக் கொடுத்தார் பரமார்த்தர்.

தெருவில் நடந்தால், நம்மைத் திருடர்கள் என்று காவலர்கள் பிடித்துக் கொண்டால் என்ன செய்வது? அதனால் உப்பரிகைக்குச் சென்று உலாவலாம்! என்றான் மூடன்.

அதன்படியே மற்ற சீடர்களையும் எழுப்பிக் கொண்டு, எல்லோரும் மெதுவாக நடந்து சென்றனர்.

உப்பரிகையின் படிகள் இருக்குமிடம் வந்ததும், மட்டி மட்டும் குருவை மிஞ்சிய சீடனைப் போல கடகட என்று அவரைத் தள்ளிக் கொண்டு வேகமாக மேலே ஏறினான்.

நான்கு படிகள் ஏறுவதற்குள் கால் வழுக்கி தடதட என்று உருண்டு கீழே வந்தான். உருண்டு வந்த வேகத்தில் குருவின் மேல் மோதி அவர் பின்னால் வந்த சீடர்களை மோதி எல்லோரும் உருண்டு கீழே வந்து சேர்ந்தனர்.

"மட்டியே! அவசரப்படுகிறாயே!" என்று திட்டினார் பரமார்த்தர். மறுபடியும் எல்லோரும் மெதுவாக ஏறி உப்பரிகையை அடைந்தார்கள்.

அன்று முழு நிலவு நாள். அதனால் நாடும் நகரமும் அழகாகத் தெரிந்தது. "அற்புதம், அற்புதம்" என்று குரு மகிழ்ந்தார்.

அப்போது மடையன் மட்டும் அலறினான் "என்ன? என்ன?" என்று பதறினார் குரு. "குளிர்கிறதே" என்றான் மடையன்.

"அப்படியானால் நீ மட்டும் கீழே போய்ப் படுத்துக்கொள். நாங்கள் பிறகு வருகிறோம்" என்று பரமார்த்தர் சொன்னதும் அவன் கீழே இறங்கிப் போய்விட்டான்.

குருவும் மற்ற சீடர்களும் நகர அழகைக் கண்டு கொண்டு இருந்தனர்.

அரச வீதிகளில் நிறைய காவல் இருந்தது. குதிரையில் வீரர்கள் அப்படியும் இப்படியும் பாரா வந்து கொண்டு இருந்தனர்.

அந்த வீரர்களைப் பார்த்துக் குருவுக்கும், குதிரைகளைப் பார்த்துச் சீடர்களுக்கும் நடுக்கம் ஏற்பட்டது.

அதற்குள் கீழே இறங்கிப் போன மடையன், மறுபடி மேலே ஏறி வந்து, "குருவே... நான் கீழே இறங்கிப் போனேன். அங்கே இரண்டு பேர். ஒருவன் குண்டாக இருந்தான். இன்னொருவனுக்குத் தாடியும் மீசையும் உள்ளது. இருவரும் அரண்மனையை விட்டு வெளியே போகிறார்கள். நிச்சயமாக அவங்க இரண்டு பேரும் திருடர்களாகத்தான் இருக்க வேண்டும் என்று மூச்சு வாங்கக் கூறினான்.

"அப்படியா? அப்படியானால் உடனே அவர்களைப் பிடித்தாக வேண்டுமே!" என்ற பரமார்த்தர், "எல்லோரும் வாருங்கள், கீழே போவோம்" என்றபடி இறங்கினர்.

எல்லோரும் வேகமாக அரண்மனை வாசலுக்கு ஓடிவந்து பார்த்தனர். மடையன் சொன்னபடி இரண்டுபேர். குண்டாக ஒருவரும், ஒல்லியாக ஒருவரும் வேகமாக மறைந்து மறைந்து போவது தெரிந்தது.

அப்போது அங்கே சில காவலர்கள் ஓடிவந்தார்கள். அவர்களிடம், "மடையர்களே! அதோ பாருங்கள், இரண்டு திருடர்கள் அரண்மனையிலிருந்து பணத்தையும் நகைகளையும் திருடிக் கொண்டு போகிறார்கள். ஓடிப் போய் அவர்களைப் பிடியுங்கள்!" என்று கோபத்துடன் திட்டினர்.

வீரர்கள், குருகாட்டிய திசையில் ஓடினார்கள். பரமார்த்தரும், சீடர்களும் திருடன்!திருடன்! விடாதே, பிடி! என்று கத்தியபடியே பின்னாலேயே துரத்தினார்கள்.

அதற்குள் சத்தம் கேட்டு அரண்மனையிலும் நகரத்திலும் எல்லோரும் விழித்துக் கொண்டார்கள். எல்லோரும் தெருவுக்கு ஓடி வந்து பார்த்தனர். ராஜ வீதியில் ஒரே கலவரம். கூக்குரல்கள். அப்போது மூடன், "அதோஅதோ.. பிடியுங்கள்" என்று கத்தினான்.

பரமார்த்தரும் சீடர்களும் அந்த இருவர் மீதும் தடால் என்று விழுந்து உருட்டி, அவர்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர்.

வீரர்கள் அவர்களை விலக்கி, திருடர்களை உற்றுப் பார்த்தனர். உடனே, "அரசே! அமைச்சரே! நீங்களா?!" என்று வியந்தனர். "எல்லோரும் அரசர் காலில் விழுந்து "எங்களை மன்னியுங்கள்! இந்தக் குருவும் சீடர்களும் தான் உங்களைத் திருடர்கள் என்று கூறினர்" என்று நடுங்கியபடி கூறினர்.

பரமார்த்தருக்கும் சீடர்களுக்கும் ஒன்றுமே புரியவில்லை. அரசரையே திருடன் என்று சொல்லி விட்டோமே என்று பயந்து நடுங்கினார்கள். கோபம் அடைந்த மக்கள் குருவையும் சீடர்களையும் அடிப்பதற்குச் சென்றனர்.

உடனே அரசர், "பொது மக்களே! நானும் அமைச்சரும் நகர சோதனைக்குச் செல்வது தெரியாமல் பரமார்த்த குரு தவறாக நினைத்து விட்டார். உண்மையிலேயே திருடர்களாக இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? ஆகவே திருடர்களைப் பிடிக்க வேண்டும் என்ற நல்ல எண்ணம் கொண்ட சீடர்களையும், பரமார்த்தருக்கு இருக்கும் அரச பக்தியையும் நான் பாராட்டுகிறேன். பரமார்த்தரும் சீடர்களும் இரவில் கூடத் தூங்காமல் காவல் செய்வதை நினைத்துப் பூரிப்படைகிறேன். இதற்காக நாளையே அவர்களுக்காக ஒரு விழா கொண்டாடுவோம்!" என்று கூறினார்.

மக்களும், பரமார்த்த குரு வாழ்க! சீடர்கள் வாழ்க! என்று முழக்கமிட்டனர். குருவும் சீடர்களுக்கும் சந்தோசமாக இருந்தனர்.

# 07.2017 26 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 657 - அலி இப்னு அபு தாலிப் தலைமையிலான படைகள் முதலாம் முஆவியாவின் படைகளுடன் சிஃபின் நகரில் போரில் ஈடுபட்டனர்.
- 811 - பைசண்டை பேரரசன் முதலாம் நிக்கபோரஸ் பல்கேரியாவின் பிளிஸ்கா என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் கொல்லப்பட்டான்.
- 1509 - விஜயநகரப் பேரரசின் மன்னனாக கிருஷ்ணதேவராயன் முடிசூடினார்.
- 1788 - நியூயோர்க் ஐக்கிய அமெரிக்காவின் 11 ஆவது மாநிலமாக இணைந்தது.
- 1803 - உலகின் முதலாவது பயணிகள் தொடருந்து சேவை தெற்கு லண்டனில் ஆரம்பமாகியது.
- 1847 - லைபீரியா ஐக்கிய அமெரிக்காவிடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1848 - மாத்தளை கிளர்ச்சி: இலங்கையில் பிரித்தானியருக்கு எதிராக வீரபுரன் அப்பு தலைமையில் கிளர்ச்சி வெடித்தது. வீரபுரன் அப்பு கைது செய்யப்பட்டு ஓகஸ்ட் 8 இல் தூக்கிலிடப்பட்டான்.
- 1891 - தாகித்தி பிரான்சுடன் இணைந்தது.
- 1936 - அச்சு நாடுகள் எசுப்பானிய உள்நாட்டுப் போரில் தலையிட முடிவு செய்தன.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: சோவியத் இராணுவம் உக்ரைனின் லிவீவ் நகரை நாசிகளிடம் இருந்து கைப்பற்றினர். அந்நகரில் இருந்த 160,000 யூதர்களில் 300 பேர் மட்டுமே எஞ்சியிருந்தனர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனியின் போட்ஸ்டாம் என்ற இடத்தில் சோவியத் ஒன்றியம், அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம் ஆகிவற்றிற்கிடையில் போட்ஸ்டாம் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1957 - இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- 2005 - டிஸ்கவரி விண்ணோடம் ஏவப்பட்டது.

பிறப்புகள்

- 1878 - மு. இராகவையங்கார், தமிழறிஞர் (இ. 1960)
- 1910 - பி. ஆர்.பந்துலு, தென்னிந்தியத் திரைப்பட இயக்குநர், தயாரிப்பாளர் (இ. 1974)
- 1925- சக்தி அ.பாலஐயா, இலங்கையின் மலையக எழுத்தாளர் (இ. 2013)
- 1927-ராம் ராம்சந்த், இந்தியத் துடுப்பாளர் (இ. 2003)
- 1933-மு. கு. ஜகந்நாதராஜா, பன்மொழிப் புலவர் (இ. 2008)
- 1941-வாஸந்தி, தமிழக எழுத்தாளர்
- 1960 - சின்னி ஜெயந்த், தமிழ் நகைச்சுவை நடிகர், தயாரிப்பாளர், இயக்குநர்

இறப்புகள்

- 432 -முதலாம் செலஸ்தீன் (திருத்தந்தை)
- 1684 - எலினா கார்னரோ பிசுகோபியா, இத்தாலியக் கணிதவியலாளர், மெய்யியலாளர் (பி. 1646)
- 1982 - க. சொர்ணலிங்கம், கலையரசு, ஈழத்தின் நாடகக் கலைஞர் (பி. 1889)

சிறப்பு நாள்

- விடுதலை நாள் (லைபீரியா, 1847)
- விடுதலை நாள் (மாலைதீவுகள், 1965)
- கார்கில் போர் வெற்றி நாள் (இந்தியா

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | மருதனார் மடம் |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 200 | 160 | 140 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 300 | 400 | 300 | 200 |
| தக்காளி | 140 | 200 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 120 | 70 | 80 |
| கோவா | 130 | 200 | 150 | 120 |
| கரட் | 200 | 400 | 240 | 200 |
| பூசணி | 100 | 100 | 70 | 90 |
| புடோல் | 80 | 100 | 60 | 100 |
| வாழைக்காய் | 80 | 120 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 100 | 200 | 120 | 250 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 300 | 400 | 200 | 250 |
| வெண்டிக்காய் | 60 | 100 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | 120 | 140 |
| பயற்றங்காய் | 180 | 150 | 160 | 200 |
| லீக்ஸ் | 100 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 80 | 100 | 60 | 100 |
| குறிமிளகாய் | 200 | 200 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 250 | 100 | 160 | 200 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 160 |
| கத்தரித்தும்புள்ள | 120 | 100 | 120 | 120 |
| கீரை - 1பிடி | 40 | 20 | 40 | 30 |
| தேசிக்காய் | 30 | 50 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 60 | 70 | 60 |
| இராசவள்ளி | 200 | 300 | 450 | — |
| வெங்காயப்பூ | 150 | 200 | 160 | 200 |
| முள்ளங்கி | 50 | 100 | 80 | 60 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 60 | 100 | — |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கயவர்கள் முட்டாள்களின் நாட்டில்
பட்டினியாய் இருப்பதில்லை.

~ சர்ச்சில்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே உடம்பொடு உயிரிடை நட்பு

உடம்புக்கும் உயிருக்கும் இடையிலான தொடர்பு எவ்வாறானது என்பதை விளக்குவதற்கு வள்ளுவர் கையாண்ட உதாரணம் அற்புதமானது.

பறவைகள் கட்டுகின்ற கூடுகளைப் பாருங்கள். அந்தக் கூட்டில் பறவைகள் முட்டையிட்டுக் குஞ்சுகள் பொரிக்கின்றன.

குஞ்சுகள் வளர்கின்றன. சிறகுகள் விரிகின்றன. பறக்கின்ற வல்லமை பெற்ற பறவைக் குஞ்சுகள் கூட்டை விட்டு சிறகை விரித்துப் பறந்து போய்விடுகின்றன.

இவ்வாறு பறந்த குஞ்சுகள் மீண்டும் அந்தக் கூட்டுக்கு வருவதேயில்லை. இவ்வாறாக பறவைக் குஞ்சுகள் கூட்டை விட்டு எங்ஙனம் பறந்து போகின்றனவோ அது போன்றுதான் உடம்பைவிட்டு இந்த உயிர் பிரிந்து போகின்றது.

பிரிந்த உயிர் மீண்டும் உடலில் வந்து உட்புகுவதில்லை. இதனையே

*குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே*
*உடம்பொடு உயிரிடை நட்பு*

என வள்ளுவப் பெருந்தகை கூறிவைத்தார்.

இதை நாம் கூறும் போது, எதற்காக இது? என்று நீங்கள் முணுமுணுப்பதும் கேட்கிறது. உங்கள் கேள்விக்குப் பதில் தந்தே ஆக வேண்டும்.

கூட்டை விட்டுப் பறக்கின்ற பண்பாடு, பறவைகளிடம் மட்டுமே இருப்பதாக நினைத்து விடாதீர்கள். மாறாக கூட்டை விட்டுப் பறக்கின்ற பண்பாட்டு ஒழுக்கம் தனி மனிதர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வீடு என்ற முதன்மைக் கட்டமைப்பு முதல், மக்கள் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் தலைமை வரை இருக்கவே செய்கிறது. இதைக் கூறுவதற்காகவே வள்ளுவனை வரவழைத்தோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து தேசிய அரசை அமைத்தன.

தேசிய அரசு அமைவதில் பலரதும் வகிபங்கு உண்டு. அதிலும் குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் வகிபங்கு காத்திரமானது.

தேசிய அரசு என்ற கூட்டுத்தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வைத் தரும் என்று தமிழ் மக்கள் மத்தியில் கூறப்பட்டது.

இதைத் தமிழ் மக்கள் நம்பத் தயாரில்லாத போதும் தமிழ் அரசியல் தலைமை நம்பியது.

இந்த நம்பிக்கை மூலம் சர்வதேச போர்க் குற்ற விசாரணை, ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை அமுல்படுத்துதல் என்ற விடயங்களில் இருந்து இலங்கை அரசு விலக்குப் பெற முடிந்தது.

இவ்வாறாக தேசிய அரசை அமைத்து அதன்மூலம் சர்வதேச அழுத்தங்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொண்ட இலங்கையின் தேசிய அரசு இனி தனது கூட்டில் இருந்து பிரிவதற்குத் தயாராகி விட்டது.

தேசிய அரசு என்ற கூடு தனித்து விடுபட, அதில் இருந்த பறவைக் குஞ்சுகள் தனித் தனியே பறந்து செல்லத் தயாராகின்றன.

கூடவே தேசிய அரசு தமிழ் மக்களுக்கு அன்பளிப்பாக வழங்கிய எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் கூடுகலைய கலைந்து போகும்.

அந்தப் பதவி இல்லாமல் போக; தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற கூட்டில் இருந்து பறவைகள் தனித்தனியே பறக்கத் தலைப்படும்.

தனித்தனியே பறவைகள் பறந்தாலும் சேர்ந்து கூடு கட்டும் பண்பாடு பறவைகளின் கடமைப்பாடாகத் தொடர்வதும் தவிர்க்க முடியாததுதான்.

### காணாமற் போனோர் அலுவலகம் குறித்து

# மகா நாயக்கர்களுக்கு மகிந்த விசேட அறிக்கை

(கொழும்பு)

நல்லிணக்கம் எனும் போர்வையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கையொப்பமிட்டுள்ள காணாமல் போனவர்கள் தொடர்பான காரியாலயம், நாட்டிலுள்ள உயர் நீதிமன்றத்தின் பணிகளை மேற் கொள்ளும் ஒரு நிறுவனமாகும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்று மகா நாயக்கர்களுக்கு விசேட அறிவித்தல் மூலம் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் இதனைக் கூறியுள்ளார்.

காணாமல் போனவர் கள் தொடர்பான காரியாலயம் கேட்கும் பட்சத்தில், நாட்டின் முக்கிய பாதுகாப்பு இரகசிய தகவல்களையும் அரசாங்கம் வழங்க வேண்டி வரும்.

அரசாங்கம் இக்காரியாலயத்தை நல்லிணக்கத்தின் ஒரு அங்கமாக காட்ட முயற்சிக்கின்றது. இருப்பினும், இது நீதிமன்றத்தைப் போன்று செயற்படும் ஒரு சட்டரீதியான நிறுவனமாகும்.

இந்தக் காரியாலயத்தின் நடவடிக்கைகளை உயர் நீதிமன்றம் தவிர்ந்த வேறு எந்தவொரு நீதிமன்றத்தினாலும் விசாரணை செய்ய முடியாதுள்ளதாகவும் மகிந்த ராஜபக்ஷ மகாநாயக்கர்களுக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

நல்லிணக்கம் எனும் பெயரில் அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகள் குறித்து மகாநாயக்கர்கள் அவதானத்துடன் இருப்பீர்கள் என தாம் நம்புவதாகவும் அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (இ-7)

# இந்திய ஜனாதிபதிக்கு பிரதமர் ரணில் வாழ்த்து

இந்தியாவின் புதிய ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் இந்தியாவை அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்திற்கான பாதைக்கு அழைத்துச் செல்வார் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் புதிய ஜனாதிபதிக்கு நேற்று செவ்வாய்க் கிழமை அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே பிரதமர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

"இலங்கை மற்றும் இந்தியாவிற்கு இடையில் நீண்ட காலமாக இடம்பெற்று வரும் மதம் மற்றும் கலாசாரத்தை அடிப்படையாக கொண்ட இருதரப்பு உறவுகள் புதிய ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் மேலும் வலுவடையும் என நம்புகின்றோம்.

இரு நாடுகளும் அந்நியோன்னியமாக செயற்படுவதில் முன்னெடுத்துவரும் பணியில் புதிய ஜனாதிபதியுடன் நெருக்கமாக செயற்படுவதற்கு எமது அரசாங்கம் மேலும் புதிய வழிகளை எதிர்பார்க்கின்றது" என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## பரீட்சைப் பெறுபேறுகள் வெளியீடு

கலைமாணி பகுதி-1 இற்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் 24.07.2017 அன்று வெளியாகியுள்ளன.

மேற்படி பரீட்சைப் பெறுபேறுகளை திறந்த மற்றும் தொலைக் கல்வி நிலையத்தில் பார்வையிட முடியும் என்பதுடன் மீள் பரீட்சார்த்திகள் மீள் பரீட்சைக்கு உடனடியாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி 11.08.2017 வெள்ளிக்கிழமை ஆகும் என பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## பலாலி அம்மன் ஆலய உற்சவத்துக்கு அனுமதி

(யாழ்ப்பாணம்)

பலாலி கண்ணாறுவயல் ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்மன் ஆலய வருடாந்த உற்சவ கால பூஜை எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

குறித்த உற்சவகால நாட்களில் கோவிலுக்கு சென்று வழிபடுவதற்கான அனுமதி இராணுவத்தினரால் கிடைககப்பட்டுள்ளதாகவும் அடியவர்கள் குறித்த உற்சவ காலத்தில் கோவிலுக்கு வந்து பூசை வழிபாடுகளை மேற்கொள்ள முடியும் என ஆலய பரிபாலனசபையினர் அறிவித்துள்ளனர். (செ-9)

## உயர் குருதியமுக்கத்தைக் கட்டுப்படுத்தும் உணவுமுறை

அதிகளவு கீரை வகை, மரக்கறி வகை, பழவர்க்கங்களை உணவில் சேர்த்தல்
அதிகளவு உப்பு சேர்க்கப்பட்ட உணவுகளைத் தவிர்த்தல்
சமைக்கும்போது அதிக உப்பு சேர்ப்பதனை தவிர்த்தல்
கொலஸ்ட்ரோலை அதிகரிக்கும் உணவுகளை சிவப்பு இறைச்சி, பொரித்த உணவுகள், பட்டர், மாஜரீன், உணவுகளைக் குறைத்தல்
எண்ணெய்ப் பாவனையை குறைத்தல்
தேங்காய்ப்பாலில் முதல் பாலை தவிர்த்து மற்றைய் பாலை பயன்படுத்துதல்
ஆடை நீக்கிய பாலை அருந்துதல்
மதுபானம் அருந்துவதை தவிர்த்தல் அல்லது குறைத்தல்

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகர சபை

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### கடவுளின் கருவியாக இரு



✦ நீ கடவுளின் கையில் கருவியாக மாறி விடு. அகந்தை எண்ணம் மறையும்.

✦ எப்போதும் கடமையில் ஈடுபடு. ஆனால், மனம் மட்டும் கடவுளைச் சிந்திக்கட்டும்.

✦ காலத்தை வீணாக்காதே. கடவுளை முழுமையாக நம்பத் தொடங்கு.

✦ சேற்றில் வாழ்ந்தால் மீனின் உடம்பில் சேறு ஒட்டுவதில்லை. உலகில் வாழ்ந்தாலும் தீய ஆசைகள் மனதில் ஒட்டாமல் பார்த்துக் கொள்.

✦ விவேகம் கொண்டவனுக்கு வாழ்வில் உண்மை எது, பொய் எது என்ற மனத்தெளிவு இருக்கும்.

✦ மனிதனின் உயர்வும், தாழ்வும் அவனுடைய மனதைப் பொறுத்தே உண்டாகிறது.

## பருத்தித்துறை வீதி விபரங்கள் வர்த்தமானியில் வெளியீடு

பருத்தித்துறை நகர சபைக்குச் சொந்தமான வீதிகளின் விபரங்கள் 14.07.2017 ஆம் திகதிய வர்த்தமானியின் உள்ளூராட்சி அறிவித்தல்கள் பகுதி IV (ஆ) பகுதியில் மூன்று மொழிகளிலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

இவற்றின் பிரதிகள் சபை அலுவலகம், பொதுநூலகம், நகர சபை எல்லைக்குட்பட்ட கிராமசேவையாளர் அலுவலகங்கள், பருத்தித்துறை பிரதேச செயலகம் என்பவற்றில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

வீதிகளின் விபரங்கள், ஆட்சேபனைகள், புதிய சேர்ப்புக்களை ஒரு மாத காலத்துக்குள் நகர சபை அலுவலகத்தில் பொதுமக்கள் எழுத்து மூலம் தெரிவிக்க முடியும் (மு)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக் கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ. பிரதேசத்தில் வலந்தலை சந்தி, சிவகாமி அம்மன் கோவிலடி, மருதபுரம், வியாவில், ஆலடி, கருங்காலி, காரைநகர் சிவன் கோவிலடி, பொன்னாலை கிருஸ்ணன்கோவிலடி, பொன்னாலை வீட்டுத் திட்டம் ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசததில பறயணாலங்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, சிலாவத்துறை கடற்படை முகாம், முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை C.E.C.B, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், அடம்பன் நீர்ப்பாசன சபை, கமலாம்பிகை அரிசி ஆலை, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம், C.T.B மன்னார், கீரி ஐஸ் தொழிற்சாலை, மன்னார் வைத்தியசாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், மன்னார் தொலைத்தொடர்பு நிலை யம், ஆவேமரியா ஐஸ் தொழிற் சாலை, ரைமெக்ஸ் கார்மெனட், விசேட அதிரடிப் படை முகாம், எருக்கலம்பிட்டி பம் கவுஸ், பேசாலை Palmayrah House வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, மீன் பிடிசமாசம், அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற் சாலை, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படைமுகாம், சீனத்துறைமுகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சமநிலை தவிர்ப்பு உதைமூலம்

# தலைவர் கிண்ணத்தை வசப்படுத்தியது இளவாலை யங்ஹென்றிஸ் வி.கழகம்




வலிகாம லீக் ஏற்பாட்டில் மறைந்த வலிகாம லீக் முன்னாள் தலைவர் நா.நவரத்தினராசா ஞாபகார்த்த தலைவர் கிண்ண உதைபந்தாட்ட போட்டியில் கடந்த 23ஆம் திகதி இரவு 8.30 மணிக்கு இடம்பெற்ற இறுதி போட்டியில் இளவாலை யங்ஹென்றீஸ் வி.கழகத்தை எதிர்த்து துறையூர் ஐயனார் வி.க மோதியது.

முழு நேர ஆட்ட முடிவில் இறுதி நிமிடத்தில் யங்ஹென்றீஸ் அணியின் வெற்றி தண்ட உதை மூலம் கோல் போட்டு ஐயனார் அணி வீரரால் முறியடிக்கப்பட்டது. இறுதியாட்ட நேரமுடிவில் 03:03 என்ற கோல் கணக்கில் ஆட்டம் சமநிலையானது.

வெற்றிக்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதை முடிவில் தனேஷின் மாற்று கோல்காப்பின் மூலம் 03:02 என்ற கோல் ரீதியில் ஐயனார் அணியை வீழ்த்தி தலைவர் கிண்ணத்தை தன்வசப்படுத்தியது யங்ஹென்றீஸ் அணி.

இறுதி வரை இரண்டு அணிகளின் ஆட்டம் பார்வையாளருக்கு மகிழ்ச்சியாக இருந்தாலும் ஐயனார் ஆதரவாளருக்கு ஏமாற்றத்தை கொடுத்துள்ளது.

யங்ஹென்றீஸ் அணி பல இறுதி போட்டிகளில் ஏமாற்றத்தை கொடுத்திருந்தாலும் இவ் வருடத்தின் கிண்ணத்தைப் பெற்று அணியின் நிலையை பலப்படுத்தியுள்ளது. (க)

## இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது பலாலி விண்மீன் வி.கழகம்



அல்வாய் நண்பர்கள் நடத்தும் 9 நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் 28.06.2017 அன்று நடைபெற்ற அரையிறுதியாட்டத்தில் பொம்மர்ஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் விளையாடியது.

இரண்டு அணிகளும் பலமான அணி என்பதால் கோல் வாய்ப்புகள் இரண்டு அணிகளாலும் தடுக்கப்பட்டன. முதல் பாதியாட்டத்தில் எதுவித கோல்களும் இன்றி முடிவிற்கு வந்தது.

பிற்பாதியாட்டத்தில் பலாலி விண்மீன் அணியினரால் சில கோல் வாய்ப்புக்கள் வீணடிக்கப்பட எதுவித கோல்களும் இன்றி போட்டி முடிவிற்கு வந்தது. பின் சமநிலை தவிர்ப்பு உதையில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம். இறுதிப்போட்டியில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்கொள்கிறது பலாலி விண்மீன் விளையாட்டு கழகம். (சு)

# உதைபந்தாட்ட காலணிகள் மகாஜனாவுக்கு அன்பளிப்பு



லண்டனில் வசிக்கும் மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவனான சண்முகராசா மகாஜனா உதைபந்தாட்டத்திற்கு என 12 சோடி உதைபந்தாட்டக் காலணிகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (க)

## இறுதிப் போட்டியில் வீனஸ்



புற்றளை இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்திய மென்பந்துச் சுற்றுப் போட்டியில் முறையே அல்வாய் இளைஞர் அணியையும் இரண்டாவது போட்டியில் மல்லாகம் ஸ்ரீமுருகன் அணியையும் அரையிறுதியில் உடுவில் நினைவொளி அணியையும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது வீனஸ் விளையாட்டுக்கழகம்.

## சைனிங்ஸ் வைரவிழா வலைப்பந்தாட்டம் இறுதிப் போட்டிக்கு உதயசூரியன் நேதாஜி



சைனிங்ஸ் வைரவிழா வலைப்பந்தாட்ட தொடரில் 22.07. 2017 அன்று நடைபெற்ற அரையிறுதியாட்டங்களில் றெயின்போ அணியை 14:3 என்ற புள்ளியடிப்படையில் உதயசூரியன் அணி வீழ்த்தியது. தீருவில் அணியுடனான போட்டியில் நேதாஜி அணி வெற்றி பெற்றது. இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றன. (க)




தேசிய ரீதியில் உதைபந்தாட்டத்தில் சாதனை படைத்த வலிகாமம் லீக்கிற்கு உட்பட்ட வீரர்கள் வலிகாமம் லீக்கினால் கௌரவிக்கப்பட்ட வேளையில் ... (க)

## நவஜீவன்ஸ் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டியில் யங்கம்பன்ஸ்



அல்வாய் நண்பர் வி. கழகத்தால் நடத்தப்பட்டு வரும் வடமராட்சி லீக் மற்றும் பருத்தித்துறை லீக் அங்கத்துவ கழகங்களுக்கிடையிலான 9நபர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் கடந்த 23.07.2017 அன்று நடைபெற்ற முதலாவது அரைஇறுதியாட்டத்தில் நவஜீவன்ஸ் அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதியது.

பாதியாட்டத்தின் 10ஆவது நிமிடத்தில் நவஜீவன்ஸ் அணி வீரர் கோல் போட்டார். அடுத்த 25/27 ஆவது நிமிடங்களில் அடுத்தடுத்து இரண்டு கோல்களைப் போட்டு யங்கம்பன்ஸ் அணியை முன்னிலைப்படுத்தினார் நிறோஜன். பதிலுக்கு தமது அணியை 28ஆவது நிமிடத்தில் கிடைத்த தண்ட உதைப்பின் மூலம் கோல் போட்டு ஆட்டத்தை சமப்படுத்தினார் நவஜீவன்ஸ் அணி வீரர்.

தொடர்ந்த இரண்டாவது பாதியாட்டத்தில் வெற்றிக்காக இரண்டு அணிகளும் போராடியது. கோல்கள் பெறப்படாது ஆட்டம் சமநிலையானது. இறுதி ஆட்ட நேர முடிவில் 02:02என்ற கோல்கள் அடிப்படையில் ஆட்டம் சமநிலையானது.

வெற்றிக்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதை முடிவில் 04:03என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதியானது யங்கம்பன்ஸ் அணி. ஆட்ட முடிவின் போது யங்கம்பன்ஸ் அணி சார்பாக நிறோ இரண்டு கோல்களை போட்டார். (க)




வலிகாமம் கால் பந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட நவரட்ணராசா ஞாபகார்த்த கிண்ணத்திற்கான கால் பந்தாட்ட தொடரின் இறுதிப் போட்டியில் 2ஆம்இடத்தை பெற்றுக்கொண்ட வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணியினரை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோலியம்...

லின்போது, பணிப்பகிஷ்கரிப்பைக் கைவிட்டு ஜனாதிபதியுடன் கலந்துரையாட வருமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு தாம் இணக்கம் தெரிவிக்கவில்லை என தொழிற்சங்கங்களின் ஒன்றியம் தெரிவித்தது.

அம்பாந்தோட்டை துறைமுக வளாகத்தில் அமைந்துள்ள எண்ணெய்க் கிணறுகளை சீனாவுக்கு வழங்குதல், சீன துறைமுகத்தின் எண்ணெய்க் கிணறுகளை இந்தியாவிற்கு வழங்குதல் போன்றவற்றிற்கு பெற்றோலியத் தொழிற்சங்கங்களின் ஒன்றியம் எதிர்ப்பு தெரிவித்தது.

இக்காரணங்களை முன்வைத்து நேற்று முன்தினம் முதல் அவர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பணிப்பகிஷ்கரிப்பு காரணமாக எரிபொருள நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசை காணப்பட்டதுடன், நேற்று மாலை எரிபொருள் நிலையங்களில் எரிபொருள் முடிவடைந்திருந்தது.

இந்நிலையில், கெரவலப்பிட்டிய அனல் மின் உற்பத்தி நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்ட 35,000 மெட்ரிக் தொன் எரிபொருளை தரையிறக்குவதில் நடைமுறைப் பிரச்சினைகளை தாம் எதிர்நோக்குவதாக இலங்கை மின்சார சபை தெரிவித்தது.

சில அனல் மின் நிலையங்களில் இன்னும் ஒரு நாட்களுக்குப் போதுமான எரிபொருளே காணப்படுவதாக மின்சார சபை தெரிவித்தது.

பெற்றோலிய கூட்டு ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டாலும், IOC நிறுவனத்தின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றது. (மு-11)

## சுவிஸ்குமார்...

ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதவான் எம். எம்.றியால் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டிருந்தார். இதன் போது சந்தேக நபர் சார்பில் ஆயராகியிருந்த சட்டத்தரணிகள், தமது தரப்பு வாதி கைது செய்யப்பட்டதற்கு கடும் ஆட்சேபனை தெரிவித்து சமர்ப்பணாங்களை செய்திருந்தனர்.

பின்னர் குறித்த சந்தேக நபரை பிணையில் விடுவிக்குமாறு பிணை விண்ணப்பமும் செய்திருந்தனர். இதன்போதே சட்டத்தரணிகளால் மேற்படி ஆதாரம் நீதவானிடம் கையளிக்கப்பட்டு, மன்றின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. சட்டத்தரணிகளின் சமர்ப்பணங்களின் பின்னர் கட்டளையிட்ட நீதவான், மன்று சட்டத்தரணிகளிடம் பெறப்பட்ட சமர்ப்பணங்களை கவனத்திற்கு எடுத்துள்ளது. இதேபோன்று குற்றப்புலனாய்வு துறையினரிடம் பெறப்பட்ட சமர்ப்பணாங்களையும் கருத்தில் எடுத்துள்ளது.

இரு தரப்பு சமர்ப்பணங்களையும் ஆராய்ந்த பின்னர் இந்த வழக்கு மேலும் புலன் விசாரணை செய்ய வேண்டியுள்ளது என தெளிவாகின்றது. வழக்கின் சந்தேக நபர் பொலிஸ் திணைக்களத்தின் வடக்கு மாகாண முன்னாள் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபராக இருப்பதால் வழக்கு முடிவடைய முன்னரே விடுதலை செய்தால் பொலிஸாரின் விசாரணைகளில் பாரதூரமான விளைவுகள் ஏற்படும் என்பதால் பிணை விண்ணப்பம் நிராகரிக்கப்படுகின்றது.

யாழ்ப்பாணம் 30 ஆண்டுகால யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு தற்போது அமைதிக்கு திரும்பும் நிலையில் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட இருவரில் ஒருவர் தமிழராகவும் மற்றையவர் சிங்களவராகவும் உள்ளனர். எனவே இன முரண்பாட்டை தோற்றுவிக்கும் நடவடிக்கையை கருத்தில் எடுக்க வேண்டியுள்ளது. வழக்கின் பிரதான சந்தேக நபரான சுவிஸ்குமார் என்பவர் 30 ஆண்டு காலமாக நாட்டில் இல்லாத நிலையில் இலங்கையை சேர்ந்த லலித் ஏ ஜயசிங்கவோடு எவ்வாறு தொடர்பு ஏற்பட்டது என்பது தொடர்பில் சந்தேகம் ஏற்படுகின்றது.

ஆகவே இந்த இருவருக்கும் இடையில் இடைத்தரகர்கள் இருப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளதால் அது தொடர்பில் விசாரணை மேற்கொள்ளுமாறு சி.ஐ.டி.யினருக்கு உத்தரவிடுகின்றேன்.

மேலும் பிரதிவாதி சட்டத்தரணிகளால் மன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஐ.பாட் எனும் மின்னியல் சாதனத்தில் சுவிஸ்குமார் தப்பிக்க விடுவது போன்று பெண் அரசியல் வாதியொருவர் முயற்சிக்கும் காணொளி உண்மையானதா என்பது தொடர்பிலும் விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் வழக்கின் சந்தேக நபர் விபத்துக்குள்ளாகி இருபதாக மன்றின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டதை அடுத்து சிறைச்சாலை உத்தியோகஸ்தர்கள் அவருக்கு சகல மருத்துவ வசதிகளை வழங்கி அது தொடர்பில் அடுத்த மாதம் 08ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டு வழக்கினை ஒத்தி வைத்தார். (மு-4)

## டி.ஐ.ஜி ஜயசிங்க...

ட்ட சுவிஸ் குமாரைக் காப்பாற்ற முயற்சித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ள சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் ஜயசிங்கவிற்கு பிணை வழங்க ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றம் மறுத்துள்ளது.

சந்தேக நபரான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், ஊர்காவற்றுறை நீதவான் ஏ. எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டார்.

சந்தேகநபரான லலித் ஜயசிங்க கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட தினத்தில் அவர் பயணித்த வாகனம் விபத்திற்குள்ளானதால், அவருக்கு உபாதைகள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சைகள் தொடர்பான அறிக்கையையும் எதிர்வரும் 8ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபரான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு பிணை வழங்குமாறு அவரது சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் நேற்று கோரிக்கை விடுத்தனர்.

சந்தேகநபரை விடுவித்தால் பிரச்சினைகள் எழுவதற்கான சாத்தியங்கள் உள்ளதால் அவருக்கு பிணை வழங்க முடியாது என நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, எதிர்வரும் 8ஆம் திகதி வரை சந்தேகநபர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேற்றைய வழக்கு விசாரணை ஆரம்பத்தில் உப பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீகஜனின் பெயர் மன்றில் அழைக்கப்பட்ட போதிலும், அவர் ஆஜராகவில்லை.

சுவிஸ் குமார் சரணடைந்த போது அவரை சிரேஷ்ட சட்ட விரிவுரையாளர் தமிழ் மாறனுடன் பொலிஸ் நிலையத்திற்கு ஸ்ரீகஜன் வாகனத்தில் அழைத்துச் சென்றதாக யாழ். மேல் நீதிமன்றத்தில் ஏற்கெனவே சாட்சியமளிக்கப்பட்டிருந்தது.

இதனால் அவர் நாட்டில் இருந்து வெளியேறுவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (மு-4)

## உண்மையான...

இரா.சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

அத்துடன், காணாமல்போனோர் தொடர்பில் அரசாங்கம் தம்மிடம் உள்ள தகவல்களை வெளியிட வேண்டும் என்றும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

காணாமல்போன ஆட்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் நேற்று சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய போதே அவர் இதனை வலியுறுத்தியுள்ளார்.

அந்தப் பிரேரணையில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

காணாமல் போன ஆட்கள் தொடர்பான விடயம் இலங்கையில், குறிப்பாக வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் பாரதூரமான ஒரு பிரச்சினையாகச் சில காலமாக இருந்து வருகின்றது.

அத்தோடு, காணாமல்போன ஆட்களுடைய குடும்பங்கள், வடக்குக் கிழக்கு மாகாணங்களில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் இவ்விடயத்தை முன்வைத்து, காணாமல்போன ஆட்கள் தொடர்பான பிரச்சினையை ஒரு திருப்திகரமான முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமென்று அரசாங்கத்தை வலியுறுத்தும் பொருட்டு கடந்த பல மாத காலமாக அமைதியான போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அதேவேளை, காணாமல்போன ஆட்களுடைய குடும்பங்கள் அரசாங்கத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தி வந்துள்ளதோடு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர்களுக்கு உறுதிமொழியும் வழங்கப்பட்டுள்ளது.

(1) தற்போதைய அரசாங்கம் கடமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட வேளையில், கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுடைய பெயர்களும், அவ்வாறு அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களும் பகிரங்கப்படுத்தப்படும், அத்துடன்

(2) தற்பொழுது கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்களும், அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடங்களும் பகிரங்கப்படுத்தப்படும், அத்துடன்,

# கொக்கேயின் பிரச்சினை சதொசவுக்கு சம்பந்தமில்லை –அமைச்சர் ரிசாத் பதியுதீன்

(கொழும்பு)

சதொச கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் சீனி (கன்டேயினா்) இல் இருந்ததாக கூறப்படும் கொக்கேயினுக்கும் சதொச நிறுவனத்திற்கும் எதுவித சம்பந்தமும் இல்லை என வா்த்தக வாணிப அமைச்சா் ரிசாட் பதியுதீன் தெரிவித்துள்ளாா்.

அவா் மேலும் தெரிவித்ததாவது,

தற்போது சம்பவம் சம்பந்தமாக கைது செய்யப்பட்டுள்ள அனைவரும் சதொச நிறுவனத்துடன் தொடா்புடையவா்கள் இல்லை என கூறிய அமைச்சா், தனது அமைச்சின் வளா்ச்சியை பொறுக்க முடியாதவா்களே இவ்வாறு கூறுவதாக தெரிவித்தாா். (மு)

(3)கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள சில ஆட்களைத் தடுத்து வைத்துள்ளதாகக் கூறப்படும் இரகசியத் தடுப்பு முகாம்கள் பற்றிய தகவல்களை அறிந்து வைத்துள்ளதாகக் கூறப்படும் காணாமல்போன ஆட்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு அத்தகைய தடுப்பு முகாம்களைப் பார்வையிடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும், அத்துடன்

(4)கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் காணாமல்போன ஆட்களின் அலுவலகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும், அப்பொழுது மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு படிமுறைச் செயற்பாடுகளூடாக, காணாமல்போன ஆட்களுடைய குடும்பங்கள் எதிர்நோக்கும் வேதனைகளை ஏற்கத்தக்க வகையில் ஒரு முடிவுக்குக் கொண்டுவரக்கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்படும்.

உண்மையான தகவல்கள் கிடைக்காமையினால் ஏற்படும் நிச்சயமற்ற நிலைமை காரணமாக இக்குடும்பங்கள் தற்பொழுது முகங்கொடுக்கும் மன உளைச்சல்கள் இச் செயல்முறைகள் மூலம் முடிவுக்கு வரும்.

அதேவேளை, 2016ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி ஆக்கப்பட்ட காணாமல்போன ஆட்கள்அலுவலகச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு அவசியமான பிரகடனம் செய்யப்பட்டுள்ளதன் மூலம் மேலே (4)ல் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் நிறைவேற்றப்படுவதற்கான ஆரம்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, மேலே (1), (2),(3)ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறுப்புக்கள் நிறைவேற்றப்படவில்லை.

அதேவேளை, மேலே (1), (2), (3)ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவது, நடைபெறுகின்ற எல்லாச் செயற்பாடுகளிலும் காணாமல் போன ஆட்களின் குடும்பங்களின் நம்பிக்கையை ஏற்படுத்துவதற்கு அடிப்படையானவையென்பதோடு,

இது தொடர்பான சகல செயற்பாடுகளும் வெற்றியடைவதற்கும் உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் மிகவும் அவசியமானவையாகும்.

காணாமல்போன ஆட்களின் குடும்பங்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதே இத்தகைய சகல செயல் முறைகளின் வெற்றிக்கும், உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அடிப்படையானவை யென்பது மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது.

காணாமல்போன ஆட்கள் அலுவலகச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக ஆரம்பத்தில் அரசாங்கம் தன்னிடம் உள்ள தகவல்களை வெளியிடுவதற்கான இயலுமையைக் கொண்டிருப்பதனால் அவற்றை வெளியிட வேண்டியது முதற்படியாக அமையும்.

எனவே, அரசாங்கம் அவசர நடவடிக்கையாக மேலே (1), (2), (3)ல் குறிப்பிடப்பட்டுள்ள அதன் பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டும், அத்துடன் மேலே (4)ல் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பான செயற்பாடுகளைத் தாமதமின்றி ஆரம்பிக்க வேண்டும் என்பதே இப்பிரேரணை மூலம் கோரப்படுவது என எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார். (மு-11)

## சிங்களவரின்...

ன் பின்னர் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமலிருப்பதை பார்த்துக் கொள்ள வேண்டும்.

பொலிஸ் பணி எவ்வளவு கடினமானது என்பதை இதனூடாக அறியமுடிகின்றது. எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்பது தெரியாது.

அவர்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் முதலமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, தமக்கு பாதுகாப்பு வழங்கும் அனைவரும் சிங்கள இனத்தவர்களே என குறிப்பிட்ட அவர்,

தமிழர்கள் இரண்டு பேர் பணிக்கு வந்ததாகவும், அவர்களின் பணியில் விருப்பமில்லாத காரணத்தால், அவர்களை வெளியேற்றியதாகவும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

சிங்களவர்களின் பணியில் நம்பிக்கை இருப்பதால், அவர்களை பணியில் வைத்திருப்பதாக வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். (மு-11)

## பல்கலை விரிவுரை...

தலைப் புலிகள் இயக்கத்திற்கு கொண்டு சென்ற குற்றச்சாட்டு தொடர்பில் கணேசசுந்தரம் கண்ணதாஸ் (வயது-50) என்ற முன்னாள் போராளிக்கு எதிராக 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09ஆம் திகதி கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் குறித்த பெண்ணின் தந்தையால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக 2015ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி கொழும்பு பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் குறித்த எதிரிக்கு எதிராக 2016ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் திகதி குற்றப் பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது.

2016 மே மாதத்தில் இருந்து குறித்த எதிரிக்கு எதிரான வழக்கு விசாரணைகள் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் இடம்பெற்று வந்தது.

வழக்கு விசாரணைகளின் போது கடத்தப்பட்ட விஜயபாலன் மஞ்சுளா என்ற பெண்ணினுடைய தந்தை நாகரத்தினம் விஜயபாலன், தாய் விஜயபாலன் சாந்திமலர் சாட்சியமளித்திருந்தனர். இதன்போது தனது மகளை குறிப்பிட்ட எதிரி வீட்டில் இருந்து இழுத்துச் சென்றதாக சாட்சியமளித்தார். அத்துடன் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் உத்தியோகத்தர்களும் சாட்சியமளித்தனர். அதன் பின் எதிரி நீதிமன்றிலே சாட்சியமளித்திருந்தார்.

எதிரி சாட்சியமளிக்கும் போது, தான் தற்போது யாழ்.பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக கடமையாற்றி வருவதாகவும், தான் ஏற்கெனவே விசேட புனர்வாழ்வு அளிக்கப்பட்ட நபர் எனவும் தெரிவித்திருந்தார்.

எதிர்த்தரப்பு விவாதம் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் தீர்ப்புக்காக இம் மாதம் 17ஆம் திகதி வழக்கு நியமிக்கப்பட்டு அன்றைய தினம் வழக்கு தீர்ப்புக்காக அழைக்கப்பட்டு எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு எதிரியை குற்றவாளி எனக் கண்டு வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தீர்ப்பு வழங்கியதோடு, தண்டனைத் தீர்ப்புக்காக நேற்றைய தினம் வழக்கு நியமிக்கப்பட்டு இருந்தது.

இந்த எதிரி ஏற்கெனவே புனர்வாழ்வு பெற்றிருந்தாலும் எதிரிக்கு எதிராக சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கு சட்டத்தின் அடிப்படையில் தண்டனை வழங்க வேண்டும் எனக் கூறிய நீதிபதி, இந்த எதிரிக்கு ஆயுள்கால சிறைத்தண்டனை வழங்கி தீர்ப்பளித்தார்.

இதேவேளை, இந்த வழக்கு விசாரணைகளின் போது கடத்தப்பட்ட குறித்த பெண் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் செயற்பாடுகளின் போது மரணமடைந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது. வழக்கு விசாரணைகளை அரச சட்டவாதி மாதினி விக்னேஸ்வரன் நெறிப்படுத்தியிருந்தார். (மு -250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மோ.சைக்கிள்...



மணியளவில் இடம்பெற்றுள்ளது.

உரும்பிராய் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 7-இல் கல்வி கற்கும் விஜிதன் (வயது12) என்ற மாணவனே விபத்தில் சிக்கி படுகாயமடைந்துள்ளார்.

நேற்று நண்பகல் பாடசாலை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் உரும்பிராய் சந்திக்கு அண்மையான வீதியில் யாழ்ப்பாணத்திலிருந்து உரும்பிராய் நோக்கி வேகமாக மோட்டார் சைக்கிள் பயணித்துக் கொண்டிருந்த போது சடுதியாக குறித்த மாணவன் வீதியை கடந்த போதே இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிள் சில்லினுள் அகப்பட்ட மாணவன் தலையிலும் காலிலும் படுகாயமடைந்துள்ளார். உடனடியா மீட்கப்பட்ட மாணவன் யாழ். போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டதை தொடர்ந்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன், விபத்தில் சிக்கிய மோட்டார் சைக்கிளையும் பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றுள்ளனர்.

சிறுவர்கள் பாடசாலை சென்று வரும் போது வீதி விபத்துக்கள் தொடர்பில் பாடசாலையிலும் பெற்றோரும் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்றும் விபத்து இடம் பெற்ற பகுதியில் இருந்தவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (மு-87)

### உயிரிழந்த பொலி...

இந்தநிலையில் தனது சக ஊழியர் என்ற வகையில், உயிரிழந்த மெய்ப்பாதுகாவலரின் இறுதிக் கிரியையில் கலந்து கொள்வதற்கு காயமடைந்த மெய்ப்பாதுகாவலர் விருப்பம் வெளியிட்டார்.

இதனையடுத்து, நீதிபதி இளஞ்செழியன் மற்றும் வைத்தியர்கள், பொலிஸார் ஆகியோரின் ஆலோசனைக்கு அமைய சக ஊழியரின் இறுதிக் கிரியையில் காயத்திற்கு இலக்கான மெய்ப்பாதுகாவலரும் கலந்து கொள்ளவுள்ளார். (மு-11)

### ஜனாதிபதி - பிரத...

நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவாகி 40 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து கொண்டாடியுள்ளார்.

அமைச்சரவையில் நேற்று பிற்பகல் குறித்த நிகழ்வு நடைபெற்றுள்ளது. இதன்போது பிரதமரும், ஜனாதிபதியும் இணைந்து கேக் வெட்டி பரிமாறிக் கொண்டுள்ளனர்.

இதில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மு-11)

### அதிகாரத்தை பகி...

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட அந்த கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன அரசாங்கத்திற்குள் இருக்கும் இனவாதிகளுக்கு எதிராகவும் போராட்டங்களை மேற்கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன மேலும் தெரிவிக்கையில்,

இனவாதத்திற்கு தான் எதிரானவன் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னிடம் தெரிவித்தார். என்னுடைய அரசாங்கத்தின் அமைச்சரவையில் இனவாதம் தலைதூக்கினாலும் அதற்கு எதிராக போராடுங்கள் என அவர் கூறினார். அவை எதற்கும் அவர் எதிரானவரல்ல எனத் தெரிவித்துள்ளார்.

விஜயதாச ராஜபக்ஷவின் கருத்துக்கள் தொடர்பில் கேட்டபோது அது தொடர்பில் கருத்திற்கொள்ள வேண்டாம். உங்கள் போராட்டத்தை முன்கொண்டு செல்லுங்கள் எனக் குறிப்பிட்டார். இனவாதத்தை வெற்றிகொண்டு கொண்டுவரப்பட்ட சமாதானம் இது என அவர் குறிப்பிட்டார்.

சைட்டம் பிரச்சினையை அடிப்படையாக வைத்து அல்லது வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தி யாராவது இனவாதத்தை தூண்டினால் அதற்கெதிராகவும் போராட வேண்டுமென அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் அதிகாரங்களை நாடாளுமன்றத்திற்கு வழங்கி அதிகாரத்தை பகிர்ந்து தமிழ் -சிங்கள -முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து பயணிக்கக்கூடிய யாப்பு ஒன்றை உருவாக்க. ஒன்றிணையுமாறு அவர் எங்களிடம் கேட்டார்.

நாட்டில் புதிய யாப்பு ஒன்றினை உருவாக்கி ஜனநாயகத்தை ஏற்படுத்த வேண்டிய போராட்டம் இன்னும் முடியவில்லை அதனை முன்கொண்டுச் செல்ல வேண்டும் என்றார்.(மு-11)

### பிரதான சந்தேக...

அவரை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் நல்லூர் பின் வீதியில் ஒரு குழுவினர் நின்றிருந்தாகவும், அப்போது கோவில் வீதி வழியாக யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தனது மெய்ப்பாதுகாவலர் சகிதம் தனது காரில் வந்துள்ளார்.

நீதிபதி செல்வதற்கு வீதி போக்குவரத்தை ஒழுங்கு செய்வதற்காக நீதிபதியின் மெய்ப்பாதுகாவலர்கள் குழுவினர் நின்றிருந்த இடத்துக்கு அண்மையில் சென்று போக்குவரத்துக்கு இடையூறாக இருந்தவர்களை அப்புறப்படுத்த முற்பட்ட போது, அங்கு நின்ற ஒருவர் பொலிஸாருடன் முரண்பட்டு பின்னர் பொலிஸாரின் துப்பாக்கியினை பறித்துள்ளார்.

அவரிடம் இருந்து துப்பாக்கியை பறிப்பதற்கு நீதிபதியின் ஏனைய மெய்ப்பாதுகாவலர்களும் நீதிபதியும் அந்த இடத்துக்கு சென்று துப்பாக்கியை பறிக்க முற்பட்ட போது குறித்த நபர் சரமாரியாக துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளார். பின்னரே குறித்த இடத்தில் இருந்து தப்பிச்சென்றுள்ளார்.

இந்த துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் நீதிபதி மயிரிழையில் உயிர் தப்பியதுடன் நீதிபதியின் மெய்ப்பாதுகாவலரான இரு பொலிஸார் காயமடைந்து அதில் ஒருவர் உயிரிழந்திருந்தார். இந்த சம்பவம் யாழ் குடாநாட்டில் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

சம்பவதினத்துக்கு அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை குறித்த சம்பவம் தொடர்பாக அன்றைய தினம் அப்பகுதியில் தகராற்றில் ஈடுபட்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். சூத்திரதாரி தலைமறைவாகியிருந்தார்.

இந்த நிலையில் குறித்த துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட நபர் நேற்றைய தினம் யாழ் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார். இவர் சம்பவ தினத்தன்று தனது மச்சான்களுடன் மது அருந்திவிட்டு சிறிய பிரச்சினை ஒன்றை பேசியவாறு நல்லூர் வீதியில் நின்றதாகவும், எதிரே வரும் பொலிஸாரின் துப்பாக்கியை முடிந்தால் பறிக்குமாறு தனது மச்சான் தன்னிடம் சவால் விட்டிருந்தார்.

அப்போது அங்கு வந்த பொலிஸாருக்கும் தனக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டதாகவும், அவரிடம் இருந்த துப்பாக்கியை பறித்த போது மேலும் தகராறு ஏற்பட்டதால் தான் சுட்டதாகவும் மச்சான் (ஏற்கெனவே கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்) சொன்னதால்தான் தான் சுட்டேன் என்றும் கூறியுள்ளார். அதாவது பொலிஸை மறித்து சுடு பார்ப்போம் என்று மச்சான் அவரிடம் சவால் விடுத்துள்ளார். சவாலை நிறைவேற்றவே துப்பாக்கியை பறித்து சுட்டார்.

அங்கிருந்து சென்று கல்வியங்காட்டு பகுதியில் மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு கல்வியங்காட்டு பகுதியில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியதாகவும் அவர்கள் அடைக்கலம் கொடுக்க மறுத்ததால் யாழ்பாணத்தில் உள்ள சவக்காலை ஒன்றில் தலைமறைவாகி இருந்து விட்டு சாவகச்சேரியில் உள்ள உறவினர் வீட்டுக்கு சென்றுள்ளார்.

அங்கும் அவருக்கு அடைக்கலம் அளிக்க உறவினர் மறுத்ததுடன், இவருக்கு ஏற்கெனவே இருந்த கொலை வழக்கின் பிணையாளி கேட்டுக்கொண்டதற்கு இணங்க இவர் பொலிஸில் சரணடைந்ததாகவும் பொலிஸாரின் வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளதாக தெரிய வருகிறது.

இவரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் நேற்று மாலை யாழ் நீதவான் நீதிமன்ற நீதவானின் வாசஸ்தலத்தில் முற்படுத்தியபோது, நீதவான் அவரை ஆகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.(மு-4-9)

### குளவி...

சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன் விழா மண்டப கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள இலங்கை வங்கிக்கு சென்ற வாடிக்கையாளர்களே குளவிக் கொட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளனர்.

நேற்று மதியம் 3 மணியளவில் கட்டடத்தின் மேல் பகுதியில் உள்ள பாரிய குளவிக்கூடு கலைந்ததினாலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதனால் காயமடைந்த வங்கிக்கு வருகைதந்த 12பேர் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.(மு-89)

DMI - JAFFNA
A/L - 17 Batch
Agricultural Science (08)
பரீட்சை நோக்கிய
வழிகாட்டல் செயலமர்வு
29.07,30.07 - பிற்பகல் 1.00 - 3.00
V.SASIKUMAR - ஆசிரியர்
(C-9163)

விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
(C-9158)
UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
♦யாழ்ப்பாணம் ♦கிளிநொச்சி ♦நெல்லியடி
♦பருத்தித்துறை ♦வல்வெட்டித்துறை ♦சாவகச்சேரி

A/L வரலாறு- 2017
மாபெரும் கருத்தரங்கு
இடம்:D.M.I
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
காலம்: 29.07.2017 சனி
30.07.2017 ஞாயிறு
நேரம்: காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை
(C-9148)
வளவாளர்கள்:
M. பத்மன் B.A (Hons) His.Spl
M.A. (History)
S.சுஜிகரன் B.A. (SL)

Win Repair
A/C களும்,
சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும்
உங்கள் வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு - 077 9648942
(9924)

வேலையாட்கள் தேவை
நெல்லியடியில் உள்ள பிரபல்ய புடவையகத்திற்கு ஆண்கள், பெண்கள் இருபாலாரும் தேவை. பெண்கள் வடமராட்சி பகுதியை சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆண்களுக்கு தங்குமிடவசதி செய்து கொடுக்கப்படும்.
T.P : 0777 149 459
(C-9156)

விற்பனையாளர் தேவை
யாழ்.நகரில் உள்ள புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் கணனி அனுபவமுள்ள பில் கிளாக் உடன்தேவை. (9926)
தொடர்பு: 0775269182, 0763283763

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
(C-9160)
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress

பங்குச்சந்தை முதலீட்டு ஆர்வலர்களுக்கான
அடிப்படைக் கருத்தரங்கு
CSE COLOMBO STOCK EXCHANGE

இடம் : CSE யாழ்.கிளையில்
காலம் : 28.07.2017 வெள்ளிக்கிழமை
4.30 - 5.30 PM
தொடர்பு : 077 782 2014
147, 2/3, கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.

ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
➢ அங்கிகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.www.ambafrance-lk.org
(9902)
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.07.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.